பக்கங்கள்: பதினாறு + VI = 22

Registered as a newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 26 செவ்வாய்க்கிழமை (10.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:104

# வன்னி வாழ் தமிழ் மக்களை பேரழிவில் இருந்து காப்பாற்றுக!

## கூட்டமைப்பு எம்.பிக்கள் மீண்டும் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 10

வன்னியில் ஏற்பட்டுள்ள பாரிய மனிதாபிமானப் பேரழிவிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக இலங்கையில் யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை. சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இவ்வருடம் மாத்திரம் வன்னியிலுள்ள பாதுகாப்பு வலயங்களில் 2 ஆயிரத்து 150 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இப்பகுதி மக்களுக்கு போதியளவு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பகுதிக்கு வந்த பெண் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்

கொழும்பு, மார்ச் 10

புதுக்குடியிருப்புக்கு கிழக்குப் பகுதியில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தவர்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார் என படைத்தரப்பு (16 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே ▶

## புதுக்குடியிருப்பு, சாலைப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல்

### முறியடித்து விட்டதாகக் கூறுகின்றது இராணுவம்

கொழும்பு, மார்ச் 10

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மற்றும் சாலைப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் அணிகள் ஊடுருவித் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பாதிப்புற்ற மக்களுக்கு சிகிச்சை அளிக்க இந்தியாவிலிருந்து புறப்பட்டது 50 பேர் கொண்ட வைத்தியக் குழு

கொழும்பு, மார்ச் 10

வன்னியில் காயமுற்ற மற்றும் நோயுற்ற மக்களுக்கு, சிகிச்சை அளிப்பதற்கென 50 பேர் கொண்ட இந்திய வைத்தியக்குழு நேற்று இந்தியாவிலிருந்து புறப்பட்டது என்று பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இன்று கொழும்பை வந்தடையும் அக்குழுவில் டாக்டர்கள், தாதிகள், மருத்துவ (16 ஆம் பக்கம் பார்க்க)

## வில்பத்து சரணாலயம் நேற்றுச் சுற்றிவளைப்பு

கொழும்பு, மார்ச், 10

வில்பத்து சரணாலயப் பகுதியில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நேற்று சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர்.

வில்பத்துக் காட்டுப் பகுதிக்குள் விடுதலைப்புலிகள் 50 பேர் ஊடுருவியுள் ளனர் என்று கிடைத்த தகவலை அடுத்தே இச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

## திருமலையிலிருந்து முல்லைத்தீவு சென்ற உணவுக் கப்பல் மீது நேற்றுத் தாக்குதல்!

### புலிகள் நடத்தியதாக அரச ஊடக நிலையம் தகவல்

கொழும்பு, மார்ச் 10

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவுக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் சென்ற கப்பல் மீது விடுதலைப்புலி கள் கடும் ஷெல் தாக்குதலை மேற் கொண்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலையிலிருந்து அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதிக்குச் சென்ற எம்.வி.பின்டன் எனும் கப்பல் விடுதலைப்புலிகளின் கடும் ஷெல் தாக்குதலுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய நல்லிணக்க அமைச்சரானார் கருணா

கொழும்பு, மார்ச் 10

தேசிய ஒருமைப்பாடு மற்றும்நல்லிணக்க அமைச்சராக நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

அலரி மாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக இணைந்து கொண்ட அவர் மாலையில் இடம் பெற்ற நிகழ்வில் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (16 ஆம் பக்கம்

## கப்பலுக்கு அருகில் ஷெல்கள் வந்து வீழ்ந்தன அதன் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை

### செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பேச்சாளர் விவரிப்பு

கொழும்பு, மார்ச் 10

முல்லைத்தீவுக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடி பறக்க விடப்பட்ட கப்பலுக்கு அருகாமையில் ஷெல்கள் வந்து வீழ்ந்தன. ஆனால் கப்பல் மீது அவை விழவில்லை- என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதையூடாக 22 லொறிகளில் உணவுப்பொருள்கள் நாவற்குழி வந்து சேரும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

குடாநாட்டு மக்களுக்கு விநியோகிப்பதற்கான நிவாரண உணவுப் பொருள்களுடன் 22 லொறிகள் ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்தை இன்று வந்தடைய உள்ளன.

இத்தகவலை யாழ் அரச அதிபர் கே.கணேஸ் நேற்றுத் தெரிவித்தார்.

நிவாரணப் பொருள்கள் 20 லொறிகளிலும் வேறு பொருள்கள் இரண்டு லொறிகளிலும் கொழும்பில் இருந்து எடுத்துவரப் படுகின்றன.

இந்த லொறிகள் வவுனியாவில் நேற்று இரவுதரித்து நின்றன. அந்த லொறிகள் இன்று ஏ-9பாதையூடாக யாழ்ப்பாணம் வந்து சேரும். அந்த லொறிகளில் எடுத்து வரப்படும் பொருள்கள் நாவற்குழி உணவுக்களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்படும் - என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

2006ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி (16 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் இன்று மாலை 7 மணிவரை மழை தொடரும்சாத்தியம் உண்டென அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

குடாநாட்டில் பரவலாக நேற்றுக் காலை முதல் பெய்து வரும் மழை இன்று மாலை 7மணிவரை விட்டுவிட்டுத் தொடரும் சாத்தியம் இருப்பதாக திருநெல்வேலியில் உள்ள வானிலை அவதானநிலையம் நேற்று மாலை தெரிவித்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதில் இந்திய அரசும் தமிழக அரசும் படுதோல்வி!

### அ.தி.மு.க. உண்ணாவிரதத்தில் ஜெயலலிதா

சென்னை, மார்ச் 10

இலங்கைத்தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய, மாநில அரசுகள் ஒன்றுமே அக்கறையுடன் செயற்படவில்லை. தமிழர்களைப் பாதுகாக்கும் விடயத்தில் படுதோல்வி அடைந்துள்ளன. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய, மாநில அரசுகளின் செயற்பாடுகளைக் கண்டு தமிழக மக்கள் கொதித்துப் (15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நீங்காத நினைவில்...
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 28 ★ 11 ★ 1952



விண்ணில்: 21 ★ 01 ★ 2008

**அமரர் காசிப்பிள்ளை சோதிராஜா**
திதி: சதுர்த்தசி

அன்பால் வழி நடத்தி வளமாய் வாழ வழி வகுத்தவரே
விண்ணில் உறைந்து ஓராண்டு ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

306, கண்டி வீதி,
அரியாலை

குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அங்கு திரும்பிச் செல்லும் நாள் தொலைவில் இல்லை

## மீலாத் தின வாழ்த்தில் ஜனாதிபதி



கொழும்பு, மார்ச்10

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தங்களது தாய் நிலத்துக்கு"திரும்பிச் சென்று ஏலவே இருந்த அமைதி நிறைந்த"வாழ்க்கையை மீள ஆரம்பிக்கும் நாள் தொலைவில் இல்லை.

இவ்வாறு தமது மீலாத் தின வாழ்த்தில் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவர் தமது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கைவாழ் முஸ்லிம்கள் உல கெங்கிலுமுள்ள தமது முஸ்லிம் சகோதரர்களுடன் இணைந்து இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை நினைவுகூருவதை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முஸ்லிம்களின் மிகமுக்கியமான நாளாகக் கருதப்படும் இத்தினம், ஐக் கியத்தையும் சமாதானத்தையும் வலியுறுத்தி மிக முக்கியமான ஒரு சிறந்த சமய கலாசார பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பி ஆய்வு மற்றும் அறிவியல் சிந்தனைகளின் அபிவிருத்திக்கு வித்திட்ட முஹம்மது (ஸல்) அவர்களுடைய போதனைகளைக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை ஏற்படுத்தி வடமாகாணத்தையும் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காக மிக வேகமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் சூழலில் இலங்கை முஸ்லிம்கள் இவ்வருட மீலாத் விழாவை மிகுந்த மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றனர்.

இவ்விரண்டு மாகாணங்களில் இருந்தும் முஸ்லிம்களை இனச் சுத்திகரிப்புச் செய்து அங்கு ஒரு தனியான இன ஆட்சியை ஏற்படுத்துவதையே பயங்கரவாதம் தனது இலக்காகக் கொண்டிருந்தது.

இந்த விசேட தினத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவி எமது மக்கள் மத்தியில் புரிந்துணர்வும் சகிப்புத் தன்மையும் ஏற்படவேண்டும் என்ற அவர்களது பிரார்த்தனைகளில் நானும் இணைந்து கொள்கிறேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
சிரேஷ்ட இசைத்துறை விரிவுரையாளர்
திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா அவர்களின் தயாரிப்பில்

## 'பட்டாம் பூச்சிகள்'
(அபிநயப் பாடல்)

## ஒலி, ஒளி இறுவட்டு, நூல் வெளியீட்டு விழா

**காலம்:** இன்று (10.03.2009) செவ்வாய்கிழமை காலை 9 மணி
**இடம்:** யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
**தலைவர்:** திரு.எஸ்.கே.யோகநாதன் (பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
**பிரதமவிருந்தினர்:** பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
**சிறப்புவிருந்தினர்:** திரு.ப. விக்கினேஸ்வரன் (கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்)
**வாழ்த்துரை:** திருமதி ஜெயமலர் தியாகலிங்கம் (உபபீடாதிபதி,கல்வியும்தரமேம்பாடும்-யா.தே.க.க.)
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் (அதிபர், இராமநாதன்கல்லூரி, சுன்னாகம்)
**வெளியீட்டுரை:** பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
**மதிப்பீட்டுரை:** செல்வி பாக்கியலட்சுமி நடராஜா (தலைவர்,இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
**தொகுப்புரை:** திரு.கே.ஆர்.கமலநாதன் (காப்பாளர்,நுண்கலைமன்றம், யா.தே.க.க.)
**ஏற்புரை:** திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா (சிரேஷ்ட விரிவுரையாளர், யா.தே.க.க.)
**முதற்பிரதிபெறுபவர்:** வைத்திய கலாநிதி கிருபானந்தராணி ஸ்கந்தராஜா
(யாழ்.போதனா வைத்தியசாலை)

**கௌரவப் பிரதிகள் பெறுவோர்:**
1)வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா (சிரேஷ்ட உறுப்பினர், ஆலோசனைச் சபை,யா.தே.க.க.)
2) செல்வி நிர்மலா நல்லையா (உப பீடாதிபதி, நிதி நிர்வாகம், யா.தே.க.க.)
3) திருமதி செல்வமலர் சிவபாதம் (உப பீடாதிபதி, தொடருறுகல்வி, யா.தே.க.க)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

நுண்கலை மன்றம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

### சமாதான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான நிறுவனத்தால் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இடையே நடத்தப்படும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறுமென செயற்றிட்ட இணைப்பாளர் செல்வி யோ. சோபனா தெரிவித்துள்ளார்.

நாளை புத்தூர் ஸ்ரீ பஞ்சசீக வித்தியாலயத்திலும் நாளை மறுநாள் அச்சுவேலி தோப்பு அருள் நந்தி வித்தியாலயத்திலும் சமாதானக் கல்வி கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இக் கருத்தரங்குகள் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2மணிவரை இரு மணி நேரங்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### கந்தசாமி சிவசூரியலிங்கம்(சூரி)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் (BONDY)யை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவசூரியலிங்கம் 04.03.2009 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற இராமு கந்தசாமி -பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் குமரேசு - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜீவரத்தினத்தின் அன்புக் கணவரும் ஸ்ரனிஜீவா (Doctor - Paris), சிவலோஜனி (Doctor - Paris)ஜீவலோஜிகா(Doctor - Paris)சிவலோஜிகா (University - Paris) ஆகியோரின் அன்புத் தந்தையும் மல்லிகா, சறோஜினி தேவி, உதயகுமார்(உரிமையாளர் Avant Scene Cafe- Pasta Ritci Restaurant) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவபாதம், தெய்வேந்திரம், சிவசோதி,ஜெயக்கொடி, சமரக்கொடி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தம்பிராசா, பரமகுரு, நடராசா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 9, Allee des Fougeres, 93140 Bondy - தொலைபேசி: 0148501318 என்னும் முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(11.03.2009)புதன் கிழமை காலை 9 மணிக்கு 76, rue Henri Varagnat, 93140 Bondy என்னும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சரவணமுத்து வசந்தகுமார் -0619501659,
சரவணமுத்து சிவகுமார் -0617502973,

தொடர்புகளுக்கு:
சமரக்கொடி-0603094716
உதயகுமார் -0603411215

அச்சுவேலி வடக்கில் அஞ்சலி நிகழ்வுகள் தங்கவேலு மல்லிகாதேவியின் இல்லத்தில்நடைபெறும்.

தகவல்:
திருமதி
சறோஜினிதேவி அருமைத்துரை
(சகோதரி).

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

## நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | முதலாம் ஆண்டு | 60 ஆம் நாள் | 31 ஆம் நாள் |
|---|---|---|---|
|  |  |  |  |
| கோவிந்தபிள்ளை புவனேஸ்வரன் | கோவிந்தபிள்ளை சிவராசா | கோவிந்தபிள்ளை சக்திவேல் | கோவிந்தபிள்ளை தங்கம்மா |
| மண்ணில்; 13.07.1948 | மண்ணில்; 09.03.1956 | மண்ணில்; 09.01.1962 | மண்ணில்; 05.03.1927 |
| விண்ணில்; 07.02.2008 | விண்ணில்; 30.03.2008 | விண்ணில்; 12.01.2009 | விண்ணில்; 08.02.2009 |

கருமுகில் கூட்டத்தைக் கலைத்ததோ புயல்
கண்ணாடி பட்டுச் சிதைந்ததோ நும்வாழ்வு
தேன் கூட்டில் கல்லெறி பட்டதோ
தேம்பிக் கதிகலங்கிடச் செய்ததே நம்மை
சொல்லி அழ வார்த்தை இல்லை
சொல்லி யாறிட வகையும் இல்லை
தங்க மனம் கொண்ட நீவிர் நால்வீரும்
தரியாதே ஒருவர் பின் ஒருவராய் விண்ணுல கடைந்திட
வரலாறானதே உங்கள் வாழ்வு
கோடிகாலம் தான் கழிந்தாலும் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்ந்திடுவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இந்துக் கல்லூரி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தங்கள்
நால்வரினதும்
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

### குருநகருக்கான நீர்விநியோகம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

குருநகர்த் தாங்கிக்கு நீர் ஏற்றும் 6'' குழாய் பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உடைந்துள்ளதனால் குருநகர் பகுதிக்கான நீர்விநியோகம் நேற்று முதல் தடைப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் யாவும் முடிவுற்றதும் நீர்விநியோகம் வழமைக்குத் திரும்பும் என மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

(1)

### நவீன கற்பித்தல் தொடர்பாக காரைநகரில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச்10

காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் முன்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவன பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் முன்பள்ளி சிறார்களுக்கான நவீன கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரிய வாண்மை நிறுவக விரிவுரையாளர்கள் விரிவுரைகளை நிகழ்த்த உள்ளனர்.

இதேவேளை, இன்றைய தினம் காரைநகர் பிரதேசத்தில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கான மாலை நேர ஆங்கில வகுப்புகள் இந்த அமைப்பினால் ஆரம்பிக்கப்பட உள்ளது.

(1-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கருத்துக் கணிப்புக் கோரும் தீர்மானமும் அதன் பால் எழும் 3 கேள்விகளும்

உலகப் பேரரசுகளில் முன்னணி வகிக்கும் நாடுகளில் ஒன்றான அமெரிக்காவில் இப்போது ஆட்சியில் அமர்ந்திருப்பது ஜனநாயகக் கட்சி. அந்நாட்டின் ஆட்சித் தலைவனாக- ஜனாதிபதியாக- ஆட்சி பீடம் ஏறியிருப்பவர் - அங்கு வாழும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பராக் ஒபாமா.

அமெரிக்காவின் நீண்டகால அரசியல், பொருளாதார, சர்வதேச உறவுகள் மற்றும் பல துறைகளில் ஒபாமா திருப்புமுனையான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்ற எதிர்பார்ப்பு உலகளாவிய ரீதியில் நிலவுகிறது.

அமெரிக்கா ஏகாதிபத்திய நாடு. ஆகையால் ஒபாமாவும் அந்தக் குட்டையில் ஊறிய மட்டைகளில் ஒன்றே என்று எதிர்மறையாகப் பார்ப்போரும் உள். அதுவும் தப்பென்று இல்லை.

ஒபாமாவுக்கு உள்ள பதவிசார் அனுபவம் குறைவென்பதாலும், அவர் தமது செயற்பாடுகளைத் தொடங்கி இரண்டு மாதம் கூட நிறைவு பெறவில்லை என்பதாலும் ஒபாமாவின் அரசியல் மகத்துவமும் மாண்பும் சாணக்கியமும் எத்தகையன என்பதனை இப்போது எடைபோட முடியாது.

இருப்பினும், அவர் பல பிரச்சினைகள்ள அல்லது விவகாரங்களை புதிய சகாப்தத்திற்கு ஏற்றால் போன்று சாதுரியமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சார்பாகவும் கையாண்டு நீதி செய்வார் என்ற எதிர்பார்ப்பு பரந்தளவில், உலகளாவிய ரீதியில் உண்டு என்பது மறத்தற்குரியது அன்று.

அந்த வகையில், கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக, தமது அடிப்படை அரசியல் உரிமைகளுடன், தங்களுக்குள்ள பிறப்புரிமைகளை அனுபவித்து சுதந்திர மனிதர்களாக வாழ வேண்டும் என்ற இலக்கை அடைய முடியாமல் அல்லற்படும் ஈழத்தமிழர்களும் ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் தமக்குச் சாதகமாக ஏதாவது நடைபெறுமா என்று எதிர்பார்ப்பது இயல்பே.

அதன் குறியீடாக, அமெரிக்காவின் சாந்தா கிளாரா மாகாணத்தின் (County) ஜனநாயகக் கட்சி மத்திய குழு நிறைவேற்றி உள்ள தீர்மானத்தை நோக்குவதில் தப்பில்லை. குறிப்பிட்ட மத்திய குழுவில் அங்கம் வகிக்கும் ஈழத்தமிழ்ப் பிரமுகர்கள் இதன் பின்னணியில் நின்று உழைத்திருப்பர் என்பதும் நிச்சயம்.

இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்கள் தமக்குரிய முழுமையான சுதந்திரத்தையா அல்லது சுயாட்சியையா விரும்புகிறார்கள் என்பதை அறியும் பொருட்டு தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் கருத்துக் கணிப்பொன்றை ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பில் நடத்துமாறு கேட்டுக் கொள்கிறது அந்தத் தீர்மானம்.

ஆட்சியில் உள்ள ஜனநாயகக் கட்சியின் முக்கிய கொள்கைத் திட்டமாக - இலங்கை இன விவகாரத்தை கையாளும் அடிப்படையாக - இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ஏனைய மாகாணங்களில் உள்ள ஜனநாயகக் கட்சியின் மத்திய குழுக்களில் இந்தப் பிரேரணையை நிறைவேற்றினால், அதன் பலன் பெருகும்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அமெரிக்க அரசின் நடவடிக்கைகளை, இந்தத் தீர்மானத்தை அடிப்படையாக, ஆரம்பப் புள்ளியாக, கருவாக வைத்து முன்னெடுத்துச் செல்ல உதவும்; இலகுவாகவும் அமையும். பூரண சுதந்திரத்தையா அல்லது சுயாட்சியையா ஈழத்தமிழர்கள் அவாவி நிற்கின்றனர் என்பதனை அறிவதற்குத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பில், கருத்துக் கணிப்பு நடத்தப்படவேண்டும் என்ற கருப்பொருள் வரவேற்கத்தக்கது.

ஆயினும்...

1977 ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் - பொதுத் தேர்தலில்- தமக்குத் தனியரசு வேண்டும் என்று பெரும்பான்மை வாக்குகளால் தமிழ் மக்கள் தீர்ப்பு வழங்கியிருந்தனர். தமிழ் மக்களின் அந்த ஆணையை மழுங்கடிக்க திட்டம் தீட்டி செயற்படுத்தியவர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா.

தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்து அதனை செயலாக்கக்கூடாது என்ற பேரினவாதத்தின் சிந்தனைக் கருவே இன்றைய இன்னல்களுக்கும், இக்கட்டுகளுக்கும் அத்திபாரம். தமிழ்மக்களின் ஒப்புதல் இன்றி - பங்களிப்பு இன்றி - இயற்றப்பட்டதே பிரிவினைக்கு எதிரான அரசமைப்புச் சட்டம்.

அதன்பின்னர் 1983 இல் நடத்தப்பட்ட இன அழிப்போடு தமிழ்மக்களின் அரசியல் ஆணையை தூக்கி எறியும் அத்தியாயம் ஆரம்பமானது.

ஜே.ஆரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த நிறைவேற்று அதிகாரம்கொண்ட எல்லா ஜனாதிபதிகளும் அதே பாதையில் செயலாற்றி வருகிறார்கள். தமிழ்மக்களின் ஆணை மறந்து போன கதையாகியும் விட்டது!

தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவர்கள் மத்தியில் சுயேச்சையான - ஐ.நாவின் சபையின் கண்காணிப்பில் - கருத்துக் கணிப்பு நடத்துவது என்பதை இலங்கை ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பது முதலாவது கேள்வி.

அமெரிக்க அரசு, இப்போதைய ஆளும் கட்சி, தனது தீர்மானத்தைச் செயலாக்க முன்வருமா என்பது இரண்டாவது வினா.

அமெரிக்காவில் அரசியல் கூட்சி மட்டத்தில் இயற்றப்பட்ட மேற்படி தீர்மானம் நடைமுறைச் சாத்தியமாகும் வாய்ப்புண்டா? என்பது மிகப் பென்னம் பெரிய மூன்றாவது கேள்வி.

# பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும்

## பழிவாங்குவதை அரசும் நிறுத்த வேண்டுமென்கிறது அமெரிக்கா

வாஷிங்ரன்,மார்ச் 10

தமிழீழ விடுதலைப் புலிகளை வன் முறைகளைக் கைவிடும்படியும்



போர் நடைபெறும் பகுதிகளிலிருந்து பொது மக்களை வெளியேற அனுமதிக்கும்படியும் அமெரிக்கா கேட்டுள்ளது.

வாஷிங்தனில் தென்னாசி பத்திரிகையாளர்கள் குழுவொன்றுடன் கலந்துரையாடிய அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி செயலாளர் றிச்சார்ட் பவுச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

தமிழ் பொது மக்கள் அதிகரித்த துன்பங்களை அனுபவித்து வருவதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று கூறிய பவுச்சர் -

இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பு வலயங்களிலிருந்து ஷெல் தாக்குதல் நடத்துவதையும் துப்பாக்கிகளால் சுடுவதையும் புலிகள் நிறுத்த வேண்டும்-என்றும் கூறினார்.

தாக்குதலுக்காகத் திருப்பித் தாக்க வேண்டாம் என்று இலங்கை அரசுக்குக் கூறியுள்ளோம். முதலில் மிக முக்கியமாகப் புலிகள் தாக்குவதை நிறுத்த வேண்டும்.

வன் செயல்களை நிறுத்தும்படி நாம் கேட்டுக் கொள்கிறோம். மக்கள் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளட்டும். பிறகு மோதல்களை எப்படி நிறுத்துவது என்பது பற்றிப் பேசலாம் என்றும் பவுச்சர் கூறினார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோகித போகொல்லாகம அமெரிக்க உதவிச் செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார்.

அப்பாவி பொதுமக்களை விடுவிக்குமாறு புலிகளுக்கு நெருக்குதல் கொடுக்கும்படி போகல்லாகம அமெரிக்க உதவிச் செயலரை கேட்டுக் கொண்டார்.

இதற்குச் சம்மதம் தெரிவித்த அமெரிக்க உதவிச் செயலர், பொது மக்கள் நிலைகளிலிருந்து கொண்டு பாதுகாப்புப் படைகள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியது தமக்குத் தெரியும் என்றும், இலங்கை அரசு மிகுந்த சகிப்புத் தன்மை யைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். (ப)

## அடுத்த பெரும்போகச் செய்கைக்கான விதைநெல் கொள்வனவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச்10

யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் அடுத்த பெரும் போகச் செய்கைக்கென நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளதெனக் மேற்படி சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த பெரும்போக நெற்செய்கைக்கென தற்போது விவசாயிகளிடம் இருந்து விதைநெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது நெல்லின் விலை அதிகரித்துக் காணப்படுவதால் அடுத்த போகத்திற்கான விதை நெல்லின், விலையும் அதிகரித்தே காணப்படுகின்றது.

அடுத்த பெரும்போக நெற்செய்கைக்கென 4 ஆயிரம் புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(50-224)

## இலங்கைக்கான வத்திக்கான் தூதுவராக அதிவண.யோசப் ஸ்பிற்றேறி ஆண்டகை

இலங்கைக்கான புதிய வத்திக்கான் தூதுவராக (பாப்பரசரின் பிரதிநிதியாக) அதி வணக்கத்துக்குரிய யோசப் ஸ்பிற்றேறி ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார்.

பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ற் ஆண்டகை இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

49 வயதான யோசப் ஸ்பிற்றேறி ஆண்டகை மோஸ்ரா நாட்டைச் சேர்ந்தவர். இவர் 1984 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் இதுவரை வத்திக்கான் செயலகத்தில் பணியாற்றியதுடன் பனாமா, ஈராக், மெக்சிக்கோ, வெனிசுவெலா, போர்த்துக்கல், கிறீஸ் ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வத்திக்கான் இராஜதந்திரப் பணியகத்திலும் கடமையாற்றியுள்ளார்.

இதுவரை காலமும் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவராகப் பணியாற்றிய அதி வணக்கத்துக்குரிய மரியோ செனாறியோ ஆண்டகை சிரியாவுக்கான வத்திக்கான் தூதுவராகப் பணியாற்றச் சென்றதையடுத்து அவரின் இடத்துக்கு ஸ்பிற்றேறி ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார். (50)

## கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச்10

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் முதலாவது வருடாந்த பரிசளிப்பு வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

கனடா திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்நிகழ்வினை 'நெய்தலம்' அமைப்பின் இயக்குனர் அருள்திரு அ.பி.ஜெயசேகரம் அடிகள் தலைமை தாங்கி நடத்தவுள்ளார். பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதி கந்தையா தேவராஜாவும், சிறப்பு விருந்தினராக ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் வெளிக்களச் செயற்பாட்டுக் குழுவின் தலைவர் ஞா.றொ.இராஜசிங்கமும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இந் நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரியின் முதுநுண்கலைமாணி நடன மாணவிகளினதும், கல்லூரியின் ஏனைய நடன மாணவிகளதும் நடனங்களும் மற்றும் பாடல், பேச்சு என்பன இடம்பெறவிருக்கின்றன கல்லூரியில் சகல பாடங்களிலும் பயின்று பரீட்சைகளில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர் களுக்குச் சான்றிதழ்கள், பரிசில்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன. கல்லூரி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (50)

## வவுனியா இடைத்தங்கல் முகாம்களுக்கு நுவரெலியாவிலிருந்து சுகாதாரப் பரிசோதகர்கள்

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த பொதுச்சுகாதார பரிசோதகர்கள் கொண்ட குழுவொன்று வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளது.

முல்லைத்தீவிலிருந்து இடம் பெயர்ந்து தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்குச் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவென இவர்கள் அங்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரப் போஷாக்கு நலத்துறை அமைச்சின் பணிப்புரையின் பேரில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 20 பேரே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தற்போது தங்கியுள்ளவர்களுக்கு இந்தக் குழுவினர் சுகாதார சேவைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் விரைவில் விவசாய, மீன்வளக் கற்கை பீடங்கள்

## அச்சுவேலியில் அமைப்பதற்குக் காணி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச்10

யாழ்.தெழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் விவசாய தொழில் நுட்பவியல் பீடம் மீன்வள தொழில் நுட்பவியல் பீடம் ஆகியன இணைந்த தொழில்நுட்பக் கல்விப் பூங்கா அச்சுவேலியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தெழில்நுட்பக்கல்வி வாழ்க்கை தொழில்நுட்ப கல்வி அமைச்சர் பியசேன கமகேயின் ஆலோசனைக்கமைய தொழில்நுட்பக் கல்விப்பூங்கா அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்வி அமைச்சின் திணைக்களப் பணிப்பாளர் ஒபயசேகராவின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.அரச அதிபரினால் சிபார்சு செய்யப்பட்டு இதற்கான கட்டட அமைப்புக்கென 25 ஏக்கர் காணி மாகாண காணி ஆணையாளரினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனப் பணிப்பாளர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

விவசாய தொழில்நுட்பபீடத்தில் மனித உணவுப் பண்ணை, விலங்குக்கான பண்ணை, பழ உற்பத்திக்கான பண்ணை, தானிய உணவுகள் பொதி செய்யும் தெழிற்சாலை, விலங்குணவு உற்பத்தி தொழிற்சாலை, ஆடு, மாடு, கோழிப் பண்ணை, பால் பதப்படுத்தலும் பைக்கற்றில் அடைத்தலும், பெண்களுக்கான யோக்கற் தெழிற்சாலை, பெண்களுக்கான சுவிஸ்றோல், சொக்கிலேற் றோல் தொழிற்சாலை, சீஸ் உற்பத்தி (பால் பொருள்களுடன் கொண்ட) உயிர் வாயு உற்பத்தி, காற்றாலை உற்பத்தி, இயற்கை மின்சார உற்பத்தி, வைன் தயாரித்தல், பழங்களைப் பதம் பண்ணி தகரத்தில் அடைத்தல் ஆகிய பிரிவுகளும்,

மீன் வளத்தொழில்நுட்பப் பீடத்தில் மீன்பிடி வலை தெழிற்சாலை, மீன் உணவு தொழிற்சாலை, கண்ணாடி இழைப்படகு தயாரித்தல், மீன்பிடிப் படகுகளும் சிறிய றோலர்களையும் கட்டுமாணப்பணி, நன்னீர் மீன் மற்றும் இறால் வளர்த்தல் ஆகிய பிரிவுகளும் கொண்டதாக இத் தொழில் நுட்பப் பூங்கா அமைய இருக்கிறது. இவ் வசதிகளை எமது குடாநாட்டு மாணவர்கள் பயன்படுத்துவதுடன் யாழ்.மண்ணின் இயற்கை வளங்கள் பூரணமாக பயன்படுத்துவதுடன் இப்புதிய தொழில்நுட்பம் நாட்டை முன்னேற்றும் வகையில் இட்டுச் செல்லும் என்று யாழ்.தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனப் பணிப்பாளர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

## நாளை

| | |
|---|---|
| மாசி 27 | 11.03.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | பூரணை |
| | மு.ப. 08.36 வரை |
| நட்சத்திரம்: | பூரம் |
| | மு.ப.08.31 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | 12.22 - [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யஜ்ஞோபவீத தாரண பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்:

விநாயகப் பெருமான் கிருபையை முன்னிட்டு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வ மங்கலகரமான சர்வதாரி வருஷம் மாசி மாதம் 27 ஆம் நாள் (11.03.2009) புதன்கிழமை உத்தர நட்ஷத்திரமும் அமிர்தயோகமும் கூடிய முற்பகல் 10.09 மணி முதல் 11.13 மணி வரையிலான இடபலக்ன சுப முகூர்த்தத்தில்

கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீனத்தைச் சேர்ந்த
சிவஸ்ரீ. தி.நடராஜக் குருக்களின் ப்ரபௌத்திரர்களும்
சிவஸ்ரீ.ந.இராமச்சந்திரக் குருக்கள் சரோஜினி அம்மா தம்பதிகளின் பௌத்திரர்களும்
சிவஸ்ரீ. சி.பரமேஸ்வரசர்மா சரோஜினிதேவி தம்பதிகளின் தௌஹித்திரர்களும்



எமது குமாரர்களுமாகிய
சிரஞ்சீவி சிவானுஜ சர்மாவுக்கும்
சிரஞ்சீவி தரணிதர சர்மாவுக்கும்



ஆனைவிழுந்தான் விநாயகரினதும் சித்திரமேழி ஞானவைரவரினதும் திருவருளுடன் ஆனைவிழுந்தான் விநாயகர் திருச்சந்நிதியில் யஜ்ஞோபவீத தாரண பிரம்மோபதேசம் நிகழ்த்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சஹிதமாக வருகைதந்து குமாரர்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்மோபதேச குரு
சிவஸ்ரீ.தா.மகாதேவக் குருக்கள் (காயத்திரிபீடம்)
சிவஸ்ரீ.ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் (கோப்பாய்)

வரவேற்பாளர்கள்

சிவஸ்ரீ.ப.சண்முகராஜக் குருக்கள் தம்பதிகள் (கோப்பாய்)
சிவஸ்ரீ.ம.அபிராமசர்மா தம்பதிகள் (கரவெட்டி)
சிவஸ்ரீ.ந.சிறீதரக் குருக்கள் தம்பதிகள் (கொழும்பு)
சிவஸ்ரீ.ப.சுகுமாரசர்மா தம்பதிகள் (கனடா)
சிவஸ்ரீ.ப.ஜெயக்குமாரக் குருக்கள் தம்பதிகள் (மருதடி)
சிவஸ்ரீ.ப.முத்துக்குமாரசர்மா தம்பதிகள் (இளவாலை)

அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோவில் வட்டுக்கோட்டை
யாழ்.மூத்த விநாயகர் கோவில் நல்லூர்
முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் துறட்டிப்பனை
(மகோற்சவக் குரு)

இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக் கொள்ளவும்.

ஆனைவிழுந்தான்,
இளவாலை.

சிவஸ்ரீ.இராம பாலச்சந்திரக் குருக்கள்
(இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய ஆதீன குரு)
பவதாரணி தம்பதிகள்.

---

உ
சிவநயம்

# உபநயன பிரம்மோபதேச அழைப்பு



அன்புடையீர்:

விநாயகப் பெருமான் கிருபையை முன்னிட்டு ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சர்வதாரி வருடம் மாசிமாதம் 27 ஆம் நாள் (11.03.2009) புதன்கிழமை உத்தரநட்சத்திரமும் பிரதமை திதியும் அமிர்தயோகமும் கூடிய பகல் 10.14 மணி முதல் 12.04 மணிவரையுமுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் கோப்பாய் ஸ்ரீ ஸ்ரீமதி சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் சுழிபுரம் ஸ்ரீ ஸ்ரீமதி சண்முகசுந்தரக் குருக்கள் தம்பதிகளின் பௌத்திரனும் எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய செல்வன் கஜதீபன் அவர்களுக்கு வெள்ளெருவைப் பிள்ளையார் துணையுடன் எமது இல்லத்தில் உபநயனமும் பிரம்மோபதேசமும் செய்ய பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

உபநயன பிரம்மோபதேசக் குரு
கோப்பாய் சிவஸ்ரீ இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்.

வெள்ளெருவை
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ ச.சண்முகராஜேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ வித்தியா தம்பதியினர்.

---

# வில்லியம் பேக் கவுஸ்

## 50 ஆம் ஆண்டு பொன் விழா 1959–2009

எமது பொன்விழாவை முன்னிட்டு இன்று முதல் இவ்வாண்டு இறுதிவரை அதிரடி விலைச் சலுகைகளுடன் எம்மிடம் கூடியளவு பொருள்களை கொள் முதல் செய்யும் வாடிக்கையாளர்களுக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் மாதாந்தம் பெறுமதிமிக்க பரிசுகளும் ஆண்டு இறுதியில் மாபெரும் பம்பர் பரிசுகளும் காத்திருக்கின்றன. மாதாந்தம் 2 தட்டு கேக் பேக்கிங் இலவசம். மேலும் பல சலுகைகள் பற்றிய விவரங்களுக்கு நேரில் தொடர்புகொண்டு பயனடைவீர்.

583, கடற்கரை வீதி, குருநகர். யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.021 2226950

எமது தாய் நிறுவனத்தின் பொன்விழாவை முன்னிட்டு ஜான்சி அழகுக் கலை நிலையத்தில் மாபெரும் சலுகைக் கட்டணத்தில்

- மணப்பெண் அலங்காரம் (ஆறுவிதமான சேலை கட்டும் முறை),
- முக அலங்காரம் (அழகுக்கலை)
- கூந்தல் அலங்காரம்,
- சேலை அலங்காரம்,
- கேக் ஐசிங்,
- கை, பூ வேலைகள்
- தலைமுடி சுருட்டுதல், அயன்செய்தல்
- தையல்

ஆகியவற்றிற்கான புதிய பயிற்சி வகுப்புகள், புதிய இடத்தில் 22.03.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகிறது. ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

125, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.மடத்தடி எரிபொருள் நிலையத்திற்கு அருகில் தொ.பே.இல.: 0602218360

---

## போட்டி ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவிருந்த விளையாட்டுப் போட்டி காலநிலை சீரில்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(1)

## உரும்பிராயில் இன்று புதிய கிளை திறப்பு

கோப்பாய், மார்ச் 10

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளை உரும்பிராயில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி சங்கப் புதிய கிளையை திறந்து வைப்பார்.

(201-72)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி வி.சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தங்கம்மா சிவசுப்பிரமணியம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்,
கைதடி.

---

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் திருமதி புவனராணி சிவயோகநாதன், செல்வி மாணிக்கன் சிவகலாராணி அவர்களின் பாசமிகு தந்தையார்

**வேலன் மாணிக்கன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நலன்புரிச் சங்கம்.

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சின்னப்பு ஜோர்ஜ்

எமது பாடசாலை ஆசிரியை அருட்சகோதரி மேரி யூட் லூமினா ஜோர்ஜ் அவர்களின் பாசமிகு தந்தை **சின்னப்பு ஜோர்ஜ்** 06.03.2009 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிப்பதுடன் அவரது ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்தித்து அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி. இளவாலை.

---

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 08 | 08 |
| ★ | ★ |
| 05 | 03 |
| ★ | ★ |
| 1984 | 2001 |

## அமரர் கோபாலபிள்ளை தினகரதாஸ்

திங்களுக்கு ஒளி கொடுத்த தினகரனே
நீ எங்களின் ஒளியினை ஏன் பறித்தாய்
பட்டதுயர் பறக்கவிட்டு
பாசத்துடன் உனை நினைத்து
பட்சிகள் பாடும் காலையிலும்
நட்டநிசி வேளையிலும்
கனவில் மட்டும் உனைக் கண்டு
நாம் பட்ட துயர் போதுமடா
நீ வந்துதித்தாலன்றி
எப்போதும் திரும்பாது மறுமலர்ச்சி
கடந்து சென்ற எண்ணாண்டு
கரைந்து கனியாதோ என்று
ஏங்கிடும் நிலையில்
உவகையின்றி உற்சாகமிழந்து
மீளா நினைவுடன் மீட்டுகிறோம் நின் திருமுகத்ததை
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"கிளான்"
துன்னாலை தெற்கு, கரவெட்டி. குடும்பத்தினர்.

---

# கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர் திருமதி இ. தயாளினி (உரிமையாளர், மதன் ஜுவலரி) அவர்களின் பாசமிகு கணவர் **தருமரத்தினம் இரவிசங்கர்** (08.03.09) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் மறைவுக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

சாவகச்சேரி. கைத்தொழில் வணிகர் மன்றம்,

---

# கண்ணீர் அஞ்சலி

எமது சக தோழர் இ.கிருஸ்ணகுமார்
(நல்லூர் ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்)
அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி இராசையா**

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
கிளை - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.

---

# மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

YAMAHA NEWS MATE மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. சொற்ப தூரம் ஓடியது. விலை 102000/= மட்டும்.
தொடர்பு: 0718175819

---

# தவறிவிட்டது

பொற் தொழிலாளர் வீதி, சங்கத் தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த துரைராசா வரதன் என்பவரது தே.அ.அ.(681040927V) இராணுவ அ.அ., லயன்ஸ் கழக அ.அ, சவுதி அரேபியா அ.அ. என்பன யாழ். நகருக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 0779580501

---

# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பிரான்ஸில் குடியுரிமையுள்ள, 1977 இல் பிறந்த அனுசம் 3 ஆம் பாதம், கிரகபாவம் 15 உடைய மணமகனுக்கு (சுப்பர் மார்க்கட் உரிமையாளர்) ஓரளவு படித்த, ஓரளவு அழகுள்ள மணமகள் தேவை. அனைத்துத் தீவகளைச் சேர்ந்தவர்களும் தொடர்புகொள்ளலாம். மணமகன் மிக விரைவில் கொழும்பு வரவுள்ளார்.
தொடர்பு: 0776184434, 0774047 531
Vani int @ yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 27 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் நிறுவன உறுப்பினர் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் பெயர்ப் பலகையை யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கத் தலைவர் ப.கிரிதரன் திரைநீக்கம் செய்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

இலங்கை செவிப்புலனற்றோர் நிறுவனத் தலைவர் கோ.வள்ளிகாந்தன் உரையாற்றுவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்:லக்ஷ்மன், நந்தன்)*

## சண்டிலிப்பாய் கோட்ட தமிழ்த் தின விழா

நவாலி,மார்ச் 10

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம் 'யுனிசெப்' நிறுவனத்தின் ஆதரவுடன் கடந்த வாரம் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தமிழ்த்தின விழாவை நடத்தியது.

கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அந்தக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில்ப் பரீட்சை, ஜீ.சீ.ஈ சாதாரணதரம், உயர்தரம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள், விளையாட்டுத் துறையில் மாகாண மட்டம்,தேசிய மட்டம் என்பவற்றிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் ஆகியோருக்கு சான்றிதழ்கள், வெற்றிக் கேடயம் ஆகியன வழங்கப்பட்டன. (203-100)

## காரைநகர் தியாகராசா ம.ம.வியின் பழைய மாணவர் சங்கம் புனரமைப்பு

ஆனைக்கோட்டை,மார்ச் 10

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் புனரமைக்கப்பட்டு வருவதாகக் கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமானது எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாகக் கூட்டப்படவுள்ளதாகவும் மேற்படி கல்லூரியில் கல்விகற்ற, தற்சமயம் குடாநாட்டில்வசிக்கும் அனைத்து பழைய மாணவர்களும், பழைய மாணவர் சங்க அங்கத்தினர் படிவத்தைக் கல்லூரியில் பெற்று உடனடியாகச் சங்கத்தில் இணைந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (203-20)

## சட்டவிரோதமாக மின் பெற்ற 11 பேருக்கு அபராதம்

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற கொடிகாமம் கச்சாய் வீதி, பாலாவி தெற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 11 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபை சாவகச்சேரி அலுவலகத்தினரும் கொடிகாமம் பொலி ஸாரும் இணைந்து கடந்த மகா சிவராத்திரி தினத்தன்று நடத்திய திடீர்ப் பரிசோதனை யின்போது அகப்பட்டவர்களுக்கு எதிராக நீதி மன்றில் ஏழு வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டன.

கடந்த 24 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். இவ்வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபாவும் அபராதத் தொகை செலுத்தத் தவறின் 30 மாத சிறைத் தண்டனையும், நால்வருக்கு தலா 8 ஆயிரத்து 500 ரூபா வீதமும் செலுத்தத் தவறின் தலா 10 மாத சிறைத் தண்டனையும், இருவருக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதமும் செலுத்தத் தவறின் 35 மாத சிறைத் தண்டனையும், இருவருக்கு தலா 18 ஆயிரம் ரூபா வீதமும் செலுத்தத் தவறின் தலா 30 மாத சிறைத் தண்டனையும், ஒருவருக்கு 26 ஆயிரம் ரூபாவும் செலுத்தத் தவறின் 20 மாத சிறைத் தண்டனையும், ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபா அபராதமும் அபராதத் தொகை செலுத்தத் தவறின் 10 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப் பட்டன. (203-207)

## கட்டாக்காலிகளால் சிறுதானியம் பாதிப்பு

வலி.தென்மேற்கு பகுதியில் நெல் அறுவடை முடிந்ததைத் தொடர்ந்து ஆடு, மாடுகளை கட்டாக்காலியாக விட்டுள்ளதால் அவை சிறுதானியப் பயிர்களையும் பயன்தரு மரங்களையும் அழித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவை வீதிகளில் நடமாடுவதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப் படுகின்றது. (203-100)

## யாழ்.நகர்ப் பகுதியில் 'கோடா பரல்' நிலத்தடியில் இருந்து அகழப்பட்டு அழிப்பு



புதைக்கப்பட்டிருந்த கோடா பரலையும் விழிப்புக் குழு உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

நல்லூர், மார்ச் 10

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி யாழ்.வீதியில் கடந்த சனிக்கிழமை கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடா 210 லீற்றர் விழிப்புப் குழுக்கள் ஒன்றியத்தினால் பிடிக்கப்பட்டது.

இரண்டு தனியார் கல்வி நிறுவனங்கள், இந்து ஆலயம் ஆகியன அமையப்பெற்றுள்ள பகுதியில் இது கண்டு பிடிக்கப்பட்டிருப்பது இந்தப் பகுதி மக்களுக்கு அதிர்ச்சியளித்துள்ளதாகக் கூறப்படுகிறது. கொட்டடி, நாவாந்துறை விழிப்புக் குழுக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த கே.தர்மரத்தினம், எம்.ஈ.எம். தாஹிர், என்.பிலிப், ஏ.எம்.நிசாம், எஸ்.வர்ணான்டோ ஆகியோர் கொண்ட குழுவினரால் யாழ்.வீதியில்உள்ள வீட்டுக் காணியொன்றில் புதைத்து வைக்கப் பட்டிருந்த கோடா பரல் அகழ்ந்து எடுக்கப்பட்டு ஊற்றப்பட்டது.

இதற்கு முன்னரும் இதே இடத்தில் 210 லீற்றர் கோடா கொண்ட பரல் கைப்பற்றப்பட்டதாகவும் விழிப்புக்குழு தெரிவித்தது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக குறிப்பிட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தி நடைபெற்று வருவதாக சம்பந்தப்பட்டவர்கள் கூறியதாகவும் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைத்தால் இது போன்ற மேலும் பலவற்றைக் கண்டு பிடித்து அழிக்க முடியும் என்றும் விழிப்புக் குழு வினரால் தெரிவிக்கப்பட்டது. (203-111)

## வாசிப்பு மாதப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

நூலக விழிப்புணர்வு நிறுவகம் யாழ். மாநகர சபையுடன் இணைந்து ''தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சி 2008 '' இற்கான பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டிகள் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பொதுசன நூலகத்தில் நடைபெறவுள்ளன.

பேச்சுப் போட்டி தரம் 10-11, 12-13 ஆகிய பிரிவுகளில் நடைபெறவுள்ளன.

மேற்படிப் போட்டிக்கு விண்ணப்பித்த யாழ் கல்வி வலயம், வலிகாமம் கல்வி வலயம் ஆகிய கல்வி வலய மாணவர்களை சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

போட்டிகள் தொடர்பான அறிவித்தல்கள் பாடசாலைகளிற்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (201)

## ஆங்கில மொழி தினப் போட்டிகள்

வேலணை,மார்ச் 10

தீவக வலயப் பாடசாலைகளிடையேயான ஆங்கில மொழித் தினப் போட்டிகளை அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டும் என்று தீவக வலய ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் க.கதிரேசபிள்ளை அறிவித்துள்ளார்.

மாணவர்களின் விண்ணப்பங்களை குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (203-167)

## வீடுகளில் சமைக்கப்பட்டு மாணவர்களுக்கு சத்துணவு

கரவெட்டி,மார்ச் 10

வடமராட்சிப் பகுதியில் உள்ள சில பாடசாலைகளுக்கான சத்துணவுகள் தனியார் வீடுகளில் வைத்துச் சமைக்கப்பட்டு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட பாடசாலைகளில் சமையல் அறை இன்மையே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-70)

## 'பட்டாம் பூச்சிகள்' வெளியீட்டு விழா இன்று யாழ்.கல்வியற் கல்லூரியில்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட இசைத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட 'பட்டாம் பூச்சிகள்' (அபிநயப் பாடல் தொகுப்பு) ஒலி, ஒளி இறுவெட்டு, நூல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க் கிழமை காலை, 9 மணியளவில் கல்வியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசியர் எஸ்.சிவலிங்கராஜாவும் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் செல்வி பாக்கியலக்ஷ்மி நடராஜாவும் வாழ்த்துரைகளை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி திருமதி ஜெயமலர் தியாகலிங்கம், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

தொகுப்புரையை யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி நுண்கலை மன்றக் காப்பாளர் கே.ஆர்.கமலநாதன் நிகழ்த்துவார்.

'பட்டாம் பூச்சிகள்' முதற் பிரதியினை யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி கிருபானந்தராணி ஸ்கந்தராஜ் பெற்றுக் கொள்வார். (9)

## பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை ஆசிரியர்கள் விசனம் தெரிவிப்பு

வேலணை, மார்ச் 10

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திற்குப் பின்னர் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரிய சேவையில் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு பல நிபந்தனைகள் உள்ளன. 2005 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின்படி புள்ளிகளின் அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன.

அதன் பின்னர் புதிய சுற்று நிருபம் வெளியிடப்படவில்லை. எனினும் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் 2005 ஆம் ஆண்டின் சுற்று நிருபத்திற்கு ஒரு நீடிப்பு வழங்கப்பட்டது.

அதேபோல் 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபரிலும் ஒரு நீடிப்பு வழங்கப் பட்டுள்ளது.

இவற்றின்படி 2008.12.31 ஆம் திகதி வரை ஆசிரியர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்க முடியும்.

எனினும் இன்று வரை இந்தப் பதவி உயர்வுகள் பல ஆசிரியர்களுக்கு வழங்கப் படவில்லை.

மேற்படி பதவி உயர்வுகளை வழங்குவதிலும், அதற்கான சம்பள உயர்வு வழங்குவதிலும் வலய அலுவலகங்களிடையே வேறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகவும் ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (201-267)

## குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் சித்திரைப் புத்தாண்டில் வளம் பெருக்க வேண்டும்

### மரங்களை நடுமாறு கூ.அபிவிருத்தி உதவி ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பயன்தரும் மரக்கன்றுகளை நட்டு வளத்தைப் பெருக்க உதவ முன்வர வேண்டும்.

இவ்வாறு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மேற்படி அமைப்புக்களை கேட்டுள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு சமாசங்கள் போன்றவை இந்த பயன்தரும் மரக்கன்றுத் திட்டத்தை வெற்றிகரமான முறையில் செயற்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு சங்கமும் குறைந்தது 50 பயன்தரும் மரக்கன்றுகளை நட்டு, பராமரித்து எமது வளத்தைப் பெருக்க முன்வர வேண்டும்.

குறிப்பாக தென்னை, பனை, மா, பலா, தேசி போன்ற பயன்தரும் மரக்கன்றுகளை சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று நட்டு வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பயன்தரும் மரக்கன்று திட்டத்தின் மூலம் குடாநாட்டில் 3 ஆயிரம் மரக்கன்றுகளை நட முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (203-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகரத் தோற்றத்திற்கு

சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், தங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பார்தாமரை, கண்ணைச்சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.
(சி/555203)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 10 ஆவது ஆண்டு நினைவுப் பூக்கள்



அன்னை மடியில்: 01★06★1949

ஆண்டவன் அடியில்: 01★03★1999

அமரர்

### இராமகிருஷ்ணன் நாகராசா

திதி:சதுர்த்தசி: (10.03.2009)

தெய்வமே!
உங்கள் புன்முறுவல் பூத்த முகம் - பார்த்து
பத்து ஆண்டுகள் பறந்தோடி
மறைந்திடினும் அப்பா ; உங்கள்
பசுமை நினைவுகளில்
பகலிரவாய் நனைகின்றோம்.

ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி,
220 - A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
88/25, பத்திரகாளி கோவில் வீதி,
வண்ணார்பண்ணை.

தங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா, மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### தருமரத்தினம் இரவிச்சந்தர்



மட்டுவில்,வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கெருடாவில் வடக்கு, பாடசாலை வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட தருமரத்தினம் இரவிச்சந்தர் (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் தருமரத்தினம் மற்றும் இராசலெட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் தயாளினியின் அன்புக் கணவரும், ஆர்த்திகா, பிரதாப், சாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2009) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கெருடாவில் வடக்கு, பாடசாலை வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஒன்று கூடல்

மட்டுவில்,மார்ச் 10

தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நாளை புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்குச் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

முன்பள்ளி ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-59)

## மெய்வன்மைப் போட்டிகள்

வேலணை,மார்ச்10

எழுவைதீவு, முருகவேள் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபர் து.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரன் பிரதம விருந்தினராகவும் இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் க.சிவஞானசுந்தரம், போதகர் ஜேசன் ஜே.செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (201-267)

* * *

கரவட்டி,மார்ச்10

பருத்திதுறைப் பிரதேச செயலர் பிரிவிற்குப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் அல்வாய் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். (201-70)

## கசிப்பு, கள் வைத்திருந்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

கசிப்பு வைத்திருந்தமை, அனுமதியின்றி வீட்டில் கள் வைத்திருந்தமை ஆகிய குற்றங்கள் புரிந்த இருவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் கச்சாயைச் சேர்ந்த நபருக்கு எதிராக கசிப்பு வைத்திருந்தமைக்காகவும், அல்லாரை வடக்கைச் சேர்ந்த நபருக்கு எதிராக அனுமதியின்றி கள் வைத்திருந் தமைக்காகவும் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. விசாரணைசெய்த நீதிவான் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் நான்கு மாத சிறைத் தண்டனையும், அனுமதியின்றி கள் வைத்திருந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து செலுத்தத் தவறின் 3 மாத சிறைத் தண்டனையும் விதித்தார். (202-207)

## சுயதொழில் கொடுப்பனவு

கோப்பாய்,மார்ச்10

வடமாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தால் வலி.கிழக்குப் பிரதேசசபைப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரில் அங்கவீனர்கள் 6 பேருக்குரிய சுய தொழில் உதவிக் கொடுப்பனவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டக் கொடுப்பனவாக தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (203-72)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆங்கிலப் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்குச் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கடந்த 25 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆங்கில பாட வினாத்தாள் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றியவர்களை இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## கண்ணீர் அஞ்சலி

மட்டுவில் வடக்கு கிராம அலுவலரும் எமது பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்க உறுப்பினருமான **திரு.செ.சிவசுப்பிரமணியம்** அவர்களின் அன்பு மாமியாரான **திருமதி சிவசுப்பிரமணியம் தங்கம்மா** அவர்கள் 28.02.2009 அன்று காலமானார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

பிரதேச செயலக ஊழியர்,
நலன்புரிச்சங்கம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25.06.1926

மறைவு: 01.03.2008

திருமதி
### அன்னம்மா நவரத்தினம்
(அச்சுவேலி)

அன்னையே நீ மறைந்து
ஆண்டொன்று சென்றாலும்
உன்னையே தினம் நினைந்து
உள்ளத்தால் போற்றுகின்றோம்

86, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### திருமதி நேசமணி காசிநாதன்
*(இளைப்பாறிய ஆசிரியை - அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)*

அளவெட்டி தெற்கு, பெருமாக்கடவையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு காக்கைதீவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி காசிநாதன் 08.03.2009 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற ராமுபிள்ளை வைத்தியலிங்கம் - பூரணம் தம்பதியினரின் மகளும், காசிநாதனின் அன்பு மனைவியும் லோஜி, கோகிலா, ரேணுகா ஆகியோரின் அன்புத் தாயாரும், BENNY அரசரட்ணம், Dr.ராசா, பிரேமகுமார் ஆகியோரின் மாமியாரும், காலம் சென்ற பாலமணி, ராசமணி, சரவணபவன், மாணிக்கவாசகர், விஜயமணி, சாம்பவலிங்கம் ஆகியோரின் சகோதரியும், SUSAN, STELLA, லலிதா, யசோதரா, லாவண்யா, பிரசாந்த், பிரவினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2009) புதன்கிழமை காலை 8 மணியளவில் 65/312, காக்கைதீவு, மட்டக்குளியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: கணவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு உத்தியோகத்தரதும் அர்ப்பணிப்பின் மூலமே மாகாணமட்டத்தில் முதலிடம் பெறமுடிந்தது.........

இங்கு குறிப்பிடக் கூடியதான நிலம் இல்லை. கட்டடத் தொகுதிபோக மிகுதியான சிறிய நிலப்பரப்பே தோட்டச் செய்கைக்கெனப் பயன்படுத்தப்பட்டது. இது கற்பூமி. எமது பிரதேச கிராம அலுவலகர்கள் தமது சொந்த முயற்சியில் தமது



திருமதி ரூபினி வரதலிங்கம்
சண்டிலிப்பாய் பிரதேச செயலர்.

பகுதிகளில் இருந்து மண்ணைத் தருவித்து உதவினார்கள். அவர்களுடன் ஏனைய உத்தியோகத்தர்களும் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியதுடன் அனைவரும் வாரத்தில், ஒரு நாள்முழுவதும் தோட்டச் செய்கைகளுக்காக என முழுமையான உழைப்பையும் வழங்கினார்கள். இந்தக் கூட்டு முயற்சிதான் எங்களது வெற்றிக்கான இரகசியம்.

அடங்குகின்றன. பொதுமக்களுக்கு எமது மூலிகைகளின் பயன்பாடு தேவை. எனவே 48வகையான மூலிகைகள் பயிரிடப்பட்டுள்ளதுடன், கால் நடைகளுக்கு உகந்ததான சி.ஓ.3 இனப்புல் வளர்ப்பினூடாக அதன் முக்கியத்துவமும் உணரக் கூடியதாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தண்ணீரை விரையம் செய்யாது பாதுகாக்க வேண்டியுள்ளது. நீரைச் சிக்கனமாகவும் பயிர்களுக்குத் தேவையான அளவிலும் விடக்கூடியதாகக் கொட்டு நீர்ப்பாசனமுறை கடைப்பிடிக்கப்படுவதுடன், மூடுபடை முறையும் இடம்பெறுகின்றது. இது நீர் ஆவியாவதைத் தடுக்கக்கூடிய ஒரு முறையாகும். பசளைகள் சேதனப் பசளைகளே. இரசாயனக் கலவைகள் கிடையாது. பூச்சித் தாக்கங்கள் நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாக ஐதரசக் கரைசல் திரவங்களை வேம்பு உள்ளிக் கரைசல்கள் பயன்படுத்தப்படுவதுடன் எல்லைப் பாதுகாப்பாகக் கிளிசீரியா, செவ்வந்தி, சூரிய காந்திச் செடிகளும் வளர்க்கப்படுவதால் பூச்சித் தாக்கங்கள் முழுமையாகவே தடைப்படுத்தப்பட்டுள்ளது. வாசனைத் திரவியப் பயிர்களும் உண்டு பண்ணப்பட்டுள்ளது.

களை வழங்கவும், எமது மீள் உற்பத்திக்குப் பயன்படுத்தவும் கூடியதான நடவடிக்கைகளும் இந்த அலுவலகத் தோட்டத்தில் உண்டு.

இடப் பற்றாக்குறை காரணமாகப் பிரதேச செயலகக் கட்டடத்தின் பூர்த்தி செய்யப்படாத அத்திவாரப் பகுதியிலும் பயிர்கள் செழித்து நிற்கக் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அலுவலகத் தோட்டத்தில் தேனீ வளர்ப்பும் உள்ளது. எமது பிரதேசத்தின் மானிப்பாய் வடக்குக் கிராம அலுவலர் தனபாலன், தேனீ வளர்ப்பில் அனுபவம் மிக்கவர் தனது வீட்டில் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ளார். அவரது ஒத்துழைப்பும் அனுபவமும் எங்களுக்கு உதவியாக இருக்கிறது.

**உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புக்கான தேசிய இயக்கம் நடத்திய அலுவலகத் தோட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் இது தொடர்பான கருத்துக்களை உதயனுடன் பகிர்ந்து கொண்டனர்.**

எமது உற்பத்திப் பொருள்கள் நச்சுத் தன்மைகளற்ற இயற்கை உரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டவை என்பதால், மக்கள் அவற்றை விருப்புடன் வாங்கிச் செல்கிறார்கள். எமது அலுவலகத்தில் உள்ளவர்கள் கூடுதலான அளவில் அவற்றைப் பெற்றுக் கொள்கிறார்கள். விலைவாசிகளும் குறைவு. சந்தை விலைகளுக்குக் குறைந்ததாகவே உள்ளதால் பாவனையாளர்கள் திருப்திப்படுகிறார்கள்.

எமது அலுவலகத் தோட்டம் சிறந்த முறையில் உருவாகக் கூடிய ஆலோசனைகள் அறிவுரைகளை அவ்வப்போது யாழ். விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் சிவகுமார், சண்டிலிப்பாய் விவசாயப் போதனாசிரியர் மணிவண்ணன், விவசாயத் திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்கள் வழங்கி வந்ததுடன், அவ்வப்போது பார்வையிட்டும் வந்தனர். இது பயிர்களின் செழிப்பான வளர்ச்சிக்கு



திருமதி எ.அன்ரன் யோகநாதன்
உதவிப் பிரதேச செயலர்.

உறுதுணையாக இருந்தது.

எம்மிடம் போதிய அளவு நிலம் இல்லை. அத்துடன் நிதி ஒதுக்கீடுகளும் இதற்குக் கிடையாது. இந்த இரண்டு வசதிகளும் கிடைக்கும் பட்சத்தில் எமது உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பு இருப்பதால் எதிர்காலத்தில் தேசிய மட்டத்தில் கூட வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை எங்களிடம் உள்ளது. *****




தேனீ வளர்ப்புக் கூடு

## சண்டிலிப்பாய் பிரதேச செயலரும், உதவிப் பிரதேச செயலரும் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற பின்னணியை விளக்குகிறார்கள்

பயிர்களைப் பொறுத்தவரை உள்நாட்டு

அத்திவாரமிடப்பட்டு பூர்த்தியடையாத கட்டடப் பகுதியில் தோட்டத்தின் ஒரு பகுதி.



வெளிநாட்டு மரக்கறிவகைகள் உற்பத்திப் பண்ணப்பட்டுள்ளது. கிழங்கு, பருப்புத் தானியங்கள், இலை வகைகள் என இதில்

இடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கூடியதாகக் கழிவுப் பொருள்களில் சாடிகள் அமைத்து அவற்றைத் தொங்கவிடக் கூடியதாகச் செய்து அவற்றிலும் சில கன்றுகள் வைக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் புதிய முறைகளை அதாவது விஞ்ஞானத் தொழில்நுட்ப முறைகளை எமது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதனால் அதற்கான உத்திகளும் எமது தோட்டச் செய்கையில் கையாளப்பட்டுள்ளது. நாற்று மேடைகள் அமைத்து அதனூடாக விவசாயிகளுக்குக் கன்று

சந்திப்பும் படங்களும்:
லக்ஸ்மன்

# தவக்காலச் சிந்தனை



## 'சொல்வதைச் செயலில் காட்டுவதே தவம்'

இறைமீட்பின் காலமாகிய தவக்காலம் நாம் இறைவனை மென்மேலும் நெருங்கிச் செல்லும் ஓர் தகுந்த காலமாகும். இதற்காக எம்மிலே உடல், உள, ஆன்மீக ரீதியாகப் பல தியாகங்களைச் செய்ய முன்வருகின்றோம். ஆயினும் பல சந்தர்ப்பங்களில் எமது சொல், செயல்கள் இயேசு கூறுவதுபோன்று வெளிவேடத்தனமானதாகவும், பிறர் மத்தியில் எம் பெயரை, செயலை நிலை நாட்டுவதற்காகவுமே அமைகின்றதே தவிர, உண்மையான உளமாற்றத்தை எம்மில் ஏற்படுத்துவதாக அமைவதில்லை. அதனால் தான் அன்று யூதப் பெரியோர்களை இயேசு சுட்டிக் காட்டி அவர்கள் சொல்வார்கள், செயலில் காட்ட மாட்டார்கள்' எனக் கடிந்துக் கொள்கின்றார்.

பல தபமுயற்சிகளினூடாக இறை இரக்கத்தைப் பெறவிரும்பும் நாமும், எமது சிறிய சிறிய நற்செயல்கள் மூலம் எமது தபமுயற்சிகளைச் செயற்படுத்தமுடியும் என இறைவார்த்தை சான்று பகர்கின்றது. அதாவது 'தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்' (மத்.23:12) தாழ்மை என்பது எமது செப, தவ, தர்ம முயற்சிகளில் உயர் பண்பாக விளங்குகின்றது. அதாவது தன்னிலை மறுப்பு. மனிதன் தன் எண்ணத்தில், செய்பாடுகளில் தன்னை உயரியவனாக, புகழ்மிக்கவனாக, தன்னால் எதையும் நிலைநாட்ட முடியும் என்ற கர்வம் மிக்க நிலையில் காட்டிக் கொள்வதிலிருந்து இறங்கி வருதல். அதனால் தான் சொல்வார்கள் 'பொறுத்தார் பூமி ஆள்வார்கள்' என்று. இறைவனாகிய கிறித்துவே தன்னிலை தாழ்த்தி அவமானத்திற்குரிய சிலுவை மரணம் ஏற்றதினால்தான் உலக மக்கள் இறை மீட்பைப் பெற்றார்கள்.

ஆகவே, எமது தபக்காலம் தகுந்த காலமாக எம்மிலே மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின், எமது தனிப்பட்ட, குடும்ப சமூக, பணித்தள வாழ்வின் செயற்பாடுகளில் தாழ்மை என்னும் பண்பை எம்மிலே சுவீகரிக்கும் தியாகமனம் எமக்கு வேண்டும். எடுத்ததற்கெல்லாம் சினமுறும் நிலையிலிருந்து எமது சொல்லால் அன்பு வார்த்தைகளைப் பொறுமையுடன் செயற்படுத்துவோம்.

குடும்பவாழ்வில் ஒவ்வொருவரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, ஒற்றுமை உணர்வைப் பேணுவதில் தாழ்மையைக் கடைப்பிடிப்போம். சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை, அதிகாரங்களை நிலைநாட்டாது, அனைவரையும் பொறுமையுடன் ஏற்றுப் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்துப் பொறுப்புணர்வுள்ள சமூகத்தை உருவாக்குவோம். எமது பதவி நிலைகளில் பணிபெறும் நிலையை விடுத்துப் பணிபுரியவும், பண்போடு பணியாளர்களிடம் அணுகவும், ஏற்றுக்கொள்ள முடியாத, மனநிலையிலும், தாழ்மையைக் கடைப்பிடித்து மனித மாண்பைப் பேணுவதன் ஊடாகவும் எமது தப வாழ்விற்கான சிறிய செயற்பாடுகளை முன்னெடுத்து எமது தாழ்மையான வாழ்வைச் செயலில் வெளிப்படுத்தி உண்மையான தப வாழ்வை செயலில் உருவாக்க முயல்வோம்.

# வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில்...




யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தினால் நடத்தப்பட்ட வங்கி ஓய்வூதியர்கள் கௌரவிப்பு நிகழ்வில் சிறப்புக் கௌரவம் பெற்ற அதிமூத்த வங்கி ஓய்வூதியர்களான எஸ்.தனராஜா (இலங்கைவங்கி), ஏ.வீநாசித்தம்பி (மக்கள் வங்கி), பி.வீவேகானந்தன் (இலங்கை வர்த்தக வங்கி) ஆகியோரைப் படத்தில் காணலாம்.



செலிங்கோ ஆயுட் காப்புறுதி நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அருண் என்பவரின் திடீர் மரணத்திற்கான 5லட்சத்து 42 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை அவரது சகோதரியான வி.மதிவதனி யிடம் கிளை முகாமையாளர் ரீ. நிரோஜன் வழங்குவதனையும் விற்பனை நிறைவேற்று அதிகாரி வி.பாஸ்கரன், சிரேஷ்ட விற்பனை நிறைவேற்றுனர் கே.குகநேசன் ஆகியோர் அருகில் நிற்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.02.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி நல்லான் பொன்னு**

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10.03.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**பிள்ளைகள்.**

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 22 . 10 . 1933



மறைவு 08 . 02 . 2009

**திருமதி சிதம்பரநாதர் சிவசுப்பிரமணியம் தங்கம்மா**

கடந்த 08.02.2009 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி சிதம்பரநாதர் சிவசுப்பிரமணியம் தங்கம்மா அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும், மற்றும் பல வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (10.03.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

செல்லையா சிவசுப்பிரமணியம் (G.S)
சிவசுப்பிரமணியம் விக்னேஸ்வரா (ஆசிரியர்).

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மனுவல் வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், இருதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பி.லக்ஸ்மன் ''நலமான வாழ்விற்கு இதமான இதயம்'' என்னும் கருப்பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார். (204)

## வைக்கோலுக்குக் கிராக்கி

சுழிபுரம்,மார்ச் 10

சுழிபுரம் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட வைக்கோலுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டிலும் பார்க்க இரண்டு மடங்கு விலைக்கு ஒரு பரப்பு வைக்கோல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

நெல் விதைப்பு, தண்ணீர் இறைப்பு, புல்பிடுங்குதல், அறுவடை செய்தல் ஏற்பட்ட கூலி அதிகரிப்பே இதற்குக் காரணமாம்.


**STUDY IN INDIA**

GARDEN CITY COLLEGE

BANGALORE UNIVERSITY DEGREES

*Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK

**Courses Offered**

BCA Bachelor of Computer Application
B.Sc. Computer Science/Microbiology/Genetics Biotechnology/Fashion and Apparel Design
B.A. Journalism/B.Com Computers
BBM Bachelor of Business Management
BHM Bachelor Of Hotel Management
BPT Bachelor of Physiotherapy
LAW Bachelor of Law

* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying

www.studyingcc.com

தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.


## மாணவர்களுக்குச் சான்றிதழ்

இலவச பாடசாலை நூல்களைப் பேணிப் பாதுகாத்த ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையைச் சேர்ந்த 35 மாணவர்களுக்குக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அதிபர் த.சிவகடாச்சத்தினால் நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

(203-100)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் எஸ்தாக்கியக்கரசு மரியாம்பிள்ளை**

எமது பாடசாலையின் கணித ஆசான் திரு ம.அ.யோகநாதனின் அன்புத் தந்தையும், வலிகாமம் வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனின் அன்புச் சகோதரருமாகிய ய.மரியாம்பிள்ளையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலி.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.
யா/நவாலி மகா வித்தியாலயம்.


**வைத்திய சேவை**

**பிலிப்ஸ் நேசிங் ஹோம்**

**Phillip's Nursing Home**

நியாயமான கட்டணத்தில் தரமான சேவை

* வெளிநோயாளர் பிரிவு: காலை 8 மணி - 1.00மணிவரை பி.ப.3.30 மணி - 7.30மணிவரை
* இரத்தம், சிறுநீர், சளி, மலம் பரிசோதனை (கொம்பியூட்டர் மயமான இயந்திரம் மூலம்)
* யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் பார்வையிடப்படும்.
சுத்தமான, சுகாதாரமான வாாட் வசதிகள்
* வைத்திய நிபுணர் ஆலோசனை

பொதுவைத்தியம், சத்திர சிகிச்சை, மகப்பேற்று வைத்தியம், என்பு முறிவு நெரிவு சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை குழந்தைகள் வைத்தியம்.

எங்கள் நோக்கம் உங்கள் சுக வாழ்வு

228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: தூர இடத்து நோயாளர்கள் யாழ்.- கச்சேரி மினிபஸ் சேவை மூலம் ஆஸ்பத்திரி வாசலிலேயே இறங்கமுடியும்.

T.P.: 021 222 4172

(சி/557157)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

நெஞ்சம் மகிழ்ந்தது 27.05.1970

நெஞ்சம் நெகிழ்ந்தது 19.02.2008



**அமரர் சோமசுந்தரம் சதானந்தன்**

(உரிமையாளர் - ஈசன் மொத்த விற்பனை நிலையம்)

திதி: மாசி-சதுர்தசி

ஆதவன் போல் பிரகாசித்து
அவசரமாக மறைந்த தெங்கே?
ஆண்டொன்று போனதோ?
ஆதரவின்றி ஏங்குகின்றோம்
ஈரவிழிகளுடன், இன்னும் தேடுகின்றோம்
எங்கே போனீர்கள்?

''பிருந்தாவனம்'',
இல: 13 B ஐயனார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**மனைவி, பிள்ளைகள்.**

## விழி சுரக்கும் கண்ணீரால் நாம் செலுத்தும் 4 ஆம் ஆண்டு அஞ்சலி

மண்ணில் அழைத்தது 22 . 11 . 1953



விண்தலம் அழைத்தது 23 . 02 . 2005

**திருமதி கோவர்த்தனராஜா இராஜகுமாரி (ராதா)**

ஆண்டு பல கழிந்திடலாம் ஆனாலும் எங்கள்
அகத்தினிலே நீங்களிருப்பீர்கள்
தூண்டுபலம் நீங்களெங்கள் துயரந்துடைப் பீர்கள்
நீங்களின்றித் தெய்வமெமக்கில்லை

34/3, உடையார் லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
என்றும் நீங்கா நினைவுகளுடன்
கணவர்: க. கோவர்த்தனராஜா
மகன்:- தனுசன் (பொறியியலாளர்-டோகா)
மருமகள்:- மதனா,
பேர்த்தி:- தஷானிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## குமாரமூர்த்தி சுயந்தன்
### பெறுபேறு: 3ஏ (சென்.ஜோன்ஸ் கல்லூரி)

எனது ஆரம்பக் கல்வியை சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பித்து உயர் தரம் வரை அங்கேயே கல்வி பயின்றேன். ஆரம்பக்கல்வியை சிறந்த பாடசாலை ஒன்றில் சேர்த்து எனது கல்விக்குச் சிறந்த அடித்தளத்தைப் பெற்றுத் தந்தார் எனது தந்தையார். ஆரம்பத்தில் இருந்தே கல்வியைப் போல விளையாட்டுத் துறையிலும் ஆர்வமுடன் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றேன். பாடசாலையில் நடைபெறும் விழாக்கள், போட்டிகளிலும் ஆர்வமுடன் பங்குபற்றினேன். இவை எனது ஆளுமையை விருத்தி செய்ய உதவியது. மற்றும் சிரேஷ்ட மாணவத் தலைவர் பதவியின் மூலம் எனது தலைமைத்துவப் பண்பினையும் விருத்தி செய்யமுடிந்தது.

சாதாரண தரப் பரீட்சையில் நான் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை. அதனால் கவலை அடைந்தேன். எனவே உயர் தரத்தில் எத்துறையைத் தேர்ந்தெடுப்பது பற்றி தடுமாறினேன். தந்தையார் உனக்கு எத்துறையில் ஆர்வமுள்ளதோ அத்துறையைத் தெரிவு செய்து படித்தால் சிறந்த பெறுபேறைப் பெறமுடியும் எனக் கூறினார். அதனால் எனக்கு ஆர்வமுள்ள வர்த்தகத் துறையைத் தெரிவுசெய்தேன். அதில் ஊக்கமாகப் படித்தேன். எனது பாடசாலை ஆசிரியர்களும் மிகுந்த ஊக்கம் தந்தார்கள். தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் சிறந்த பெறுபேறு பெற உதவினார்கள். அவர்கள் எல்லோருக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மற்றும் எனது வெற்றிக்குக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், தாய் தந்தை, சித்தப்பா ஆகியோரின் ஊக்குவிப்பும் சக மாணவர்களின் ஒத்துழைப்புமே காரணங்களாகும்.



## குயிந்தினி ஞானசேகரம்
### பெறுபேறு: 3ஏ (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

சொந்த இடமாகிய காங்கேசன்துறையிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றேன். ஆரம்பக்கல்வியை புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திலும் உயர்கல்வியை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் கற்றுக்கொண்டேன்.

பல்கலைக்கழகத்திற்குச் செல்லவேண்டும் என்ற எதிர்கால இலட்சியத்தைக் கருத்திற்கொண்டு கலைப்பிரிவைத் தெரிவுசெய்தேன். ஆசிரியர்களினதும், பெற்றோரினதும் ஆலோசனைப்படி தமிழ், புவியியல், நடனம் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்தேன்.

எனது அம்மா, அப்பா ஆகியோரைப் பெற்றோராகக் கொடுத்த இறைவனுக்கு என் முதற்கண் நன்றியைக் கூறுகிறேன். இவர்கள் எனக்குக் கொடுத்த அரவணைப்பும், ஊக்கமும் தான் என்னை இந்த அளவுக்கு வளர வைத்தது. என் சிறப்பான பெறுபேற்றிற்கு மூலகாரணியாக விளங்கிய என் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஆகியோரை நன்றி உள்ளத்தோடு நினைவு கூருகின்றேன். என் பாடசாலை நூலகத்துக்கும் நன்றிகள்.

மின்சாரத்தடை எனக்குப் பெரும் சவாலாக இருந்தபோதிலும் என் பெற்றோரின் ஒத்துழைப்பினால் அதனை வெகு இலகுவாக எதிர்கொண்டேன். அதிகமாக அதிகாலையில் எழுந்து படிப்பேன். ஆசிரியர்கள் கற்பிப்பத்தை நன்றாகக் கிரகித்துக்கொள்வேன். எதையும் மனப் பாடம் செய்வதில்லை. விளங்கிப் படிப்பேன். மேலதிக விளக்கத்திற்குப் பாடசாலை நூலகத்தை நாடுவேன். சுயகற்றலில் ஈடுபட்டு சிறுகுறிப்பு எடுத்துப் படிப்பதே அதிகம். நித்திரை வரும்போது புவியியல் செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுவேன். சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்வேன். அனைத்துப் பாடங்களின் முழுமையையும் கற்றேன். எனவே பரீட்சையின் வினாக்கள் அனைத்தையும் எளிதாக எதிர்கொள்ள முடிந்தது.

பரீட்சை எழுதியபின் 3ஏ வரும் என்ற நம்பிக்கையும் மாவட்ட மட்டத்தில் முதல் பத்து நிலைகளுக்குள் வருவேன் என்ற நம்பிக்கையும் இருந்தது. அந்தவகையில் நான் 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 5ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது எண்ணற்ற மகிழ்ச்சியே. என் எதிர்பார்ப்பும் நிறைவேறிவிட்டது.

பாடசாலைகளுக்கிடையில் இடம்பெறும் நடனப் போட்டிகளில் கோட்டம், வலயம், மாவட்ட ரீதியில் பல பரிசுகளைப் பெற்றுள்ளேன்.

எதிர்காலத்தில் புவியியல்துறையில் சிறந்த ஆய்வாளராக வந்து பெரிதாக சாதிக்கவேண்டும் என விரும்புகிறேன்.



## மேரிதர்சிகா அருணாசலம்
### பெறுபேறு: 3ஏ (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

நான் எனது ஆரம்பக்கல்வியை நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் கற்றேன். அங்குள்ள அதிபர், ஆசிரியர்கள் எனது ஆரம்பக்கல்வியை ஊக்குவித்துச் சிறந்த அத்திவாரமிட்டனர். பின்னர் அவர்களின் ஆலோசனைப்படி தரம் 6இல் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சேர்ந்து உயர்தரம் வரை அங்கேயே கற்றேன். சாதாரண தரத்தில் நான் எதிர்பார்த்த பெறுபேற்றைப் பெறமுடியாது போனமையினால் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் கலைத் துறையினைத் தெரிவுசெய்து அதில் தமிழ், கிறிஸ்தவம், அளவையியல் ஆகிய பாடங்களைத் தேர்ந்தெடுத்து மிகவும் ஊக்கத்துடன் கற்று இச்சிறந்த பெறுபேற்றைப் பெற்றேன்.

நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு எனது பெற்றோர்களின் அர்ப்பணிப்பே பெரும் பங்காகும். இடப்பெயர்வு, சுனாமி எனப் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் மூத்தபிள்ளையாகிய என்னைக் கல்வியில் உயர் நிலையை அடையச்செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் எனது கல்விக்குப் பல வழிகளில் ஊக்கமும், உதவியுமாக இருந்தனர். எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியிலும் என்னைக் கற்பித்து உயர்நிலை அடையவேண்டும் என்ற எனது பெற்றோரின் கனவை நனவாக்க வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் எனது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு இப்பெறுபேற்றைப் பெற்று எனது பெற்றோருக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மற்றும் எனது இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு எனது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களினதும், தனியார் கல்விநிலைய ஆசிரியர்களினதும் ஊக்குவிப்பும் கற்பித்தலும் பெரும் பங்கு வகிக்கின்றன. அத்தோடு எனது ஐந்து நண்பிகளின் உதவியும் ஒத்துழைப்பும் கூட்டுமுயற்சியுமே நான் இப்பெறுபேற்றைப் பெறக் காரணமாய் அமைந்தது.



## சுப்பிரமணியம் காயத்திரி
### பெறுபேறு: 3ஏ (வரணி மகாவித்தியாலயம்)

எனது ஆரம்பக்கல்வியை எனது கிராமத்திலுள்ள சைவப்பிரகாச வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டு தொடக்கம் 8ஆம் ஆண்டுவரை கல்வி கற்றேன். பின்னர் 9ஆம் வகுப்பு தொடக்கம் உயர்தரம் வரை வரணி மகாவித்தியாலயத்தில் கற்றேன்.

எனக்கு அம்மா உட்பட குடும்பத்தவர்கள் என்று சொல்ல எவரும் இல்லை. நான் எனது மாமாவுடன் இருந்தே கல்வி கற்கின்றேன். மாமாவும், மாமியும் எனது தாய் தந்தை போல இருந்து என்னை வழிப்படுத்தி வருகிறார்கள். எனக்கு உறுதுணையாக தாத்தா உதவிகளைச் செய்வார்.

எங்கள் கல்விக்காக அதிபர், ஆசிரியர்கள் அரும்பாடு பட்டார்கள். விளங்காத பகுதிகளைக் கருத்தரங்குகள் மூலம் சொல்லித் தந்தார்கள்.

பாடசாலையில் நடத்தப்படும் தமிழ்த்தினப் போட்டி உட்பட பொதுஅறிவு, திருக்குறள் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் பாடசாலை மட்டத்தில் பங்குபற்றினேன்.

எனது மனம் நிறைவான பத்திரிகை உதயன். அதனையே விரும்பிப் படிப்பேன். உதயனில் பிரசுரமாகும் சிறுவர் பகுதி, கல்விச்சுடர் அவற்றிலும் மேலாக ஆசிரியரது கருத்து என்னை மிக மிகக் கவர்ந்தவை. செய்திகளிலும் பார்க்க அதனையே முதலில் வாசிக்கும் பழக்கம் என்னிடம் உள்ளது. அதுமட்டுமல்லாமல் வரலாறு தொடர்பான சஞ்சிகைகள் வாசிப்பேன். குறிப்பாக- வரணி எமது பிரதேசம் - வரலாற்றுடன் தொடர்புடைய பிரதேசம். எனவே எனக்கு வரலாறு படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. எமது வரணிப் பகுதியில் சங்கிலித் திடல் என்ற பகுதி வரலாற்றுப் பாடத்துடன் தொடர்பானது. எனவே எதிர்காலத்தில் வரலாற்றை ஆய்வு செய்தல் வேண்டும் என்ற ஆர்வம் என்னிடம் உண்டு.

எனது கிராமத்திற்குச் சேவை செய்ய வேண்டும், ஆசிரியராக வேண்டும் என்ற ஆர்வமும் உண்டு.



## காயத்திரி பாலசுப்பிரமணியம்
### பெறுபேறு: 3ஏ (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

நான் எனது ஆரம்பக்கல்வியை மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றேன். அங்கு கற்பித்த ஆசிரியர்களின் ஊக்கம் எனக்குக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தியது. அந்த ஆசிரியர்களின் வழிகாட்டலின்படி கற்று தரம் 6இல் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இணைந்துகொண்டேன். பின்னர் உயர்தரம் வரை அப்பாடசாலையிலேயே ஊக்கத்துடன் கல்வி கற்றேன். சாதாரண தரத்தில் நான் எதிர்பார்த்த பெறுபேற்றைப் பெற முடியவில்லை. ஆதலால் உயர் தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் கலைப்பிரிவைத் தெரிந்தெடுத்து அதில் தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் ஒரே நோக்குடன் கற்றேன்.

நான் 3ஏ எனும் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்குத் தாயாரின் ஊக்கமும், மாமிமாரின் வழிகாட்டலும், சகோதரிகளின் ஒத்துழைப்பும், மாமாவின் ஆதரவும் காரணமாக அமைந்தது.

அத்துடன் பாடசாலை அதிபர், உபஅதிபர் ஆகியோரின் ஆதரவும் ஆசிரியர்களின் வழிகாட்டலும் நான் இப்பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள சாதகமாக அமைந்தது. இவர்கள் எனது நன்றிக்குரியவர்களாவர்.

மேலும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களின் வழிகாட்டலும், என்னுடன் கூட்டுறவுடன் தொழிற்பட்ட எனது நண்பிமாரும் நன்றிக்குரியவர்களே.

எனது இலட்சியம் நான் விரிவுரையாளராக வரவேண்டும் என்பதே ஆகும்.

சந்திப்பும், படங்களும்: ஔண்யன், அருணன், கணேசமூர்த்தி. 33



## சிந்துஜா செந்தில்ராஜா
### பெறுபேறு: 2ஏபி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

நான் எனது ஆரம்பக்கல்வியை நீர்வேலி சீ.சீ.தமிழ்க்கலவன் பாடசாலையில் பயின்று பின்பு ஆறாம் தரம் தொடக்கம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். கலைத்துறையில் எனக்கு இருந்த ஆர்வம் காரணமாக அத்துறையைத் தெரிவுசெய்தேன். அத்துறையில் தமிழ், இந்துநாகரிகம், அளவையியல் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்தேன்.

இப்பாடங்களைக் கற்பித்த ஆசிரியர்கள் தமது பாடங்களைச் செவ்வனவே கற்பித்து மேலும் நான் படிக்க ஊக்கம் தந்து சிறந்த பெறுபேற்றைப் பெற உறுதுணையாக அமைந்தனர். அவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். மற்றும் நான் விடாமுயற்சியுடன் கல்வியில் ஈடுபட்டு கடந்தகால பரீட்சை வினாத்தாள்ளை மீட்டல் செய்தல், பரீட்சைகளுக்குத் தவறாது சமுகமளித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் இச்சிறந்த பெறுபேற்றைப் பெற முடிந்தது. மேலும் எனது பெற்றோர், நண்பர்கள், சகோதரர் ஆகியோரும் ஊக்கமளித்தனர். இவர்கள் எல்லோரையும் எக்காலத்திலும் நான் நன்றியுடன் நினைவிற் கொள்வேன்.



## சுரேகா பரமானந்தம்
### பெறுபேறு: 2ஏபி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

நான் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் சாதாரண தரம் வரை கல்வி பயின்றேன். அங்கு படிக்கும் போதே பேச்சு, கவிதை, கட்டுரை போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது ஆர்வத்துக்கு ஆதரவாக அப்போதய அதிபர் திரு.ந.அரியரட்ணம் மற்றும் ஆசிரியர்கள் என்னை நெறிப்படுத்திப் போட்டிகளில் பங்குபற்றும் ஆவலைத் தூண்டினர். முதல் முதலாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கூடுதலான புள்ளியைப் பெற்று எனது பாடசாலையில் முதல்தர மாணவியாகத் திகழ்ந்த போது மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். அந்த நேரத்தில் பாடசாலைச் சமூகம், வடமராட்சி ஞானியார் கழகம், கெருடாவில் விவேகானந்தா, தொண்டைமானாறு கலைவாணி சனசமூக நிலையங்களும் என்னைப் பாராட்டிக் கௌரவித்தபோது தொடர்ந்து வரும் பரீட்சைகளிலும் சிறப்புத்தேர்ச்சி பெறவேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் தோன்றியது.

கலைத்துறையிலேயே நாட்டம் கூடுதலாக இருந்த காரணத்தினால் தமிழ், அளவையியல், பொருளியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். எனது உயர்தரக் கல்வியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கற்றேன். கல்லூரி விடுதியில் தங்கியிருந்து படித்தபோது அதிபரும், ஆசிரியர்களும், விடுதிப்பொறுப்பாளரும் என்னை நன்றாகக் கவனித்து வழிகாட்டியாகத் திகழ்ந்தனர்.

எனவே நான் நல்ல பெறுபேற்றைப்பெற முறைப்படி வழிகாட்டி, நெறிப்படுத்திய எனது பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலையத்தினர் அனைவருக்கும் நன்றி கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக விடுதியில் தங்கமுடியாத நிலை ஏற்பட்டபோது உதவிய நண்பி டிலானி குடும்பத்தினருக்கும், அறிவுரைகள் வழங்கி உற்சாகப்படுத்திய பாஸ்கரன் அண்ணா குடும்பத்தினருக்கும், நண்பர்கள், உறவினர்களுக்கும் பலகோடி நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பத்திரிகை வாசிக்கும் திறனும், நல்ல நண்பர்களாகத் திகழ்ந்த நூல்நிலையங்களுமே எனது கல்விக்கு மென்மேலும் உரமூட்டியதெனக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து அர்ப்பணிப்புடன் எனது பிரதேச மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.



## கார்த்திகா சாந்தலிங்கம்
### பெறுபேறு:2ஏபி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

நான் கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் எனது ஆரம்பக்கல்வியைப் பயின்று, பின்பே வேம்படி மகளிர் கல்லூரியில் இணைந்தேன்.

எனது சகோதரி கலைத்துறையைத் தெரிவு செய்து பல்கலைக்கழகத்தில் படிப்பதால் எனக்கும் கலைத்துறையில் அதிக நாட்டம் ஏற்பட்டது. அதனால் கலைத்துறையைத் தெரிவுசெய்தேன்.

பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் எனது சகோதரிகள் எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்ததுடன் கடவுளின் துணையும் பக்கபலமாக இருந்தது.

நான் பரீட்சைக்குத் தோற்றும்போது புவியியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்கள் ஒரே நாள் நடைபெற்றமையால் எனக்கு அவற்றைச் செய்யும்போது சிரமமாக இருந்தது. எனினும் அவற்றைச் சிறப்பாக எதிர்கொண்டேன்.

வினாக்கள் கடினமாக வரும் என எதிர்பார்த்தபோதும் அவை இலகுவாகவே வந்தன.

அத்துடன் நான் எதிர்பார்த்த பெறுபேறு கிடைத்தபோதும் எதிர்பார்த்த மாவட்ட நிலை கிடைக்காமை மனக்கவலைக்குரியதாக உள்ளது. இருப்பினும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுப் படிக்கக்கூடிய நிலை கிடைத்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது.

எதிர்காலத்தில் நான் ஆசிரியத்துறையில் ஈடுபடவே விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தின் பிரெஞ்சு மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ், கேடயம், சைவச் சிறுவர்கள் இல்லத்தில் நடந்த ஓவியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் ஆகியன வழங்கும் நிகழ்வு அண்மையில் கழகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் இலங்கை பிரெஞ்சு மொழிப் பாடசாலைகளின் இயக்குநர் பேர்ட் றொட் மாணவர் ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதை முதலாவது படத்திலும் யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தின் இயக்குநர் கலாநிதி ஜெராட் றொஷான் பிரெஞ்சு மொழியில் வாசிக்கும் கவிதையை கவிஞர் சோ.பத்மநாதன் தமிழில் வாசிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

நிலையத்தின் மாணவிகள் பிரெஞ்சுப் பாடல் இசைத்தபோது எடுக்கப்பட்ட படம் மூன்றாவதாக உள்ளது. நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருபகுதியினரை நான்காவது படத்தில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# இந்து சமுத்திரப் பகுதிகளிலிருந்து கடற்புலிகளை இல்லாமற் செய்துவிட்டோம் - ஜனாதிபதி

கொழும்பு,மார்ச்10

கடற்புலிகளின் பிரசன்னத்தை இந்து சமுத்திரப் பகுதியிலிருந்து முற்றாக ஒழித்து விட்டோம்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற கடற் படை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் இன்று (ஞாயிற்றுக்கிழமை) திருகோணமலையிலிருந்து உரையாற்றுகிறேன். இதில் முக்கியத்துவம் என்னவென்றால் பயங்கரவாதிகள் உருவாக்கத் திட்டமிட்டிருந்த ஈழம் எனும் நாட்டின் தலைநகரமாக திருகோண்மலையே அமையவிருந்தது.

பயங்கரவாதத்தின் நிழல்களைத் தொடுவானத்தின் தொலைதூரத்திற்கு அப்பால் துரத்திவிட்டோம் என முழு உலகிற்கும் - இவ்வேளையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்று தசாப்த காலமாக எம்மக்கள் எதிர் நோக்கிய கஷ்டங்கள் நீங்கி நாம் எடுத்த முயற்சியில் கடற்படை ஆற்றிய பங்கு மிகச் சிறப்பானது.

நாம் எமது கடற்படையை புறக்கணித்த காலத்தில் கடத்தல்காரர்கள் தமக்கெனத் தனிநாடொன்றை உருவாக்கும் கனவொன்றை உருவாக்கிக் கொண்டனர்.

எமது நாட்டை நேசிக்காத சிலர் சமாதான உடன்படிக்கை என்ற ஒன்றின் மூலம் திருகோணமலைஉட்பட நாட்டின் மூன்றில் இரண்டு பங்கை விட்டுக் கொடுத்ததால் எமது கடற்படை கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளானது.

## கடற்படையைப் பலப்படுத்தத் தவறியதால்...

எமது கடலோரப் பகுதிகளில் பயங்கரவாதிகள் தமது கடற்படை முகாம்களை உருவாக்க முடிந்தது. அவ்வேளை எமது அந்தத் தலைவர்கள் கடற்படையை பலப்படுத்தத் தவறியதே இதற்குக் காரணமாகும்.

பயங்கரவாதிகளின் அனைத்துக் கப்பல்களையும் எமது கடற்படை அழித்துவிட்டது. எமது துணிச்சல்களால் கடற்படை அதிகாரிகள் தேடி, கண்டுபிடித்து பயங்கரவாதிகளின் பத்து ஆயுதக் களஞ்சியங்களை அழித்தனர்.

பயங்கரவாதிகளைத் தரையில் அழித்தாலும் கூட கடலில் அழிக்க முடியாது எனச் சொன்னவர்களும் உள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கடற் கரும்புலிகளுக்கு என்ன நடந்தது என அவர்களே ஆச்சரியப்படுகின்றனர். எமது கடற்படையினர் இவ்வாறு அர்த்தமற்ற உண்மைகளை வெளியிட்ட பலரின் வாய்களை மூடியுள்ளனர்.



விடுதலைப் புலிகள் மிக நவீன சாதனங்களைப் பயன்படுத்தியதையும் நீர்மூழ்கிகளைக்கூட உருவாக்கியதையும் மறந்துவிடக்கூடாது.

இன்று கடற்புலிகள் இந்து சமுத்திரத்தில் இல்லை. இலங்கை கடற்படை இன்று இப் பகுதியை ஆதிக்கம் செய்கின்றது - என்றார். (அ-சி)

# ஆனைமடுவ வீதியில் விபத்து 5 பேர் பலி 11 பேர் காயம்

கொழும்பு,மார்ச்10

சிலாபம் - ஆனைமடுவ வீதியிலுள்ள பல்லாமப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் 5 பேர் உயிரிழந்தனர். 11 பேர் படுகாயமடைந்தனர்.

பிற்பகல் 3.30 மணியளவில் திருமண வைபவம் ஒன்றிற்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த வான் ஒன்றும் கப் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று கூறப்பட்டது.

உயிரிழந்தவர்களில் இரு சிறுவர்களும் அடங்குவர். காயமடைந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

# இறைவரித் திணைக்களப் பிரிவுகள் வேறு பகுதிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு,மார்ச்10

விடுதலைப் புலிகளின் விமானத்தாக்குதலால் சேதமடைந்த உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சில பிரிவுகளைக் கொழும்பில் வேறு பகுதிகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் காரணமாக ஏற்பட்ட கட்டடச் சிதைவுகளை அகற்றும் வரை திணைக்களத்தின் சில பகுதிகளை வேறு பகுதிக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

விமானத்தாக்குதல் காரணமாக கட்டடத்தின் பிரதான பகுதிக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லையென பொறியியலாளர்கள் உறுதி செய்துள்ளனர். எனினும் கட்டடச் சிதைவுகளை அகற்றும் வரை அங்கு பணியாற்ற முடியாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானத்தாக்குதலிற்குப் பின்னர் திணைக்களத்தின் 10 வீத பணிகள் மாத்திரமே இடம்பெறுகின்றன என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-சி)

# சோனியா காந்திக்கு ஜெயலலிதாவின் ஆலோசனை எதுவும் தேவையில்லை என்கிறார் அமைச்சர் வாசன்

திருவொற்றியூர்,மார்ச்10

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்திக்கு, அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதாவின் அறிவுரை தேவையில்லை என மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமுலாக்கத் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் ஒரே கருத்துடைய கட்சிகள் விரைவில் இணையும். பா.ம.க., தே.மு.தி.க., விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் குறித்த கேள்விகளுக்கும் இதே பதில் பொருந்தும். மதவாத சக்திகளுக்கு எதிராகக் கூட்டணி அமைத்து வெற்றிகரமாக வழிநடத்தி வருகிறார் சோனியாகாந்தி. இதனால் அவர் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை புகழ் பெற்றுள்ளார்.

இந்நிலையில் கூட்டணி குறித்து ஜெயலலிதாவின் அறிவுரை சோனியாவுக்குத் தேவையில்லை. மேலும் அதற்கான அவசியமும் இல்லை. இலங்கைத் தமிழர்களின் நலனுக்காகக் கடந்த 4 மாதங்களாக மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. ஆனால் திடீரென ஜெயலலிதா உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்துள்ளார். இதற்கான காரணத்தைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். மூன்றாவது, நான்காவது அணி குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணிதான் தேர்தலில் வெற்றிபெறப்போகும் முதல் அணி என்றார் வாசன்.



அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் குருளைச் சாரணர்களின் சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் ச.வேலழகன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், சாரணர் பொறுப்பாசிரியை செல்வி செ.ஜெயந்தி மற்றும் சாரண வள ஆளணியினர் ஆகியோர் எடுத்துக்கொண்ட படம். (72)

# மிதிவெடி அகற்றப்பட்ட இடங்கள் விரைவில் கையளிக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தால் மிதிவெடியகற்றப்பட்ட 7 இடங்கள் கையளிப்பதற்குத் தயாராக உள்ளன என நிறுவனத்தின் உயர்அதிகாரி எஸ்.டெனிஷன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு முற்பகுதியில் 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தால் மிதிவெடி அகற்றப்பட்டுள்ள அச்சுவேலி, அரியாலை, மட்டுவில், கோவிலாக்கண்டி, நாவற்குழி (இறால் பதனிடும் தொழிற்சாலை) ஆகிய பிரதேசங்களும் - 'டெனிஸ்' நிறுவனத்தால் மிதிவெடி அகற்றப்பட்டுள்ள ஊர்காவற்றுறை கரம்பொன் பிரதேசத் தில் இரண்டு பகுதிகளுமாக 7 இடங்கள் கையளிப்பதற்குத் தயார் நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார். (9)

# மின்சார சட்டத்தை எதிர்த்துப் போராட வரிந்து கட்டுகின்றது தொழிற்சங்கம்

கொழும்பு,மார்ச்10

இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கங்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த மாதம் மூன்றாம் திகதி நாடாளுமன்றில் நிறைவேற்றிய மின்சாரச் சட்டத்திற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சாரசபை தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விளக்கவென மின்சார சபை தொழிற்சங்கத்தினரால் நேற்றுமுன் தினம் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு கூறியவை வருமாறு:

எமது கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் மின்சாரத் திருத்தச்சட்டமூலம் இம்மாதம் மூன்றாம் திகதி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டமூலம் மின்சாரசபையைத் தனியார் மயமாக்கக்கூடியது என்பதால் நாம் அதற்கு எதிராகச் செயற்பட்டோம்.

ஆனால் எமது ஜனநாயகப் போராட்டம் நசுக்கப்பட்டது. இலங்கை மின்சாரசபைத் தலைமையகத்திற்கு முன்பாக எம்மால் தொங்கவிடப்பட்ட கறுப்புக் கொடிகள் பொலிஸாரால் அகற்றப்பட்டன. மூன்றாம் திகதி நாம் முன்னெடுக்கவிருந்த ஆர்ப்பாட்டம் பொலிஸாரால் தடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டங்களுடன் தொடர்புபட்டமைக்காக எமது தொழில் சங்கத்தினர் பழிவாங்கப்படுகின்றனர். தற்போது இரண்டு உறுப்பினர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அரசின் இந்தப் பழிவாங்கல் நடவடிக்கைக்கு எதிராகவும் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு எதிராகவும் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

அதன் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் தொடர்பாக மக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சியொன்றை இம்மாதம் 17ஆம் திகதி கொழும்பு பொது நூலகத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பொது அமைப்புகள் உள்ளிட்ட அனைத்துக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இதனைத் தொடர்ந்து இச்சட்டத்திற்கு எதிராக நாம் கட்டங்கட்டமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு மின்சாரத்தைத் தனியார் மயமாக்கும் அரசின் திட்டத்தைத் தோற்கடிப்போம் என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாச் சிறப்பு மலர்

## அருளாசிச் செய்தி



காராளசிங்கம் கணேசலிங்கம் அவர்கள் இன்று 50 ஆவது அகவையை அடைந்திருப்பதை இட்டு மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம். மக்களின் சேவையாகிய கிராம சேவை அலுவலராகக் கால் நூற்றாண்டு சேவையாற்றி அனைவருடைய நன்மதிப்பையும் பெற்று உள்ளார். எடுத்த விடயத்தைச் செவ்வனே ஆற்றும் ஆற்றல் உடையவர். எல்லோரோடும் இனிமையாகப் பழகும் சுபாபமும், குடும்பத்திற்கு நல்ல ஒரு தலைவனாகவும், எல்லோரோடும் நட்புறவுடன் பழகும் கணேசலிங்கம் இன்னும் இச்சேவையில் பல வளர்ச்சிகளையும் கண்டு சமுதாயத்திற்கும் சமயத்திற்கும் வேலணைப் பெருக்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்குச் சேவையாற்றும் தாங்கள் இன்று போல் என்றும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

## நல்வாழ்த்து



பொன்விழாக்காணும்காராளசிங்கம் கணேசலிங்கம் அவர்களுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வுறுகிறேன். வேலணைக் கிராமோதய சபையின் செயலாளராகவும், பின்னர் கிராம சேவை அலுவலராகவும் இவர் ஆற்றிவரும் பணிகளை அனைவரும் அறிவர். சீரிய செயற்றிறனும், சேவை உணர்வும் கொண்ட இவரது பணிகள் மேன்மேலும் தொடரவும் அதன் மூலம் எமது தாயக மக்கள் பயன் பல பெறவும் வேண்டுமெனவும் உளமார விரும்புகிறேன்.

பொன் விழாச் சிறப்புறவும், பொன் விழாமலர் பொலிவுறவும் வாழ்த்துகிறேன்.

மா.இளஞ்செழியன்,
மேல் நீதிமன்ற நீதிபதி, திருமலை.

## தன்னலமற்ற சேவையாளன்



காராளசிங்கம் கணேசலிங்கம் அவர்களின் பொன்விழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட கணேசலிங்கம் இளவயதிலிருந்து கிராம அபிவிருத்தி, இளைஞர் முன்னேற்றம் மற்றும் பிரதேச அபிவிருத்தியில் ஈடுபாடு கொண்டவராக இருந்து வருகின்றார். முதலில் விசேட அலுவலராக நியமனம் [10.02.1982] பெற்ற கணேசலிங்கம் 01.09.1987ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை கிராமசேவகனாகப் பணிபுரிகின்றார். இவர் சிறந்த அரச ஊழியராகவும், தன்னலமற்ற சேவை செய்பவனாகப் பிறராலும் பாராட்டப் பெற்றவர். மனிதநேயம் கொண்ட இவர் ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தப் பல வழிகளில் பாடுபட்டு வருகின்றவர். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்து நுண் திட்டங்களுக்கு, புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு நிதி பெறுவதில் திறமை பெற்றவனாக இருக்கின்றார். இவரது முயற்சியால் பல குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் மேம்பட்டு இருக்கின்றன. அன்பாகவும், பண்பாகவும் பழகும் கணேசலிங்கம் தொழில் துறையிலும், குடும்ப வாழ்விலும் மேலும் பல வெற்றிகள் காண வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை,
முன்னாள் துணைவேந்தர்.

## செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



கணேசலிங்கம் அவர்களின் பொன்விழாச் செய்தி அறிந்து பெருமகிழ்வடைகிறேன். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே" என்பதற்கமைய தான் பிறந்த மண்ணையும் தன் பிரதேச மக்களையும் நேசித்து நற்பணியாற்றி வருபவர் கணேசலிங்கம். ஒரு கிராமசேவையாளனுக்கு இருக்க வேண்டிய சேவை மனப்பாங்கு அனைத்தும் நிறையப் பெற்றவர். தன் பிரதேச மக்களின் தேவையறிந்து தேடிச் சென்று உதவுபவர். இறைநம்பிக்கை மிக்கவர். இதனால் சமயப் பணிகளையும் சமூகப் பணிகளையும் பயபக்தியோடு முன்னின்று செய்பவர். எடுத்த கருமத்தை நேர்த்தியாக, நிறைவாக ஆற்ற வேண்டும் என்ற நேர் மனப்பாங்கு மிக்கவர். சான்றோரைப் போற்றி மதிக்கும் பண்பாளன். இவரது உயர்ந்த உள்ளமும் உன்னத பணிகளும் மேன்மையுற எல்லாம் வல்ல துர்க்கையம்பாள் அருளை வேண்டிப் பிரார்த்திக்கிறேன். மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பல பணிகளால் எல்லா நிறைவுகளும் பெற மனமார வாழ்த்தி அமைகிறேன்.

ஆறு.திருமுருகன், தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



## திரு.காராளசிங்கம் கணேசலிங்கம்
### (கிராம சேவை அலுவலர் தரம் 1)
### பிறந்த திகதி - 10.03.1959

## சேவை விவரம்

| | |
|---|---|
| முதல் நியமனம் - 10.02.1982 | விசேடசேவை அலுவலர் |
| 10.02.1982 - 31.08.1987 | விசேடசேவை அலுவலர், வேலணை கிழக்கு/ வேலணை மேற்கு. |
| 01.09.1987-1990 | கிராமசேவை அலுவலர், வேலணை கிழக்கு ஜே/17 (2ஆம், 3ஆம், 4ஆம் வட்டாரங்கள்) |
| 1990 - 08.11.1995 | கிராமசேவை அலுவலர், வேலணை கிழக்கு, ஜே/14 (4 ஆம் வட்டாரம்) |
| 09.11.1995 - 05.05.1996 | கிராமசேவை அலுவலர், மந்துவில் கிழக்கு. |
| 06.05.1996 - 03.11.2003 | கிராமசேவை அலுவலர், வேலணை கிழக்கு, ஜே/14. |
| 04.11.2003 - 07.09.2004 | கிராமசேவை அலுவலர், வேலணை தெற்கு-ஜே/17. |
| 16.02.2004 - 25.01.2005 | பதில் -வேலணை வடக்கு- ஜே/12. |
| 31.10.2007 - 27.02.2008 | கிராமசேவை அலுவலர், புங்குடுதீவு வடமேற்கு - ஜே/32. |
| 01.03.2008 | இன்றுவரை- கிராமசேவை அலுவலர், சரவணை கிழக்கு - ஜே/20. |
| 03.03.2008 - 28.02.2009 - | பதில் - வேலணை மேற்கு - ஜே/19. |

## வாழ்த்துச்செய்தி



காராளசிங்கம் கணேசலிங்கம் கிராம அலுவலர். எமது பிரதேச செயலகக் கிராம அலுவலர் பிரிவுகளில் நீண்டகாலமாகச் சேவைபுரிந்து வரும் தரம் 1இனைச் சேர்ந்த அலுவலராவார். இவர் ஜே/12 வேலணை வடக்கு, ஜே/14 வேலணை கிழக்கு, ஜே/17 வேலணை தெற்கு, ஜே/18 வேலணை மேற்கு மத்தி, ஜே/20 சரவணை கிழக்கு ஆகிய கிராம அலுலவர் பிரிவுகளில் கடமை புரிந்தவர். அத்துடன் வேலணைப் பிரதேச மக்களுக்கு நன்கு பரிச்சயமானவர்.

இன்றைய தினம் [10.03.2009 செவ்வாய்க் கிழமை] தனது 50ஆவது பிறந்த தினத்தினைக் கொண்டாடும் காராளசிங்கம் கணேசலிங்கம் கிராம அலுவலர் அவர்கள் இன்னமும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இப்பிரதேச மக்களுக்கு நற்சேவை புரியவேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

மு.நந்தகோபாலன்,
பிரதேச செயலர், வேலணை.

## வாழ்த்துரை



பொன் விழாக் காணும் கா.கணேசலிங்கம் அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வுறுகிறேன். 10.02.1982 இல் வேலணை கிழக்கு கிராமோதயசபை உருவான போது அதன் தலைவராக நான் தெரிவு செய்யப்பெற்றேன். அச் சபையின் செயலாளராக் கணேசலிங்கம் நியமனம் பெற்றார். 31.08.1987 வரை இயங்கிய இச்சபை மேற்கொண்ட பணிகள் பற்பல. இவற்றிற்கெல்லாம் உந்து சக்தியாக விளங்கியவர் கணேசலிங்கம் என்றால் மிகையல்ல. வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமோதய சபைகளுக்குள் மிகச் சிறந்த .கிராமோதய சபையாக 1984இல் தெரிவு செய்யப்பட்டு 10 000 ரூபா பரிசினையும் பெற்றதற்கு இவரது அயராத உழைப்பும், நிருவாக ஆற்றல்களுமே அடித்தளமாக அமைந்திருந்த தென்பதை இவ் வேளையில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

01.09.1987ஆம் ஆண்டு முதல் கிராம சேவையாளராக நியமனம் பெற்று இன்று வரை வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் பணியாற்றி வருகின்றார். நெருக்கடியான கால கட்டத்தில் மக்களின் நன்மை கருதி இவராற்றிய பணிகள் பாராட்டுக்குரியவை. இவரது சேவைகள் மேன்மேலும் தொடரவும் அதன் மூலம் மக்கள் பயன் பெறவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ச.மாணிக்கவாசகர்,
செயலாளர்,
வேலணை வரலாற்று நூலாக்கச் சபை,
அகில இலங்கை சமாதான நீதிவான்.

## மதிப்புக்குரிய கிராமசேவை அலுவலர்

காராளசிங்கம் கணேசலிங்கம் அவர்களின் பொன்விழா மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வுறுகின்றோம். வேலணைப் பிரதேசத்தில் நீண்டகாலம் கடமையாற்றிய, கடமையாற்றிக் கொண்டிருக்கும் எமது மதிப்புக்குரிய கிராம சேவை அலுவலர் பல வழிகளிலும் பிரதேச மக்களுக்குச் செய்த உதவிகளும், அதனால் மக்கள் பெற்ற நன்மைகளும் பற்பல. 1989ஆம் ஆண்டுகளில் இவரின் கடுமையான முயற்சியால், புனர்வாழ்வு நடவடிக்கையில் மிகவும் பாதிப்புற்றிருந்த கடல்தொழில், விவசாய குடும்பங்கள் பலருக்குச் சுயதொழில் முயற்சி நன் கொடைப்பணம் பெற்றுக் கொடுத்து மக்களின் நன் மதிப்பைப் பெற்ற பெருந்தகை. இவரின் சேவைகள் மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பொன் விழா அமைப்புக் குழுவினர்,
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவலத்தைச் சந்தித்து நிற்கும் வன்னி மக்களுக்கு உணவு, மருத்துவ உதவிகளை உடன் வழங்குங்கள்

## புலம்பெயர்ந்த மற்றும் தமிழக உறவுகளிடம் வேண்டுகோள்

வன்னியில் பேரவலத்தைச் சந்தித்து நிற்கும் மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வளங்களை உடனடியாக அனுப்பிவைப்பதன் மூலம் எமது மக்களின் உயிர்காப்பை உறுதிப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு வன்னி மக்கள் நலன் பேணும் அமைப்பு புலம்பெயர்ந்த மற்றும் தமிழக மக்களிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாத்தளனில் இயங்கும் வன்னி மக்கள் நலன் பேணும் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் பி.கனகலிங்கம் கடந்த வியாழக்கிழமை அறிக்கையினை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

21 ஆம் நூற்றாண்டில் இப்படியொரு கொடூர மனிதப் படுகொலைகளா என மனித சமூகம் வெட்கித் தலைகுனியக் கூடிய அளவில் சிறிலங்கா அரசாங்கத்தின் இன அழிப்பு இருக்கின்றது.

இது குறித்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தீவிர எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் இது தொடர்பாக அனைத்துலக நாடுகளோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையோ பாராமுகமாக இருக்கின்றது என்பதால் வன்னி மக்கள் நலன் பேணும் அமைப்பு தங்களுக்கு அவசரமான வேண்டுகோளை முன்வைக்கின்றது.

கடந்த இரு மாதங்களாக சிறிலங்கா அரச படைகளால் 2,500 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டும் 4,000 இற்கும் அதிகமான மக்கள் காயமடைந்தும் உள்ளனர். இது ஒரு அப்பட்டமான இன அழிப்பு என்றபோதும் ஐக்கிய நாடுகள் சபை அக்கறை கொள்ளாமை ஐக்கிய நாடுகள் சபை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

நாங்கள் உணவு, மருந்து மற்றும் உறையுள் என அடிப்படை வசதிகள் அற்று மனித வாழ்வியலுக்கு பொருந்தாத வாழ்வை வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் தொடர்ச்சியான போர் காரணமாக வன்னியில் வாழும் சுமார் நான்கு லட்சத்திற்கும் அதிகமான மக்களாகிய நாங்கள் உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்றி மாபெரும் மனித பேரவலத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம்.

இது குறித்து நாங்கள் அனைத்துலக சமூகத்திற்கு முறையிட்டபோதும் இது தொடர்பாக எங்களுக்கு எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை என்பது எங்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிப்பதாக உள்ளது.

இந்நிலை நீடித்தால், எமது மக்கள் தொடர்ந்து மரணமடைந்தும் பட்டினிச் சாவை எதிர்கொள்ளவும் நேரிடும். இவ்வாறான சூழ்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் துணை அமைப்புக்கள் எங்களுக்கு துணையிருக்கும் என எண்ணினோம். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை எங்களை கைவிட்டுவிட்டதாகவே நாங்கள் கருதுகின்றோம்.இந்தவேளையில் வன்னி மக்களின் உயிர் காப்பாற்றப்படவேண்டும். எமது மக்கள் பல வழிகளிலும் அரசால் கொல்லப்படுவதை உலகம் மௌனமாக அனுமதிப்பது போல் உணர்கின்றோம்.

இவ்வாறான சூழ்நிலையை முறியடிக்கக்கூடிய வல்லமையை புலம்பெயர் வாழ் எம் தமிழ் உறவுகளுக்கு இருப்பதாகவே நாங்கள் நம்புகின்றோம்.

தற்போது வன்னியில் உணவு, மருந்து கையிருப்பு முற்றாக தீர்ந்துபோய் உள்ளது. இதுவரை பலர் பட்டினிச் சாவை அடைந்துள்ளனர். இத்தொகை மேலும் அதிகரிக்கக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வன்னிப் பகுதியில் பொதுமக்கள் எவரும் பட்டினியால் சாகவில்லை என்கிறது அரசு

கொழும்பு, மார்ச்.10

ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவிப்பது போல வன்னியில் பொதுமக்கள் எவரும் பட்டினியால் சாகவில்லையென இலங்கை அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

வடக்கில் பொதுமக்கள் பட்டினியால் சாவதாக வன்னியிலுள்ள வைத்தியர் ஒருவரினது கடிதத்தின் அடிப்படையிலேயே ஐ.நா.வின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இந்த செய்தி வெளியிடப்பட்டிருக்கின்ற போதிலும் அதுபோன்ற துன்பகரமான சம்பவம் எதுவும் இடம்பெற்று விடாமலிருக்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்றும் தெரிவித்திருக்கிறது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் பட்டினியால் சாவதாக ஐ.நாவை மேற்கோள்காட்டி உள்நாட்டு ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

இதேவேளை, சுகாதார சேவைக்கான முல்லைத்தீவு வலயப் பணிப்பாளர் டாக்டர் வரதராஜா முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுதிய கடித்தத்தின் அடிப்படையிலேயே இந்த அனைத்து ஊடக செய்திகளும் வெளியாகியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக் காட்டியிருக்கிறது.

அத்துடன் புதுமாத்தளன் வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்ட 13 சடலங்கள் தொடர்பாக பிரதேச பரிசோதனை நடத்தி உயிரிழப்புக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் பட்டினி காரணமாகத்தான் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பதாக அரசாங்க அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்தது தொடர்பாக டாக்டர் வரதராஜாவிடம் சுகாதார அமைச்சின் செயலாளர் விளக்கம் கேட்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

இதேநேரம் டாக்டர் வரதராஜாவின் இந்தக் கடிதமானது நிவாரணப் பணிகளில் சம்பந்தப்பட்டிருந்த இராஜதந்திரி ஒருவராலேயே எடுத்துச்செல்லப்பட்டு ஐ.நாவின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் பின்னர் அது சர்வதேச செய்தி முகவர் நிலையத்தினால் விடயமாக எடுக்கப்பட்டதுடன் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினாலும் அது பயன்படுத்தப்பட்டிருந்தது.

அது மட்டுமல்லாது மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையும் அதேசெய்தி நிறுவனத்தினால் செய்தியாக வெளியிடப்பட்டதுடன் விடுதலைப்புலிகள் சார்பான இணைத்தளங்களிலும் அந்த அறிக்கை வெளியாகியிருந்தது. எனினும் டாக்டர் வரதராஜாவின் அறிக்கையை மீள் பிரசுரித்த எவரும் அதுபற்றிச் சுகாதார அமைச்சின் விளக்கத்தை பெற சிரமப்பட்டிருக்கவில்லை.

எனவே, மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்கள் குறித்து சம்பந்தப்பட்ட பொறுப்புமிக்க தரப்பினரிட மிருந்து விளக்கங்களைப் பெறாமல், தெளிவுபடுத்திக் கொள்ளாமல் செய்திகளையோ அறிக்கைகளையோ வெளியிடுவது கவலைக்குரிய விடயமாகும்.

ஏனெனில், இலங்கையின் உண்மையான நிலவரத்தை திரிபுபடுத்திக் கூறும் நோக்கத்திலும் இலங்கை அரசாங்கத்துக்கும் வடக்கில் உள்ளூரில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களை விடுவிக்க மேற்கொள்ளப்படும் அதன் முயற்சிகளுக்கும் அவப்பெயர் ஏற்படுத்தும் வகையிலுமே இவ்வாறான தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நலன்புரி முகாம்களிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மனிதக் கேடயங்களாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மக்கள் என வடக்கில் உள்ள அனைத்து மக்களுக்கும் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை வழங்குவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்திருக்கிறது என்றும் பாதுகாப்பு அமைச்சினால் மேலும் சுட்டிக்காட் டப்பட்டிருக்கிறது.





COM BANK e Exchange ஊடாக வெளிநாட்டிலிருந்து பணத்தைத் தருவித்து

தலா ரூ.100,000 பரிசினை வென்ற கடந்த மாதங்களின் வெற்றியாளர்கள்

**2008 டிசெம்பர்**

**திரு. கே. கணேஷன்**
81/160, அம்ரோஸ் வீதி, கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு.
(கட்டாரில் இருந்து)

**ஜனாப் எம்.ஐ. மொகமட் மாபாஸ்**
13/18, ரகுமானா வீதி, நீர்கொழும்பு.
(பிரிட்டனில் இருந்து)

**2009 ஜனவரி**

**திருமதி சுனீதா ஹேரத் மெனிக்கே**
852, பல்வெஹர, தம்புள்ளை.
(குவைத்தில் இருந்து)

**திரு. கிருஷ்ணசாமி ரவி குமார்**
போர்த் எஸ்டேட், ஹொரணை.
(ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து)

COMBANK Exchange MONEY TRANSFER

டிசெம்பர் மாதம் முதல் எதிர்வரும் ஏப்பிரல் 2009 வரை மாதாந்தம் 3 வெற்றியாளர்களுக்கு தலா ரூ.100,000/-
இன்றே COM BANK e Exchange மூலமாக பணத்தை அனுப்பும்படி வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அறிவியுங்கள். COM BANK e Exchange அதிவிரைவானது, நம்பிக்கையானது, இலங்கையின் எப்பகுதியிலும் பணத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

011 2 353 577

கொமர்ஷல் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12ஆயிரம் அமெ. சிப்பாய்களை ஈராக்கிலிருந்து வெளியேற ஏற்பாடு

பக்தாத், மார்ச் 10

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவச் சிப்பாய்களில் சுமார் 12 ஆயிரம் சிப்பாய்கள் இவ்வருட செப்ரெம்பருக்குள் அங்கிருந்து வெளியேறிவிடுவர் என ஞாயிற்றுக்கிழமை அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஈராக்கின் தலைநகரான பக்தாத்திலும் அன்பார் மாகாணத்திலுமுள்ள சிப்பாய்களே வெளியேறவுள்ளார்கள். ஒரு காலத்தில் இவ்விரு பகுதிகளுமே அகோர யுத்தக் களங்களாக மாறியிருந்தன என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இந்த இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் 74 இக்கு மேற்பட்ட இராணுவ மையங்களும் பகுதிகளும் உள்ளன. இவை அனைத்தும் இம்மாத (மார்ச்) இறுதிக்குள் ஈராக்கியப் படைகளிடம் கையளிக்கப்பட்டுவிடும். படை வாபஸுக்கு இக்கையளிப்பு ஒரு முன்னோடி நடவடிக்கையாக அமையும் என்றும் அவ் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஈராக்கில் தற்போது, 4 ஆயிரம் பிரிட்டிஷ் துருப்புகள் எஞ்சியுள்ளன. இத்துருப்புகளும் இவ்வருட செப்ரெம்பருக்குள் ஈராக்கை விட்டு வெளியேறிவிடும். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரிட்டனும் இது விடயத்தில் உறுதிப்படாக உள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தின் பேச்சாளர் மேஜர் ஜெனரல் டேவிட் பேர்கின்ஸ், ஈராக்கின் பாதுகாப்பு நிலைவரம் பெரிதும் அபிவிருத்தியடைந்துள்ளது என திருப்தி தெரிவித்தார். ஆட்டங்கண்டிருந்த ஈராக்கின் ஸ்திரப்பாடு உறுதியடைந்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஈராக்கிய பிரதமர் நூரி அல்-மாலிகி ஞாயிற்றுக்கிழமை அரச தொலைக்காட்சிக்கு தாம் அளித்த பேட்டியொன்றில் அமெரிக்கப் படை வாபஸை ஊர்ஜிதப்படுத்தினார்.

''அமெரிக்கப் படைகள் வகித்த பொறுப்பை ஈராக்கியப் படைகள் ஏற்கும். எனினும், ஈராக்கிய இராணுவத்துக்கும், பொலிஸாருக்கும் மேலதிக ஆயுதங்கள் தேவை. இத்தேவையும் பூர்த்தி செய்யப்படும். உள்ளகப் பாதுகாப்புக்கு இது மிக மிக அவசியமாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்தால் ஏற்படும் இடைவெளியை நிரப்பக்கூடிய தகுதி ஈராக்கியப் படைகளிடமுண்டு. ஈராக்கிய அரசுக்கு இதில் நம்பிக்கையுண்டு'' என்றும் பிரதமர் மாலிகி தெரிவித்துக்கொண்டார்.

## அமெரிக்க மாநிலத்தில் போதகர் மீது சூடு

அமெரிக்க மாநிலமான இலினோயிஸிலுள்ள தேவாலய போதகர் பிரட் விண்டஸ், துப்பாக்கிதாரி ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றும் பலர் காயமடைந் தனர் என மாநில பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

இலினோயிஸில் உள்ள மேரிவிலி என்னுமிடத்தில் இத்தேவாலயம் அமைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பிரார்த்தனை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, தேவாலயத்துக்குள் நுழைந்த துப்பாக்கிதாரி, போதகருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என அதிகாரி ரல்ப் டிமின்ஸ் தெரிவித்தார்.

''வாக்குவாதம் உச்சக்கட்டத்தை அடைந்த சமயம், துப்பாக்கிதாரி போதகரை சுட்டார். அத்துடன் தான் வைத்திருந்த கத்தியொன்றை உருவி தன்னைத்தானே குத்திக் கொண்டார்'' என்றும் அவர் பி.பி.ஸி. செய்திச்சேவைக்குத் தெரிவித்தார்.

# அமெரிக்கப் பொருளாதாரம் குறித்த அச்சத்தை தவிர்க்கக் கோருகிறார் ஒபாமா

நியூயோர்க், மார்ச் 10

''அமெரிக்கப் பொருளாதாரத்தை மந்த நிலையிலிருந்து மீட்டுவிட முடியும். வீண் அச் சத்தையும் சந்தேகங்களையும் ஒதுக்கி வையுங்கள்.'' என நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி பராக் ஒபாமா உறுதிமொழி அளித்துள்ளார்.

'நியூயோர்க் ரைம்ஸ்' நாளிதழில் ஞாயிற்றுக்கிழமை பிரசுரமான தமது பேட்டியில் அவர் இந்த உறுதியை அளித்திருக்கிறார்.

''நம்முடைய எதிர்காலம் குறித்து மக்கள் அஞ்சி நடுங்கிக்கொண்டிருக்க வேண்டும் என நான் நினைக்கவில்லை. நம் நாட்டு நிதி நிறுவனங்கள் எல்லாவற்றின் மீதும் திடீரென நாம் சந்தேகம் கொள்வதற்கான காரணங்களும் இல்லை'' என்றும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் காரணமாகப் பொருளாதாரம் மீட்சி பெறும். ஆனால், இந்த ஆண்டே மீட்சி பெறுமா அடுத்த ஆண்டு மீட்சி பெறுமா என்றெல்லாம் கேட்டால் என்னிடம் பதில் இல்லை. அதேசமயம், நம் நாட்டு மக்களும் தொழில், வணிகத்துறையினரும் மனம் தளராமல் மேற்கொள்ளும் தொடர் நடவடிக்கைகளைப் பொறுத்துத்தான் மீட்சி இருக்கும் என்பது மட்டும் உறுதி'' என்றும் அவர் கூறியுள்ளார்.

''ஏற்கனவே அரசு செலவிட்ட 37,50,000 கோடி ரூபா போதவே போதாது. இன்னும் அதைப் போன்றதொரு தொகையையோ அதைவிட அதிகமாகவோ செலவழிக்க வேண்டியிருக்கும். மக்களுடைய நிலைமையை மனதில் கொண்டே வரி விதிப்புகளில் சலுகைகளை அறிவித்தேன். மக்களுடைய சுகாதாரத் திட்டங்களுக்கு அரசு செலவிடும் தொகையை அதிகப்படுத்தினேன். நம் நாட்டு தொழில், வணிகத் துறைகளின் கொள்கைகளால் புவி வெப்பமடையும் போக்கைத் தணிக்க சில உத்தரவுகளைப் பிறப்பித்தேன். இவற்றை வைத்து நான் சோஷலிஸப் பாதைக்குச் செல்கிறேன் என மாற்றுக் கட்சியினர் விமர்சிப்பது சரியல்ல'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அமெரிக்கச் சந்தையில் தொழில்துறை உற்பத்தியாளர்களும் விவசாய சாகுபடியாளர்களும் நஷ்டம் அடையாமல் இருக்கத் தலையிடுவது என்ற கொள்கையை எனக்கு முன்னர் பதவி வகித்த ஜோர்ஜ் புஷ்ஷும் கடைப்பிடித்தார். நெருக்கடியான நிலையில் நாடு இருப்பதால், சமூக நலத்துறையில் செய்யப்படும் செலவுகளை அரசே ஏற்கட்டும் என்று உத்தரவிட்டிருக்கிறேன்.'' என்றும் ஒபாமா பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''நெருக்கடியான காலகட்டம் என்பதால் உங்கள் செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள் என நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்காகக் கஞ்சர்களாக இருக்காதீர்கள். சிக்கனம் வேறு, கஞ்சத்தனம் வேறு. கையிலிருக்கும் ரூபா நோட்டுக்களை தலையணையில் பத்திரப்படுத்தி வைக்கக்கூடாது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இப்போது நீங்கள் பார்க்கும் நெருக்கடிகளுக்குக் காரணமே ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் அச்ச நிலைவரம்தான். பொருளாதாரம் அங்கு நசிந்துவிட்டால் அதன் எதிரொலியாக இங்கும் சுணக்கம் காணப்படுகிறது. நம்முடைய பொருளாதாரத்தைத் தாங்கிப்பிடிக்கும் அங்கங்கள் வலுவாக உள்ளன. எனவே, கவலைப் படத் தேவையில்லை.'' என்றும் பராக் ஒபாமா ஆறுதல் தெரிவித்துள்ளார் .

# சூடானின் இஸ்லாமியத் தலைவர் விடுதலை

காா்ட்டூம், மார்ச் 10



சூடானிய ஜனாதிபதி ஒமர் அல்-பஷீரை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சரணடையுமாறு கோரிக்கை விடுத்தமைக்காக, கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த சூடானிய இஸ்லாமியத் தலைவர் ஹஸன் அல்-துராபி விடுதலை செய்யப்பட்டார்.

ஜனாதிபதியை சரணடையுமாறு விடுத்த கோரிக்கையை அடுத்து, இவர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். அது முதல் சிறைவைக்கப்பட் டிருந்த இவர் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

''எனது தந்தை விடுதலை செய்யப்பட்டு, தலைநகரான கார்ட்டூமிலுள்ள எங்கள் வீட்டுக்கு வந்துள்ளார்'' என இவரது புதல்வர் சித்தீக் அல்-துராபி ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

தேசிய இஸ்லாமிய முன்னணியின் தலைவராகவும் பதவி வகிக்கும் ஹஸன் அல்-துராபி, சூடானிய நாடாளுமன்ற சபாநாயகராகவும் இருந்துள்ளார். 10 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் ஜனாதிபதி ஒமர் அல்-பஷீரின் நெருங்கிய சகாவாகவுமிருந்தார்.

# பாக். இராணுவக் காவலரண் மீது தாக்குதல்; தீவிரவாதிகள் நால்வர் பலி

இஸ்லாமாபாத், மார்ச் 10

பாகிஸ்தானின் பஜூர் மாவட்டத்திலுள்ள நவகாய் பகுதியிலுள்ள இராணுவ காவலரண் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இரவு தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. பாகிஸ்தான் துருப்புகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் என இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

சிரேஷ்ட தலிபான் தலைவர் பாகீர் மொஹம்மத் பெப்ரவரி 23 ஆம் திகதி வானொலி உரை மூலமாக ஒருதலைப்பட்ச போர்நிறுத்தப் பிரகடனம் செய்தார். அதற்குப் பின்னர் இடம்பெற்ற முதல் தாக்குதல் இதுவாகும் என்றும் அது குறிப்பிட்டது.

பாகிஸ்தானின் முக்கிய தலிபான் கொமாண்டரான பைத்துல்லா மெஹ்சூட்டின் நெருங்கிய உதவியாளராக பாகீர் மொஹம்மத் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளார்.

''பஜூர் மாவட்டம் ஆப்கான் எல்லைக் கருகில் அமைந்துள்ளது. இங்கு பழங்குடி மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். இம்மாவட்டத்திலுள்ள மொஹ்மாந்தின் தென் எக்கா குண்ட் என்னுமிடத்தில் 'ஹாஸடாஸ்' என்னும் பழங்குடி மக்களின் பொலிஸ் அமைப்பைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளார்கள்'' என உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''இப்பகுதிக்குள் சனிக்கிழமை தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள். அப்போது இந்த பொலிஸ் அமைப்பைச் சேர்ந்த 14 உறுப்பினர்களும், உள்ளூர் நிர்வாக சபை அதிகாரிஒருவரும் காணாமற் போய்விட்டனர். மறுதினமான ஞாயிற்றுக்கிழமை அருகிலுள்ள பள்ளத் தாக்கில் இவர்களின் சடலங்கள், கிராம வாசிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன'' என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

உலக அரங்கில்

# தலாய்லாமாவை அனுமதியாதீர்; சகல நாடுகளிடமும் சீனா கோரிக்கை!

தலாய்லாமாவை எந்த நாட்டினரும் தங்கள் நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

திபெத் பகுதியை கடந்த 1950 ஆம் ஆண்டிலிருந்து சீன இராணுவம் ஆக்கிரமித்து வருகிறது. அதை எதிர்த்து தலாய்லாமா கடந்த 1959 ஆம் ஆண்டு நடத்திய புரட்சி, தோல்வியில் முடி வடைந்தது. இதையடுத்து, அவர் திபெத்தை விட்டு வெளியேறினார்.

அவர் அங்கிருந்து வெளியேறிய 50 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று 10 ஆந் திகதி கொண்டாடப்படவுள்ளது.

தலாய்லாமா ஒரு பிரிவினைவாதி என சீனா குற்றம் சாட்டிவருகிறது. ஆனால் அவரோ, திபெத்துக்கு சுயாட்சி அளித்தால் போதும் என தெரிவித்து வருகிறார்.

இந்தநிலையில், தலாய்லாமா, உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து திபெத்துக்கு ஆதரவு திரட்டி வருகிறார். இது சீனாவுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. தலாய்லாமா, சமீபத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியை சந்தித்துப் பேசினார். அவரது சிறப்புப் பேட்டியை ஜேர்மன் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இதையொட்டி பிரான்ஸ், ஜேர்மனி மட்டுமின்றி உலக நாடுகளுக்கும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து சீனா வெளியுறவுத்துறை அமைச்சர் யங் ஜெய்ச்சி குறிப்பிடுகையில், ''சீனாவின் கால்பங்கு நிலப்பகுதியை பிரித்து தாங்கள் சுதந்திர திபெத் அமைக்கப் போகின்றனர் என தாய்லாமா ஆள்கள் இன்னும் கூறி வருகிறார்கள். திபெத்தில் பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் சீனர்களை, வேறு இடங்களுக்கு செல்லுமாறு வலியுறுத்துகிறார்கள். சீன இராணுவத்தையும் அங்கிருந்து துரத்த விரும்புகிறார்கள். இத்தகைய காரியங் களை முடுக்கிவரும் தலாய்லாமாவையா ஆன் மீகவாதி எனக் கூறுகிறீர்கள்?'' எனக் கேட்டுள்ளார்.

''சீனாவின் உறவு வளர்ந்து வரும் நிலையில், தலாய்லாமாவை எந்த ஒரு நாட்டினரும் தங்கள் நாட்டுக்குள் வர அனுமதிக்கக் கூடாது. திபெத் சுதந்திரத் துக்கான பிரசாரத்துக்கு தங்கள் நாட்டு மண்ணை தலாய்லாமா பயன்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது'' என்றும் அவர் கோரியுள்ளார்.

''ஜேர்மனியோ, பிரான்ஸோ அல்லது இதர நாடுகளோ தம் நாட்டின் கால்பங்கு நிலப்பகுதியை தனிநாடாகப் பிரித்துக் கொடுக்க சம்மதிக்குமா? இரண்டாக இருந்த ஜேர்மனி, ஒன்றாக இணைய சீனா ஆதரவு அளித்தது. அதை மனதில் கொண்டு செயற்பட வேண்டும்'' என்றும் அவர் கேட்டுள்ளார்.

இதற்கிடையே, ஜேர்மனி பத்திரிகைக்கு தாம் அளித்துள்ள பேட்டியில், ''திபெத்தில் பதற்றம் நி[illegible] கலவரம் [illegible] உண்டு'' என தலாய்லாமா கூறியுள்ளார்.

# மும்பைத் தாக்குதல் குறித்த சந்தேகங்களுக்கு இந்தியாவைப் பதில்தரக் கோருகிறது பாகிஸ்தான்

மும்பைத் தாக்குதல் தொடர்பாக தாங்கள் எழுப்பியுள்ள 30 சந்தேகங்களுக்கு இந்தியா இயன்றவரை அதிவிரைவில் பதில் அளிக்க வேண்டும் என பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானின் உள்துறை அமைச்சக தலைவர் ரெஹ்மான் மாலிக் இஸ்லாமாபாத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களுக்கு தாம் பேட்டியளித்தபோது இந்த கோரிக்கையை விடுத்தார்.

அவர் தம் பேட்டியில் குறிப்பிட்டவை வருமாறு :-

''மும்பைத் தாக்குதல் தொடர்பாக நாங்கள் கோரிய ஆதாரங்களை இந்தியா ஜனவரி 5 ஆம் திகதி அளித்தது. இவற்றை நாங்கள் உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொண்டோம். விசாரணையில் கிடைத்த தகவலின்படி சந்தேகிக்கத்தக்க 4 தீவிரவாதிகளை கைது செய்துள்ளோம்.

''அவர்கள் அனைவரையும் பொலிஸ் காவலில் வைத்து தீவிரமாக விசாரித்து வருகிறோம். எனினும், மும்பைத் தாக்குதல் தொடர்பாக இந்தியா அளித்துள்ள ஆதாரங்கள் சிலவற்றில் சந்தேகங்கள் எழுந்துள்ளன. அந்தவகையில் 30 கேள்விகளை நாங்கள் எழுப்பி, அவற்றுக்குரிய விளக்கம் அளிக்குமாறு இந்தியாவை கேட்டுள்ளோம்.

''30 கேள்விகள் அனுப்பிவைக்கப்பட்டு பல நாள்கள் ஆகிவிட்டன. எனினும், இவற்றிற்கு இன்னும் உரிய பதிலை இந்தியா அளிக்கவில்லை. அது தொடர்ந்தும் தாமதப்படுத்தி வருகிறது. இதனால் மும்பைத் தாக்குதல் விசாரணையில் சிறிது தொய்வு ஏற்பட்டுள்ளது. மும்பைத் தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்பதில் பாகிஸ்தான் உறுதியாகவுள்ளது.

''இதற்கு இந்தியா உறுதுணையாக இருக்க வேண்டும். எங்களது சந்தேகங்களுக்கு உடனுக்குடன் பதில் அளித்தால் விசாரணையை துரிதமாக மேற்கொள்ள உதவியாக இருக்கும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மீதுள்ள கோபத்தை வெளிக்காட்டவே உண்ணாவிரதம் இருந்தார் ஜெயலலிதா!

## ஈழத் தமிழருக்காக அல்ல என்கிறார் கருணாநிதி



என் மீதுள்ள கோபத்தைக் காட்டவே ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்தார் என்றும் - இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியோ, சிங்கள அரசைப் பற்றியோ, மத்திய அரசைப் பற்றியோ அவருக்கு கவலையோ, கோபமோ இல்லை என்றும் முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய ஜெயலலிதாவின் மேடையில், கையாலாகாத கருணாநிதி - ஆட்சித் திறமையின்மை என்றெல்லாம் திட்டிய வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஜெயலலிதாவிற்கும், அவருடைய கட்சியினருக்கும் கோபம் என் மீதுதான் என்றும் - இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியோ, சிங்கள அரசைப் பற்றியோ, மத்திய அரசைப் பற்றியோ அவர்களுக்கு கவலையோ கோபமோ இல்லை என்றும் தெரிகிறது அல்லவா? செட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் வெளியாகும் என்பார்கள், அம்மையாரின் புளுகு ஒரே நாளில் வெட்ட வெளிச்சமாகி விட்டது; அதுவும் அந்த உண்ணாவிரத மேடையிலேயே!

உண்ணாவிரத மேடையில் இலங்கைத் தமிழர்களுக்காக நிதி திரட்ட உண்டியல் வைக்கப்படும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

தமிழக அரசின் சார்பில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நிதிக்காக என்று உண்டியல் மூலமாக அல்ல - காசோலையாக மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும் என்று கூறி - ஒவ்வொரு காசோலையை வழங்கியவரின் பெயரும் ஏடுகளில் அறிவிக்கப்பட்டு, அந்தத் தொகை முழுவதும் அரசின் நிதித்துறை மூலமாக வரவு வைக்கப்பட்டு - ரசீதுகளும் வழங்கப்பட்டபோது - அந்த நிதியை நான் என் குடும்பத்திற்குச் சொந்தமாக்கி விட்டேன் என அறிக்கை விடுத்ததும் இதே ஜெயலலிதாதான்.

15.10.2008 அன்று ஜெயலலிதா இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஒரு அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் இலங்கையில் தற்போது நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம், இந்திய அரசிடம் இல்லை என்றும், இலங்கை உள்நாட்டு விடயத்தில் இந்திய அரசு தலையிட்டால் பின்னர் நம் நாட்டு உள் விவகாரத்தில் அண்டை நாடுகள் தலையிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அது இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிப்பதாக அமையும், அடுத்த நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளாது என்று முழங்கினார்.

ஆனால் அப்போது தேர்தல் ஒன்றுமில்லை. அதனால் பாண்டியன் பக்கமேளம் வாசிக்க - நல்லகண்ணுக்கள் நால்வகைப் படையுடன் உடன்வர; இப்போது இலங்கை மீது ஜெயா பாய்வதற்குக் காரணம் நாடாளுமன்றத் தேர்தல் வந்து விட்டது என்ற அறிவிப்பு அல்லவா - என்றுள்ளது.

# ஈழத் தமிழர் உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கிறோம் என்கிறார் ஜெயலலிதா

## அவர்களைக் காப்பாற்ற கருணாநிதி தவறிவிட்டார் எனவும் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 10



இலங்கை அரசமைப்புச் சட்டத்திற்குட்பட்ட, சுயநிர்ணய அதிகாரம் பெற்ற 'தமிழர் நாடு' என்ற போராட்டத்தை ஆதரிக்கிறோம் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழர்களின் காவலர் எனத் தன்னைத் தானே அழைத்துக்கொள்ளும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி, ஈழத் தமிழர்களை காக்கத் தவறிவிட்டார் என்றும் அவர் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

"இலங்கையில் நடத்தப்படும் இனவெறித் தாக்குதல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முழு ஆதரவோடு மட்டுமல்லாமல், முழு ஈடுபாடு கொண்ட ஆதரவுடன் நடத்தப்பட்டது.

புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் மீதுதான் துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகிறது என்று இலங்கை அரசும் கூறலாம். ஆனால், இறந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, புலிகள் மீது மட்டும் நடத்தப்படும் தாக்குதல் அல்ல, பெரும்பாலான அப்பாவித் தமிழர்களின் மீது நடத்தப்படும் தாக்குதல் இது என்பது தெளிவாகிறது. இதிலுள்ள முக்கியமான சாராம்சம் என்னவென்றால், இந்திய ஆயுதங்களும், தோட்டாக்களும், வெடிமருந்துகளும், அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இன்று பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் உள்ள தமிழர்கள் அங்குள்ள சிங்களவர்களுக்கு சமமாக நடத்தப்பட வேண்டும் என்ற தமிழர்களின் உரிமைக் குரலை நாங்கள் அங்கீகரிக்கிறோம். சட்டத்தின் முன் அனைவரும் சமம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சம உரிமை ஆகிய இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். இலங்கைத் தமிழர்களின் சுய நிர்ணயப் போராட்டத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம். இலங்கை அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்ட சுய நிர்ணய அதிகாரம் பெற்ற 'தமிழர்' நாடு வேண்டும் என்ற அவர்களின் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்.

ஆயுதம் ஏந்திய போராட்டத்தைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். இந்த ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் விளைவாக முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி தமிழக மண்ணில் படுகொலை செய்யப்பட்டது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இவை இரண்டையும் ஒன்று சேர்த்து இந்தப் பிரச்சினையை குழப்ப கருணாநிதி முயற்சி செய்கிறார்.

இயக்குநர் சீமான் மீண்டும் கைது செய்யப்பட்டு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சீமான் என்னென்ன பேசினாரோ, அவை அனைத்தையும் கருணாநிதியும் கூறியிருக்கிறார். கருணாநிதி மேல் யாராவது நம்பிக்கை வைத்தால், இதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் தண்டனையாகும்.

இலங்கையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு இந்திய அரசு உணவு, உடை மற்றும் மருந்துகளை ஏன் அனுப்பவில்லை? மனிதாபிமான அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு உடனடியாக உதவி புரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதைத்தான் மாபெரும் தோல்வி என்று சுட்டிக்காட்டுகிறேன். மத்திய அரசும், மாநில அரசும் தமிழ் மக்களின் மேல் உண்மையான அக்கறை செலுத்தவில்லை.

உண்ணாவிரதப் போராட்டத்தால் பிரச்சினை தீராது என்றாலும், மக்கள் எதிர்ப்பின் அடையாளமாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுகிறது - என்றுள்ளது.

# இலங்கைக்கு இராணுவ உதவியை இந்தியா உடன் நிறுத்த வேண்டும்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இலங்கைக்கு வழங்கும் இராணுவ உதவிகளை இந்தியா உடனடியாக நிறுத்த வேண்டும் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுபற்றி, அக்கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இலங்கையில் நடக்கும் போரின் காரணமாக, தமிழர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அங்கு நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. ஏராளமானவர்கள் உணவு மற்றும் மருத்துவ வசதி கிடைக்காமல், தினமும் உயிரிழந்து வருகிறார்கள்.

இலங்கையில் நிலைமை சீராக, இலங்கைக்கு அளித்து வரும் இராணுவ உதவியை, மத்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு நடத்தும் போரை நிறுத்த வேண்டும். தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட, இலங்கையை இந்தியா வற்புறுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயற்பாடுகளில் தி.மு.க.வுக்கும், பா.ம.வுக்கும் பங்கு உண்டு. அந்த இரு கட்சிகளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன. எனவே, அவர்களுக்கும் பொறுப்பு உண்டு.

மஹிந்த ராஜபக்ஷ அரசு, சர்வதேச நாடுகளின் குரல்களுக்கு மதிப்பு கொடுத்து போரை நிறுத்த வேண்டும். இராணுவம் மூலமே தீர்வு காண முடியும் என்ற நிலையில் இருந்து, இலங்கை அரசு மாற வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்களின் நலன் கருதி, இலங்கை அரசு நல்ல தீர்வை காண வேண்டும் - என்றார்.

# ஏட்டிக்குப் போட்டியான போராட்டங்கள் ஈழத் தமிழரின் பிரச்சினை தீர உதவா!

## தினமணி ஆசிரியர் தலையங்கம் சாடல்

சென்னை, மார்ச் 10

தமிழகத்தில் அறிக்கைப் போர் நடத்துவதும், ஏட்டிக்குப் போட்டியாக உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்துவதும் நமக்குள் மேலும் பிளவைத்தான் ஏற்படுத்துமே தவிர, இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர இம்மியளவும் உதவாது - என்று ''தினமணி''யின் நேற்றைய ஆசிரியர் தலையங்கம் சாடியுள்ளது.

அதன் முழு விவரம் வருமாறு-

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை என்ன என்று புரியாத அரசியல் கட்சியோ, தலைவர்களோ தமிழ்நாட்டில் இல்லை. ஆயினும் ஒருங்கிணைந்த, உறுதியான, முதிர்ச்சியான நடவடிக்கைகள் இல்லாததால் இலங்கைத் தமிழர்களும் பராதீனப்பட்டு அவர்களுடைய பிரச்சினையும் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய, திராவிட அரசியல் கட்சிகளும், இயக்கங்களும், தமிழ்நாட்டு சட்டத்தரணிகளும், திரைப்படத்துறையினரும் இந்த நேரத்திலாவது சிறிது ஆத்ம பரிசோதனை செய்ய வேண்டும். இதுவரை தாங்கள் நடத்திய கிளர்ச்சிகள், உண்ணாவிரதங்கள், முழு அடைப்புகள், இயற்றிய தீர்மானங்கள் போன்றவற்றுக்கு உருப்படியான பலன் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா? மக்களவைத் தேர்தல் நெருங்கிவிட்டதால் இதைப் பயன்படுத்த ஒரு சில அமைப்புகள் தீவிரம் காட்டுகின்றன எனத் தெரிகிறது. இலங்கைப் பிரச்சினையைத் தமிழ்நாட்டு தமிழர்கள் கையாளும்விதம் இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு எதிராகவே போய்க்கொண்டிருக்கிறது என்பதை யாருமே இப்போதாவது உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

இனி எந்த அரசியல் கட்சியும், சமுதாய இயக்கமும் இதைத் தங்களுடைய தனியுரிமைப் பிரச்சினையாகக் கையில் எடுக்கக் கூடாது. தமிழர்களுடைய முழு அக்கறையும் ஆதரவும் தேவைப்படும் இப் பிரச்சினையைத் தீர்க்க தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மூத்த அரசு அதிகாரிகள், ராஜதந்திரிகள், பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள், தன்னார்வத் தொண்டு அமைப்பைச் சேர்ந்தவர்கள் என எல்லோரையும் உள்ளடக்கிய ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

சர்வதேச அரங்கில் இப்பிரச்சினையைக் கொண்டு செல்ல அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் ஆற்ற வேண்டிய செயல்களை உடனே தொடங்க வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்குத் தேவைப்படும் உணவு, உடை, மருந்து போன்ற அவசியப் பொருள்களைத் திரட்டி அதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமும், உற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள் மூலமும் முறையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் பாரம்பரியமாக வசித்துவரும் பகுதிகளான வடக்கு, கிழக்கு ஆகியவற்றின் தனித்தன்மையைக் காப்பதிலும், அங்கு மற்ற இனத்தவரைக் குடியமர்த்தாமல் தடுப்பதிலும் அக்கறை எடுக்க வேண்டும். தமிழர்களுக்குச் சம உரிமை, அந்தஸ்து வழங்கி தமிழர் பகுதிகளில் அமைதி ஏற்பட இந்திய அரசின் மூலம் இலங்கை அரசுக்கு நெருக்குதல் அளிக்க வேண்டும்.

புலிகளையும், இலங்கை அரசையும் அவர்களுக்கு உற்ற நண்பர்கள் மூலம் மீண்டும் அணுகி உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதைவிடுத்து தமிழ்நாட்டில் அறிக்கைப் போர் நடத்துவதும், சுவரொட்டி விளம்பரங்கள் செய்வதும், வழிநடைப் பயண இயக்கம் மேற்கொள்வதும், போட்டி உண்ணாவிரதங்கள் நடத்துவதும் நமக்குள் மேலும் பிளவைத்தான் ஏற்படுத்துமே தவிர, பிரச்சினை தீர இம்மியளவும் உதவாது. சில நாள்களுக்கு தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் இந்தப் பிரச்சினையில் முழு அமைதி காப்பதுகூட நல்லது என்று தோன்றுகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு உதவ அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜேர்மனி நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழர்களும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு, சர்வதேச அரங்கில் தமிழர்கள் ஒற்றுமையுள்ள ஓர் அணியாகச் சென்று முறையிட்டு ஈழத் தமிழ் இனத்தைக் காப்பதுதான் விவேகமாக இருக்கும். வெற்றுக் கூச்சல்களால் இந்தப் பிரச்சினை தீராது.

ஈழத் தமிழர்களுடன் தொப்புள்கொடி உறவு ஏதும் இல்லாத நோர்வே நாட்டவர்கள் காட்டிய அளவுக்காவது உண்மையான அக்கறையுடன் நாம் செயற்பட்டிருக்கிறோமா என்று தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொண்டால் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கும் என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே உங்களுக்கு ஒரு வேண்டுகோள், ''போதும் நிறுத்துங்கள்'' உங்கள் அரசியலை!

# நாகைக் கடலில் மிதந்து வந்த பையில் 153 தோட்டாக்கள், 2 கைக்குண்டுகள்!

பொறையாறு, மார்ச் 10

நாகை மாவட்டம், தரங்கம்பாடி அருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை கடலில் மிதந்து வந்த மர்மப் பையில் 153 தோட்டாக்கள், 2 கையெறி குண்டுகள் இருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தரங்கம்பாடி அருகேயுள்ள சந்திரப்பாடியிலிருந்து 13 நாரிழைப் படகுகளில் ஞாயிற்றுக்கிழமை காலையில் மீனவர்கள் கடலுக்குள் சென்றனர்.

சந்திரப்பாடிக்குக் கிழக்கே 5 கிலோ மீற்றர் தொலைவில் சென்று கொண்டிருந்தபோது, கடலில் பச்சை நிறப் பை மிதப்பதைக் கண்டு மீனவர்கள் எடுத்தனர்.

அதன் உள்ளே, வெடி பொருள்கள், காக்கி உடை மற்றும் சந்தேகப்படும்படியான பொருள்கள் இருந்ததால், அங்கிருந்தபடியே பொலிஸுக்கு தகவல் அளித்தனர்.

இதையடுத்து, கரை திரும்பிய மீனவர்கள் மர்மப் பையைப் பொலிஸில் ஒப்படைத்தனர். இதுதொடர்பாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அஸ்வின் கோட்னிஷ் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

'கிருத்தி' என்று தமிழில் எழுதப்பட்டிருந்த பச்சை நிறப் பையில் 2 கையெறி குண்டுகள், 153 தோட்டாக்கள், காக்கி நிற உடைகள், உணவுப் பொருள்கள், சிங்கள நாணயம் ஒன்று, காலணிகள், மற்றும் மாத்திரை உள்ளிட்ட மருந்துப் பொருள்கள் இருந்தன.

ஆனால், நன்றாக சீல் செய்யப்பட்ட சலவை சோப் வடிவிலான ஒரு பொருளும், ஒரு சிறிய தகர டப்பா குறித்தும் சந்தேகம் உள்ளது. இதில் வெடிமருந்துகள் இருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதால், திருச்சியிலிருந்து வரும் வெடி மருந்து சோதனை நிபுணர்களின் ஆய்வுக்கு பின்னர் இதுகுறித்து முடிவு செய்யப்படும் - என்றார்.

# சட்டத்தரணிகளும் பொலிஸாரும் இரு கண்கள் - கருணாநிதி

சென்னை, மார்ச் 10

சட்டத்தரணிகளும், பொலிஸாரும் ஒரு முகத்தில் இரு கண்களைப் போன்றவர்கள் - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தனது பேர்த்தியின் திருமணத்தை நடத்தி வைத்துப் பேசிய போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

சட்டத்தரணிகளும், பொலிஸாரும் ஒரு முகத்தின் இரு கண்களைப் போன்றவர்கள். இரு கண்களில் எந்தக் கண் நல்ல கண், எது நல்ல கண் அல்ல என ஆராய வேண்டிய, விமர்சிக்க வேண்டிய அவசியமெல்லாம் இல்லை.

இந்த நிலையில் நான் யார் பக்கம் என சிலர் கேட்கிறார்கள். நான் எப்போதுமே நீதியின் பக்கம், அமைதியை விரும்புவோர் பக்கம், சட்டத்தின் பக்கம்தான் இருப்பேன் - என்றுள்ளது.

# ஈழத் தமிழர்கள் பிரச்சினை இருக்கும்வரை சீமான்கள் உருவாகுவதை தடுக்கமுடியாது

## சத்தியராஜ் பேச்சு

ஈழப்பிரச்சினை இருக்கும் வரை சீமான்கள் உருவாகுவதைத் தடுக்கமுடியாது - என்று நடிகர் சத்தியராஜ் கூறியுள்ளார்.

தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்தவை வருமாறு -

அப்போது, எத்தனையோ போராட்டங்கள் நடத்தி, ஏமாந்திருக்கும் சூழ்நிலையில் ஈழத் தமிழர்களுக்காக மாணவர்கள் ஒன்று சேர்ந்திருப்பது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்கள் மூலம் அரசியல் நிர்ப்பந்தம் ஏற்பட்டால், எந்தப் பிரச்சினைக்கும்கூட தீர்வு ஏற்படும் என்பதை வரலாறு உணர்த்துகின்றது.

தேர்தல் வந்து விட்டதால், இனி வீடுவீடாக வந்து அரசியல்வாதிகள் நடிப்பதை பார்க்கமுடியும். தமிழினம் பற்றிய உணர்வு உள்ளவரை, அவர் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவருக்கு வாக்களிப்போம். ஈழப்பிரச்சினை இருக்கும் வரை சீமான்கள் உருவாவதைத் தடுக்கமுடியாது. எனவேதான் மாணவர்கள் அனைவரும் இங்கு சீமானாக வந்திருக்கிறீர்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தை வலியுறுத்திய சத்தியத் திருத்தூதர் நபி(ஸல்)



உலக வரலாற்றில் நூற்றி ஐம்பது கோடி முஸ்லிம்களால் குறிப்பாகவும், ஏனைய மதத்தவர்களால் பொதுவாகவும் போற்றப்படுகிற ஒரு மனிதப்புனிதரின் ஜனன தினத்தை முஸ்லிம் உலகம் இன்று கொண்டாடுகிறது. ஆம், அவர்தான் இருலோகம் போற்றும் இறைத் தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்களாவார்கள்.

எப்படியும் வாழலாம், எதையும் செய்யலாம் என்றிருந்த மனித சமுதாயத் துக்கு மத்தியில், எப்படியும் வாழமுடியாது, இப்படித்தான் வாழவேண்டும் என்ற சிறந்த, உயர்ந்த வாழ்க்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அநியாயங்கள், அட்டூழியங்கள், அனாச்சாரங்கள், அசத்தியங்கள் அனைத்தையும் அழித்து, இந்த உலகிலே சத்தியத்தை நிலைநாட்டிய ஒரு தனிப்பெருந் தலைவராகவே உலகம் அன்னாரை நோக்குகின்றது.

அனைத்தையும் படைத்து, பரிபாலிக்கின்றவன் அல்லாஹ் ஒருவனே. அவன் சர்வ வல்லமையுடையவன் என்ற ஏக தெய் வக் கொள்கையை உலகிற்கு அறிமுகப்படுத்தி,இந்த மண்ணிலே இஸ்லாத்தின் நிழலில் மிகச் சிறந்தவொரு சமூகத்தை உரு வாக்கிவிட்டுச்சென்ற பெருமை அன்னாரையே என்றும் சாரும்.

சத்திய இஸ்லாமே எங்கள் நெறி என்ற குறிக்கோளுடன் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் உலகில் செயல்பட்டாலும் ஏனைய மதங்களையும் மதித்தார்கள். முஸ்லிம்களுக்கும் ஏனைய மதங்களை மதிக்குமாறும் பணித்தார்கள். யுத்தம் போன்ற பயங்கரமான கட்டங்களில் கூட அந்நிய வணக்கஸ்தலங்களை சேதப்படுத்தவோ, அந்நிய மதத் தலைவர்களை அகௌரவப்படுத்தவோ வேண்டாம் என வலியுறுத்திய வள்ளலாக முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள்.

பஞ்சமா பாதகங்கள் தலைவிரித்தாடிய ஒரு கால கட்டத்திலே அத்தகைய சமூகத் துக்கு மத்தியிலே முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் நபியாகத் தோன்றினார்கள். அங்கிருந்த அனைத்து மௌட்டிக்க கொள்கைகளையும், அழித்தொழித்தார்கள். ஆண்டாண்டு காலமாக மக்களுக்கு மத்தியில் இருந்து வந்த வெறுப்புணர்ச்சியை அன்னார் நீக்கினார்கள். மக்களுக்கு மத்தியில் வேரூன்றியிருந்த பாகப்பிரிவினைகளையும் போக்கி விரோதங்களையும், குரோதங்களையும் நீக்கி வைத்தார்கள்.

அரசன்- ஆண்டி,உயர்ந்தவன் - தாழ்ந்தவன்,ஏழை- பணக்காரன், படித்தவன்- பாமரன், முதலாளி- தொழிலாளி என்ற எத்தகைய வேறுபாட்டையும் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் காட்டவில்லை. அனைவருடனும் அன்பாக நடந்து அகிலத்தாரின் அகங்களை அலங்கரித்தார்கள்.

அல்-குர் ஆனில் எத்தகைய நற்குணங்களை அல்லாஹ் அறிமுகப்படுத்தினாரோ அவை அத்தனையும் நிறைந்த நானிலத்தின் நற்குணச் சீலராக முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள்.

''என்னை அனுப்பப்பட்டதெல்லாம் மக்களுக்கு மத்தியில் நற்குணங்களைப் பூர்த்தியாக்கி வைப்பதற்குத்தான்''என்று கூறிய மும்மத் நபி (ஸல்) அவர்களின் சொல்லும், செயலும் ஒன்றாகவே இருந்தன. வாழ்வும், வாக்கும் நேர்மையாகவே செயற்பட்டன. சொன்னதையே செய்தார்கள். செய்வதையே சொன்னார்கள். எனவேதான் உலகம் அன்றும்,இன்றும், என்றும் அன்னாரை உலகம் போற்றும் உத்தம புருஷர்,உலகத் தாரின் உதாரணப் புருஷர் என்றெல்லாம் வர்ணிக்கின்றது.

இந்த மண்ணிலே சாந்தி, சமாதானம், ஐக்கியம் நிலைபெற தமது அறுபத்தி மூன்று வருட வாழ்க்கையையும் அர்ப்பணித்தார் கள். அன்பு, பண்பு,பாசம்,நேசம்,உயர்ந்த குணம் ஆகியவைகள் மட்டும்தான் இந்த உலகில் மனிதனை மனிதனாக வாழவைக்கின்ற மாமருந்துகள் என்பதை உலகுக்கு உணர்த்தினார்கள்.

தான் மட்டும் உலகில் அனைத்து சுகங்களையும் அனுபவித்துக் கொண்டு,அடுத்த வனை மதிக்காமல், அடுத்தவனை தலை நிமிரவிடாமல் இருந்த கல் நெஞ்சம் படைத்த கயவர்களை கருணை நபியவர்கள் வெறுத்தார்கள்.

''நீயும் வாழ்,மற்றவனையும் வாழ விடு, என்ற இஸ்லாத்தின் இலட்சியத்தை நிரூபிக்க உழைத்தார்கள் உம்மி நபி (ஸல்) அவர்கள். ஒருவனுடைய இரத்தம், செல்வம், மானம் ஆகியவற்றை அடுத்தவன் எவ்வகையிலும் உதாசீனம் செய்யக்கூடாது. அது அடுத்தவனுக்கு தடுக்கப்பட்டுள்ளது (ஹராம்) என்பதை மக்களுக்குப் போதித்த ஒரே மனிதப் புனிதர் மா நபி முஹம்மத் (ஸல்) ஆவார்கள்.

சாதி, மத, பேதங்கள், இன, மொழி, வகுப் பு, குல , கோத்திர வேறுபாடுகள் மக்களுக்கு மத்தியில் கிடையவே கிடையாது. உலகத்தின் மதிப்புகளும் அந்தஸ்துகளும் அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. யார் இறையச்சம் உள்ளவராக இருக்கிறாரோ, அவர்களுக்குத்தான் அல்லாஹ் விடத்தில் அந்தஸ்து இருக்கிறது என்றும் முஹம்மத் நபி (ஸல்) சதா போதித்துள்ளார்கள்.

தமது வாழ்க்கையின் கடைசி மூச்சுவரை உலகத்தாரின் உயர்வுக்காகவே உழைத்த உலகம் போற்றும் உத்தம தூதர்,உம்மி நபி (ஸல்) அவர்கள் கடைசித் தறுவாயில் கூட வித்தியாசமான ஒரு போதனையை போதித்தார்கள்.

தனது உயிர் பிரிய சற்று முன் உலகத்தார் அனைவருக்குமாக ''என் அருமைத் தோழர்களே! நீங்கள் ஒருவருக்கொருவர் கோபித்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளவேண்டாம். நீங்கள் ஒரு வருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு எதையும் செய்ய வேண்டாம். நீங்கள் ஒருவருக்கொருவர் பிரிந்து வாழ வேண்டாம். நீங்கள் எல்லோரும் உடன் பிறந்த சகோதரர்களைப் போன்று ஒன்றாய், நன்றாய், என்றுமே வாழுங்கள்'' என்று இறுதி உபதேசம் புரிந்து, இவ்வுலகி லிருந்து விடை பெற்றார்கள்.

இறுதி நபியின் வாழ்வும், வாக்கும் முழு உலகுக்குமே சிறந்த வழிகாட்டிகளாகும். முஸ்லிம் உம்மத் ஈருலகிலும் வெற்றிபெற அதுவே சரியான முறையான வழியாகும்.

மீலாதுந் நபியைக் கொண்டாடும் நாம் நபி வழியே நம் வழி என்பதில் உறுதி பூணு வோமாக.*

மௌலவி ரஷீத் எம்.ராஸிக் (பஹ்ஜி)

## இலங்கைத் தமிழர்களைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போயிருக்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் போர்நிறுத்தம் செய்யவேண்டும் என வலியுறுத்தி அ.தி.மு.க. சார்பில் நேற்று தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை எதிரே நடந்த அ.தி.மு.க. உண்ணாவிரதத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா தலைமை வகித்தார்.

காலை 9.10 மணியளவில் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்த ஜெயலலிதா அங்கு இலங்கைத் தமிழர்களுக்கு நிதி திரட்டுவதற்காக வைக்கப்பட்டிருந்த பெரிய உண்டியலில் 5 லட்சம் ரூபா நிதியைச் செலுத்தினார்.

செல்வி ஜெயலலிதா தலைமை உரை நிகழ்த்தி உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் அங்கு பேசியவை வருமாறு:-

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. போர்நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்தும், இலங்கைத் தமிழர்களுக்கு முழு ஆதரவு தெரிவித்தும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு துவக்கத்தில் இலங்கை இராணுவத்துக்கு நவீன ஆயுதங்களையும், தளபாடங்களையும் இந்திய அரசு அனுப்பியதாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனால் அதனை மத்திய அரசு மறுக்கவில்லை.

### இரட்டை வேடம் போடுகிறார் கருணாநிதி

பிரதமருக்கு மிகவும் நெருக்கமான பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இலங்கைக்குச் சென்று வந்த தகவலையும் ஊடகங்கள் வெளிப்படுத்தின. இந்தச் செய்திகளையும் மத்திய அரசு மறுக்கவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மிகுந்த அக்கறை காட்டுவதாக முதலமைச்சர் கருணாநிதி தம்பட்டம் அடிக்கிறார். இலங்கைத் தமிழர்களுக்காக மத்திய அரசை தி.மு.க. எதிர்க்கவும் இல்லை, ராஜினாமா செய்வோம் என்று மிரட்டவும் இல்லை. இதை நான் கேட்டால் கருணாநிதி என்னைக் கேலி செய்கிறார்.

இலங்கைத் தமிழ் பிரச்சினையில் கருணாநிதி இரட்டை வேடம் போடுகிறார். பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போலவும், முயலுடன் ஓடி வேட்டைநாய்களுடன் சேர்ந்துகொள்வது போலவும் அவர் நடந்துகொண்டிருக்கிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என்னுடைய நிலைப்பாட்டை அனைவரும் அறிவர். இலங்கையில் உள்ள தமிழர்கள் அங்குள்ள சிங்களவர்களுக்கு சமமாகக் கல்வி, வேலைவாய்ப்பில் சம உரிமை பெறவேண்டும் என்பதை நாங்கள் ஆதரிக்கிறோம். அவர்களது சுயநிர்ணய போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்.

### சுய நிர்ணய அதிகாரம் பெற்ற தமிழர் நாடு வேண்டும்

இலங்கை அரசமைப்புச் சட்டத்திற்கு முற்பட்டு சுயநிர்ணய அதிகாரம் பெற்ற தமிழர் நாடு வேண்டுமென்ற அவர்களது போராட்டத்தை ஆதரிக்கும் அதே வேளையில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் இறக்கக் காரணமான திசை மாறிப்போன ஆயுதமேந்திய போராட்டத்தைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்.

இந்தப் போராட்டத்தின் விளைவாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் மண்ணில் படுகொலை செய்யப்பட்டமை எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. ஆனால் இவை இரண்டையும் ஒன்று சேர்த்து கருணாநிதி பிரச்சினையைக் குழப்ப முயற்சி செய்கிறார். தி.மு.க. தலைமையின் தூண்டுதலால் நடத்தப்பட்ட போராட்டத்தின் போது திரைப்பட இயக்குநர்கள் சீமான் மற்றும் அமீர் ஆகியோர் இந்திய நாட்டுக்கு எதிராகப் பேசியதினால் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்படுவதற்கு சிலமணி நேரங்களுக்கு முன் இந்த இரு இயக்குநர்களும் முதலமைச்சர் கருணாநிதியால் சென்னையில் துவக்கப்பட்ட மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். எந்த வார்த்தைகள் அவர்களை சிக்கலில் மாட்டிவிட்டனவோ அவை யாவும் கருணாநிதியின் ஆசியும், ஒப்புதலும் பெற்றவைதான். சீமான் கூறிய அனைத்தையும் கருணாநிதியும் பேசியிருக்கிறார்.ஆனால் சீமான் சிறையில் இருக்கிறார். கருணாநிதியோ தலைமைப்பீடத்தில் முதலமைச்சராக இருந்துகொண்டு எல்லோரையும் ஆட்டிப் படைக்கிறார்.

கருணாநிதியை யாராவது நம்பினால் அவர்களுக்கு கிடைக்கும் தண்டனை இதுதான்.

### மனிதாபிமான உதவிகளை ஏன் அனுப்பவில்லை

இலங்கையில் தற்போது நடந்துகொண்டிருக்கும் சண்டையில் அப்பாவி மக்கள் இடம்பெயர்ந்து உணவு, உடை, மருந்து எதுவுமின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு இந்திய அரசு மனிதாபிமான அடிப்படையில் உணவு உடை மற்றும் மருந்துகளை ஏன் அனுப்பவில்லை?

இலங்கைத் தமிழர்களுக்காக மத்திய அரசும், மாநில அரசும் மாபெரும் தோல்வி அடைந்துவிட்டன. தமிழ் மக்களின்மேல் மன்மோகன்சிங்குக்கும், கருணாநிதிக்கும் உண்மையான அக்கறையே இல்லை.

நாம் இங்கு உண்ணாவிரதம் இருப்பதால் பசியால் வாடும் இலங்கைத் தமிழர்களின் வயிறு நிரம்பப் போவதில்லை. இது ஒரு அடையாளமே. இதன் மூலம் இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் துயர நிகழ்வுகள் குறித்து தமிழ்நாட்டு மக்கள் மிகவும் கவலை அடைந்திருக்கிறார்கள் என்பதை மத்திய, மாநில அரசுகளுக்கு உணர்த்துவதற்காகத்தான் இந்தப் போராட்டம்.

- இவ்வாறு அவர் கூறினார். (ஜெயலலிதா அறிக்கை 14 ஆம் பக்கத்தில்)

## வன்னி வாழ் தமிழ் மக்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய நிலை தொடர்ந்தால் பாரிய மனிதாபிமானப் பேரழிவொன்று இடம் பெறலாம் என்றும் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது. இது குறித்து நான்கு எம்.பிக்களினதும் கூட்டறிக்கையில் தெரி விக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் 3 லட்சத்து 30 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்கள் கடந்த இருவருட காலப் பகுதியில் தொடர்ந்து 10,15 தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்துள்ளனர். இலங்கை அரசு பாதுகாப்பு வலயம் எனத் தான் கருதும் சில பகுதிகளை அறிவித்தது. பொதுமக் கள் அப்பகுதி பாதுகாப்பானது எனக் கருதி அந்த இடத்திற்குச் சென்றுள்ளனர்.

பாதுகாப்பு வலயம் என அரசு அறிவித்த பகுதியிலிருந்து சிறிய தூரத்திலேயே மோதல் இடம்பெறுகின்றது.

அப்பகுதியில் நாளாந்தம் 30,40 பொது மக்கள் கொல்லப்படுகின்றனர். மேலும் பலர் கடும் காயங்களுக்கும் உள்ளாகின்றனர்.

### பொருளாதாரத் தடை போன்ற நிலைப்பாடு

அப்பகுதியில் பாரிய மனிதாபிமான நெருக்கடிகள் காணப்படுகின்ற போதிலும் அங்கிருந்த மனிதாபிமான அமைப்புகள் அனைத்தையும் அரசு வெளியேற்றியுள்ளது. பொருளாதாரத் தடை எனக் குறிப் பிடக் கூடியளவிற்கு உணவு,மருந்து உட் பட மனிதாபிமானப் பொருள்களுக்கு கட் டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் காணப்படும் நிலை குறித்து செய்தி சேகரிப்பதற்கு சுதந்திர ஊடகவிய லாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட வில்லை.

வன்னியில் மருத்துவமனைகள் எவையும் செயற்படவில்லை. மாத்தளனில் மாத்திரம் அடிப்படை வசதிகளற்ற தற்காலிக மருத்துவ மனையொன்றுள்ளது. இந்த தற்காலிக மருத்துவமனையில் அவசர கண்காணிப்பு பிரிவு சத்திரசிகிச்சை அறை, விடுதிகள் என எவையு மில்லை. மின்சாரமில்லை.மேலும் மருந்துகளோ இரத்தமோ எதுவுமில்லை.

### மருந்துகள் அனுப்பப்படவில்லை

வன்னியில் எஞ்சியுள்ள மருத்துவ அதிகாரிகள் தொடர்ந்து பல முறை வேண்டுகோள் விடுத்த போதிலும் 2008 ஆம் ஆண்டின் நாலாம் காலாண்டுக்கான மருந்துகளோ அல்லது 2009 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்கானவையோ அனுப்பப்படவில்லை. போதிய சுகாதார வசதிகள் இன்மை, போஷாக்கின்மை, ஒரே பகுதியில் பெருமளவு மக்கள் வாழ்வது போன்றவற்றின் காரணமாக நோய்கள் பரவியுள்ளன. போதிய சுகாதார வசதிகள் இன்மை காரணமாக நான்கு கர்ப்பிணித் தாய்மார் சமீபத்தில் மரணித்துள்ளனர்.

இங்குள்ள இடம்பெயர்ந்தவர்களில் 75 வீதத்திற்கும் அதிகமானவர்கள் மலசலகூட வசதியுமின்றி உள்ளனர்.

2007 இற்குப் பின்னர் இப்பகுதிக்கு கட்டுமானப் பொருள்கள் எவையும் அனுமதிக்கப்படாததால் தற்காலிக மலசல கூடங்களை அமைப்பது சாத்தியமற்றதாகியுள்ளது.

2 லட்சத்து 40 ஆயிரம் பேர் வெட்டவெளியில் வாழ்கின்றனர்.



இங்குள்ள 60 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 40 ஆயிரம் பேர் வெட்ட வெளியில் வாழ்கின்றனர். கடும் வெய்யில் காரணமாக மிகவும் கஷ்டப்படுகின்றனர். 2008 இன் பிற்பகுதியில் இப் பகுதியில் 3 லட்சத்து 30 ஆயிரம் பொது மக்கள் வாழ்கின்ற போதிலும் அரசு 70 ஆயிரம் பொதுமக்களே உள்ளனர் எனத் தெரிவிக்கின்றது.

ஒருமாத காலத்திற்குப் பின்னர் பெப்ரவரி 26 ஆம் திகதி உலக உணவுத் திட்டத்திற்கு 40 மெற்றிக் தொன் உணவைக் கொண்டு செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

உலக உணவுத் திட்டம் இந்த உணவு அங்குள்ள 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு நாளுக்கே போதுமானது எனத் தெரிவித்துள்ளது.

கடந்த 12 நாள்களில் எட்டுக் குழந்தைகள் உட்பட 18 பேர் பட்டினியால் மரணித்துள்ளனர்.

மேலும் போதியளவு குடிதண்ணீர் வசதியின்மையும் உள்ளது. (அ-சி)

புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்

A.K.P. நல்லெண்ணெய் வியாபாரம்

கடந்த 50வருடங்களுக்கு மேலாக நல்லெண்ணெய் விற்பனையில் முன்னோடியான ஆ.க.பசுபதிப்பிள்ளை அவர்களால் நடத்தப் பட்ட ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ் என்னும் நல்லெண்ணை விற்பனைக் கடை மீண்டும்

புதுப் பொலிவுடன் ஆரம்பம்

12.03.2009 வியாழக்கிழமை மு.ப. 10மணிக்கு

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய் பாவனையாளர்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளும் இடம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ் மூத்தநாயினார் கோயில் தெற்கு வீதி, ஆனைக்கோட்டை.

உரிமையாளர்: K.N.கந்தையா

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.


## தொலைந்து விட்டது

தில்லையம்பலம் ரோகுலன் ஆகிய எனது இலக்கம் 0776622941 கொண்ட கையடக்கத் தொலைபேசி இருபாலைச்சந்திக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தோர் தயவுசெய்து இலக்கம் 0776578385 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது யாழ்ப்பாணம் கச்சேரி மோட்டோர் [illegible] உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### சண்முகநாதன் செல்வநாதன் (செல்வம்)



கோணாவளை லேன், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மன் சுக்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சண்முக நாதன் செல்வநாதன் (செல்வம்) நேற்று (09.03.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முக நாதன்-மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், கோபாலசிங்கம்-மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், தயாளினியின் (தயா) அன்புக் கணவரும், மீரா, திலீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோதிநாதன், கமலறாணி, ஜெகநாதன், பவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கோணாவளை லேன்,
கொக்குவில்.

ச.பவநாதன் (சகோதரன்)
நாதன் புடைவையகம், திருநெல்வேலி.

### வேலன் மாணிக்கன்



(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் )

வேரவல், மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறையை நிரந்தர வதிவிடமாகவும் அன்னுங்கை, உரும்பிராயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேலன் மாணிக்கன் நேற்று (09.03. 2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன்-கற்பகா தம்பதிகளின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் விமலராணி காலஞ்சென்ற ஜெயச்சந்திரன் (தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை), பிரேமச்சந்திரன் (யாழ்.பல்கலைக் கழகம்), புவனராணி (நல்லூர் பிரதேச செயலகம்), சிவகலாராணி (நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சு.சிவயோகராசா (வவுனியா), பி.உமாராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவமதுரன், சேயோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணியளவில் உரும்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரம் ஏற்றுக் கொள்ளவும்

பூதவராயர் கோயிலடி,
அன்னுங்கை மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:
மா.பிரேமச்சந்திரன்
(மகன்).

### மாணிக்கர் தில்லையம்பலம்




இணுவில் தெற்கைச் சேர்ந்த மாணிக்கர் தில்லையம்பலம் [ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சுதுமலை வடக்கு அ.த.க.பாடசாலை மானிப்பாய் (செல்லத்துரை பாடசாலை)] அவர்கள் நேற்று (09.03.2009) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:சு.பொ.நடராசா
(அண்ணா தொழிலகம், இணுவில்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழகத்தில் நேற்று நடைபெற்ற முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் .

# ஈழத்தமிழருக்கு ஆதரவாக உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் உண்ணாவிரதப் போராட்டம்

## தமிழக மாணவர் கூட்டமைப்பு வேண்டுகோள்

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்தும் இந்திய அரசை கண்டித்தும் சர்வதேச சமூகத்தின் கண்களைத் திறக்க வைப்பதை நோக்கமாகக் கொண்டும் தமிழக மாணவர் கூட்டமைப்பின் சார்பில் வரும் 13 ஆம் திகதி (வெள்ளிக் கிழமை) உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் பங்குகொள்ளும் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த விவரம் வருமாறு-

கடந்த இரண்டு மாத காலமாக 2400க்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். தினமும் 100க்கு மேற்பட்ட பிஞ்சு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் என ஈவு இரக்கமின்றி கொல்லப்படுவதை தட்டிக் கேட்க வேண்டிய இந்திய அரசும், சர்வதேசமும் கண் இருந்தும் குருடர்கள் போலவும் வாய் இருந்தும் ஊமைகளாக இருக்கின்றன.

பச்சிளம் குழந்தைகள் கொடூரமாகக் கொல்லப்பட்டு இரத்தக் குவியலாகி கிடக்கிறார்கள். அடுத்து வரும் 72 மணித்தியாலங்கள் நான்காம் ஈழப் போரில் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. ஆகவேதான், இந்த அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி 13.03.09 (வெள்ளிக்கிழமை) அன்று இந்தியா, இலங்கையில் உள்ள தாயகத் தமிழர்களும், 130 நாடுகளில் வாழும் புலம் பெயர் தமிழர்களும் 12 மணி நேர உண்ணாவிரதத்தை (இரு வேளைகள்) கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உலகின் எந்த மூலையில் தமிழர்கள் இருந்தாலும், யார் கவனித்தாலும், கவனிக்காவிட்டாலும் வீடுகளில். இருப்போரும், பணியிடங்களில் இருப்போரும் தத்தமது இடங்களில் உண்ணா விரதத்தைப் தவறாது கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தப் போராட்டத்தினால் பலன் இருக்காது என்று எண்ணாமல் முழு நம்பிக்கையுடன் அனைவரும் இந்த மாபெரும் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பணியிடங்களிலோ, மற்ற இடங்களில் இருந்து கொண்டோ நீங்கள் நடத்தும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் மற்றவர் களிடத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்கள், சட்டத்தரணிகள், வணிகர் சங்கங்கள், தொழிலாளர் நலச் சங்கங்கள், கட்டுமான தொழிலாளர்கள், சிறைகளில் இருக்கும் கைதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ள இசைந்துள்ளார்கள். ஆகவே, புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழ் அமைப்பினர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை தத்தமது நாடுகளில் உத்வேகத்துடன் முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பார்வையற்றோர் 6 பேர் இலங்கைத் தமிழர்களுக்காக சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை நடைப்பயணம் மேற் கொண்டுள்ளனர். அவர்களால் முடியும் போது நாம் ஒரு நாள் உண்ணாவிரதம் இருப்பது பெரிய காரியமில்லை.

கொத்துக் கொத்தாக மடியும் உறவுகளைக் காக்க அனைவரும் ஒன்றுபடுவோம்! - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-சி)



அமைச்சருக்கான நியமனக்கடிதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் கருணாவுக்கு அலரிமாளிகையில் வைத்து வழங்கப்பட்டபோது....

## திருமலையிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்காகியது.

இந்தக் கப்பல் திருகோணமலையிலிருந்து 500 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களுடன் கடந்த சனிக்கிழமை புறப்பட்டு முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியை ஞாயிற்றுக்கிழமை சென்றடைந்தது.

குறிப்பிட்ட கப்பலிலிருந்து 142 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் இறக்கப்பட்ட நிலையில், நேற்றுக் காலை 8.30 மணியளவில் விடுதலைப்புலிகள் கப்பலை இலக்குவைத்து கடும் ஆட்டிலறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் என கப்பலின் தலைமை மாலுமி மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்பாராத இந்தத் தாக்குதல் காரணமாக கப்பலின் தலைமை மாலுமி கப்பலை நடுக்கடலிற்குள் செலுத்தியுள்ளார். மோசமான கால நிலை காரணமாக நிலை மேலும் மோசமடைந்துள்ளது - என்று ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

(அ-சி)

## கப்பலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் ஷோபியா றொமானென்ஸ் தெரிவித்திருக்கிறார்.

பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த போது காலநிலை மோசமடைந்து கொண்டிருந்ததால் கப்பலை துறைமுகத்துக்குத் திரும்பி வருமாறு கடற்படையினர் உத்தரவிட்டனர்.

சரக்குக் கப்பல் மீது இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுவதை நாம் நம்புவதற்கு எந்தக் காரணமும் இல்லை.

கப்பல் தரித்து நின்ற பகுதி ஒரு மோதல் பிரதேசம். எனவே அப்பகுதியின் எல்லாப் பக்கங்களிலும் ஷெல்கள் வந்து வீழ்ந்தன. அதனால் ஷெல் வீச்சை யார் நடத்தினார்கள் என்பதை எங்களால் இனங் காண முடியவில்லை.

இவ்வாறு ஷோபியா றொமானென்ஸ் மேலும் கூறினார். (அ)

## புதுக்குடியிருப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களை நடத்தின என்றும் அத் தாக்குதல்களை இராணுவத்தினர் முறியடித்தனர்என்றும் தேசிய பாதுகாப்பிற்கான ஊடகமத்திய நிலையம் விடுத்துள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சாலைப் பகுதியில் உள்ள 55ஆவது படைப்பிரிவினர் மீதும் புதுக்குடியிருப்பில் நிலைகொண்டிருக்கும் 58ஆவது படைப்பிரிவினர் மீதும் தாக்குதல்கள் நடத்த முயன்ற விடுதலைப்புலிகளின் மீது இராணுவத்தினர் பதில் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் பல விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர் என்று அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதேசமயம் நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு, வட்டு வாய்க்கால், கற்பிலை மடுப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் படைத்தரப்புக்குக் கடும் சேதம் ஏற்பட்டது என்று தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த சனிக்கிழமை முதல் இடம்பெற்ற மோதல்களில் 150 விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை முதல் இராணுவத்தினரின் நிலைகளை தாக்குவதற்கு விடுதலைப்புலிகளின் சாள்ஸ் அன்ரனி படையணியும், ராதா படையணியும் முயற்சித்து வருகின்றன என களமுனை இராணுவத்தினரின் தகவலை மேற்கோள் காட்டி இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார்.

''நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் 50 சடலங்கள் மீட்கப்பட்டன. இது வரை விடுதலைப்புலிகளின் 180 சடலங்கள் மீட்கப் பட்டன'' என்றும் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளனர். எங்களுக்கும் இழப்புகள் உள்ளன என்றும் எமது இழப்புகள் தொடர்பான விவரங்களை வெளியிடமாட்டோம் என்றும் இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார, மேலும் கூறினார். (அ-சி)

## இராணுவப் பகுதிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவித்தனர்.

''நேற்றுமுன்தினம் ஞாயிற்று கிழமை காலை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் 45 பேர் வந்தனர். அவர்கள் மீது புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே 17 வயதுடைய பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் இராணுவத்தினரால் அருகில் உள்ள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(அ-சி)

## ஏ-9 பாதையூடாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலையில் மோதல்கள் ஆரம்பமானதையடுத்து ஏ-9 பாதையூடான போக்குவரத்துதடைப்பட்டிருந்தது. மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெலிசறவில் உள்ள களஞ்சிய சாலையில் இருந்து 40 லொறிகள் சுமார் 350 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றன என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரத்ன கொழும்பில் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தப் பொருள்கள் அனைத்தையும் கொழும்பில் உள்ள வெலிசற களஞ்சிய சாலையில் வைத்து இராணுவத்தினர் சோதனைக்குட்படுத்தினர். அதன் பின்னரே அவை லொறிகளில் ஏற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள உற்பத்திப் பொருள்களை எடுத்து வர ஏற்பாடாகி உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, ஏ-9 வீதி ஊடாகத் தனியார் வர்த்தகர்களும் யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்கள் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் எஸ்.பி.திவாரத்ன தெரிவித்தார்.

(அ-சி)

## குடாநாட்டில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை 9மணிமுதல் நண்பகல் 12மணிவரை 57.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் -

வளிமண்டலத்தில் ஏற்பட்ட குழப்பகரமான காலநிலை காரணமாக மழை பெய்து வருவதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இடிமுழக்கத்துடன் மழை தொடர்ந்து பெய்யக்கூடிய ஏது நிலை காணப்படுவதால் இடிமுழக்கம் ஏற்படும் நேரங்களில் இலத்தி ரனியல் உபகரணங்களை பயன்படுத்த வேண்டாம் என பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை குடாக்கடலில் நேற்று தொழிலுக்குச் சென்றிருந்த மீனவர்கள் தொழில் செய்யமுடியாமல் வள்ளங்களுடன் திரும்பி வந்தனர்.

நேற்றுக் காலை 9மணிக்கு ஆரம்பமான மழை இடையிடையே கடும் காற்றுடன் விட்டு விட்டு நண்பகலைத் தாண்டியும் பெய்துகொண்டிருந்தது.

இதனால் கடலில் நின்று தொழில் செய்யமுடியாமல் நண்பகலுக்கு முன்னதாகவே கடற்றொழிலாளர்கள் கரைக்குத் திரும்பினர்.

சுமார் மூன்று மாத காலத்தின் பின்னர் யாழ் குடாநாட்டில் நேற்று காற்றுடன் கூடிய கனத்த மழை பெய்தது.

கடும் வரட்சிக்குப் பின்னர் குடாநாட்டில் சகல பிரதேசங்களில் நேற்றுக் கனத்த மழை பெய்ததாக தகவல்கள் தெரிவித்தன.

(அ-1-9-224-160)

## தேசிய நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை நடைபெற்ற வைபவத்தில் கருணாவுடன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 3ஆயிரம் பேருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணையும் கடிதங்களை ஜனாதிபதி வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வன்னியில் பாதிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையாளர் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்குழு தன்னுடன் 25 மெற்றிக்தொன் மருந்துப் பொருள்களை எடுத்து வருகிறது என்றும் மேலும் 25 மெற்றிக்தொன் மருந்துப் பொருள்கள் அனேகமாக இன்று அனுப்பப்படும் என்றும் கூறப்பட்டது.

இந்த மருத்துவக் குழு புல்மோட்டை ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை புரியும்.

(அ-1)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2011
* புவியியல்-A.றாஜா
* அரசியல்-T.கஜன்
* இந்து-S.கார்த்திக்
* கிறிஸ்-U.L.மேரி
* புலமைப்பரிசில் 5
''ஜெயம் வெளியீடு''

YOGI 'S BEAUTY
(Acadamy of Beauty Culture, Hair Dressing/ Home Science)
கேக் கண்காட்சி தொடர்பான கருத்தரங்கு
15.03.2009 அன்று மு.ப. 10மணிக்கு இக் கருத் தரங்கு (Seminar) நடைபெற உள்ளதால் என்னிடம் பயிற்சியை முடித்த மாணவிகள் அனைவரும் உடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
ஆசிரியை,
75, அம்மன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222796,
0602210077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்

**நற்சிந்தனை**

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக் காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது

க.பொ.த.உயர்தர

# கல்விச்சுடர்

13.01.2009

Special Guidance For A/L 2009&2010



க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்

கல்வி இணைப்பிதழ்

## அன்புடன், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு!

க.பொ.த சாதாரண தரம் தாண்டி உயர்தர வகுப்புக்கு காலடி வைத்துள்ள நீங்கள் ஒவ்வொருவரும் திறமையானவர்கள். ஆனால், உயர்தர பரீட்சையில் எல்லோராலும் சிறந்த பெறுபேறுகளை அடைய முடிவதில்லை என்பது ஒரு பிரதான குறைபாடு ஆகும். எல்லாப் பாடத்திட்டமும் படித்து முடித்திருந்தும் பரீட்சைப் பெறுபேறு நல்லதாக அமைவதில்லை என்ற பெரும் ஏக்கம் உங்கள் மனதில் இருந்துகொண்டே இருக்கின்றது. இதற்கான காரணங்களாவன

★பல மாணவர்கள் சரியான விடைகளை அறிந்திருந்தும் உரிய நேரத்தில் சுருக்கப்படுத்தி விடைகளை எழுதத் தவறுதல்.

★தெரிந்த விடைகளை தொகுத்து வடிவமைத்து கேள்விக்கு ஏற்றவாறு விடைகளை எழுதத் தவறுதல்.

மேற்படி தவறுகளுக்கான பிரதான காரணம் மாணவர்களுக்கு பயிற்சியின்மையே ஆகும். அதாவது, பரீட்சை மாதிரி வினாத்தாள்களுக்கு அவர்கள் பரீட்சயமாகாது இறுதிப்பரீட்சையை எழுதுவதாகும்.

இந்தப் பிரதான குறைபாட்டைக் களையும் வகையில் இவ்வெளியீடு தனது பணியைத் திறம்பட மேற்கொள்ளவுள்ளது. தற்போது அனைத்துப்பாடங்களுக்குமான வினாத்தாள்-1 இற்கான பாடப்பரப்புகளை முடித்துள்ள உங்களுக்குப் பிரபல ஆசிரியர்களின் வினாத்தாள் -01 இற்கான பல்வேறுகோண மாதிரி வினாத்தாள்களை இவ்வெளியீடு அதிகமாக தாங்கிவரவுள்ளது.

பரீட்சை நெருங்கும் காலங்களில் வினாத்தாள்-02 ஐயும் உள்ளடக்கிய முழுமையான வினாத்தாள்கள் இப் பகுதியில் வெளிவரவுள்ளன. இதைவிடக் குறிப்பிட்ட சில பாடங்களுக்கான கற்றல் குறிப்புகளும் வெளிவரவுள்ளன. இவ் வெளியீட்டின் வினாத்தாள்களைதொடர்ச்சியாக நேரங்கணித்துப் பயிற்சி செய்தால், பரீட்சைகள் உங்களுக்கு பரீட்சயமாகிவிடுவதை நீங்கள் உணர்வீர்கள் என்பது கல்விச்சுடரின் அசையாத நம்பிக்கை ஆகும்.

**- ஆசிரியர்: கல்விச்சுடர் -**

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கான

புள்ளி வழங்கும் திட்டம்- அரச பரீட்சை வினாத்தாள் ஒகஸ்ட்-2008

# அரசியல் மூலத்தத்துவங்கள்-01

*கடந்தவாரத் தொடர்ச்சி............*

06.பின்வருவனவற்றை ஆராய்க.

### 1) அரசியல் கட்சிகளை வகைப்படுத்தல்

அரசியல் கட்சிகள் தனிக்கட்சி, இருகட்சி, பலகட்சி என 3 வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஓர் அரசியல் முறைமையில் செயற்படும் கட்சிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே இவ்வகையீடு மேற்கொள்ளப்படுகிறது. ஓர் அரசியல் முறைமையில் சமூகத்தில் நிலவும் பல தன்மை நிலையைப் போட்டிகரமான முறையில் வெளிப்படுத்துவதற்குத் தேவையான வகையில் ஒழுங்குபடுத்துவதற்கு மக்களுக்கு இடமளிக்காவிட்டால், மக்கள் அபிப்பிராயம் ஒழுங்கமைவதற்கு ஒரு கட்சி மட்டுமே காணப்பட்டால் அது தனிக்கட்சி முறை என்று அழைக்கப்படும். ஒருகட்சி முறை காணப்படும் அரசியல் முறைமைகள் பொதுவாக ஏகாதிபத்திய முறை என அழைக்கப்படும். ஓர் அரசியல் முறைமையில் காணப்படும் அரசியல் கட்சிகளுள் அதன் செயற்பாட்டின் மீது நிர்ணயமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இரு கட்சிகள் காணப்பட்டாலும் இரண்டு கட்சிகள் மட்டும் இருப்பின் அது இரு கட்சிமுறை என அழைக்கப்படும். இதன்பொருள் பல அரசியல் கட்சிகள் மட்டுமே பிரதான செயற்பாட்டாளர்களாக இடம்பெறும் என்பதாகும். சிறிய கட்சிகளின் தாக்கம் குறைந்த மட்டத்திலேயே காணப்படும்.

### 2) அரசியல் கட்சிகளின் பணிகள்

அ. சிதறியுள்ள மக்கள் அபிப்பிராயங்களை ஒன்றுதிரட்டுதல்.
ஆ. மக்களின் அரசியல் அதிகாரத்தை அரசின் இறைமை அதிகாரத்தோடு கலக்கச்செய்து ஆணை அதிகாரத்தை உருவாக்குதல்.
இ. வாக்காளர்களை ஒழுங்குபடுத்தல்.
ஈ. வாக்காளர்களை அரசியல் ரீதியாக அறிவூட்டுதல்.
உ. தலைவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
ஊ. அரசியல் போட்டியில் ஈடுபடுதல்.
எ. அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் பங்குபற்றல்.
ஏ. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் காவலாளியாகச் செயற்படுதல்.

### 3) அரசியல் கட்சிகளின் அனுகூலங்கள்

*அனுகூலங்கள்:-*

அ. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதும் கொண்டுநடத்துவதும் அரசியல் கட்சிகளாகும். அரசியல் கட்சிகளையும் ஜனநாயகத்தையும் ஒன்றிலிருந்து ஒன்றாகப் பிரிக்கமுடியாது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகக் கருதப்படுகின்றன.
ஆ. மக்கள் அரசியலில் பங்கேற்பதற்கு வாய்ப்பளிக்கும் இணைப்பை வழங்குதல். நவீன அரசு முறைமையில் மக்கள் நேரடியாக அரசியலில் பங்குபற்ற முடியாத நிலைமையை இல்லாது ஒழித்து மக்களையும் அரசையும் அரசியல் கட்சிகளே ஒன்றிணைக்கின்றன.
இ. மனிதன் பிறப்பிலேயே அரசியல் பிராணியாயினும், நவீன அரசியல் முறைமையில் மக்களை உண்மையான செயற்பாட்டு அரசியல் பிராணியாக மாற்றுவது அரசியல் கட்சிகளாகும்.
ஈ. சமூக சீர்திருத்தவாதி என்ற வகையில் அரசியல் கட்சிகள் ஆற்றும் சேவைகள் பிறிதொரு அனு கூலமாகக் கருதப்படுகிறது. நாட்டுக்குப் பொருத்தமற்ற சட்டங்களை அகற்றுவதும், தேவையான சட்டங்களைப் பிறப்பிப்பதற்கான யோசனைகளை முன்வைப்பதும், சமூக சீர்திருத்தங்களுக்காக கொள்கைத் திட்டங்களை முன்வைப்பதும் அரசியல் கட்சிகளாகும்.
உ. நாட்டுக்கு நிச்சயமான அரசியல், பொருளாதார சமூகக் கொள்கைளை முன்வைத்து அவற்றை மக்களுக்கு ஊட்டி அவற்றைக் கருத்துகளாக மாற்றி, அதன் அடிப்படையில் மக்களை ஒழுங்கு படுத்துவதும் அரசியல் கட்சிகள் ஆகும்.
ஊ. பதவியில் உள்ள அரசாங்கம் தன்னிச்சையானதாக மாறுவதைத் தடுத்து அது ஜனநாயக ரீதியாகச் செயற்படுவதற்குத் தூண்டும்வகையில் எதிர்க்கட்சிகள் செயற்படும்.
எ. தலைவர்களை உருவாக்குதல், நிறைவேற்று மற்றும் சட்டவாக்க அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் தாபனங்களுக்குத் தேவையான அரசியல்வாதிகளைப் பயிற்றுவித்தல்.

*பிரதிகூலங்கள்:-*

அ. அரசியல் கட்சிகள் தமது சுய விருப்புவெறுப்புகளுக்காக தேசிய நலன்களைக் கீழ்ப்படுத்துதல்.
ஆ. மக்களை சமப்படுத்த முடியாத எதிர் அரசியல் குழுக்களாக பிளவுறச்செய்து சண்டையிடுவதற்குத் தூண்டுதல்.
இ. மனிதர்களின் தனியாட் தன்மையை அழிவுறச்செய்தல்.
ஈ. சிலவேளை மக்களுக்கு முறையற்ற அரசியல் கல்வியை வழங்குதல்.
உ. ஊழற் செயற்பாடுகளுக்கு வழிவகுத்தல்.
ஊ. கட்சி உறுப்பினர்களுக்குப் பக்கச்சார்பற்ற வகையில் கவனிப்புகளை மேற்கொள்வதன் மூலம் சமனான கவனிப்பு என்ற ஜனநாயக உரிமையை மீறுதல்.
எ. அதிகாரத்தைப்பெறும் கட்சியின் சர்வாதிகாரத்திற்கு முழு நாட்டையும் உட்படுத்துதல்.
ஏ. பல கட்சிமுறையின் மூலம் நாட்டின் அரசியல் ஈடுபாட்டை அழிவுக்கு உட்படுத்தல்.

இந்த இதழில், மாவட்ட ரீதியாக முன்னிலையில் திகழும் ஆசிரியர்களினதும், மூத்த அனுபவமிக்க ஆசிரியர்களினதும் மாதிரி வினாத்தாள்கள் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளன.

ஐ. இனங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தித் தாக்கம் செலுத்துதல்.
ஒ.கல்விகற்றபுத்திஜீவிகளின் சேவையை நாட்டுக்குப் பெற்றுக்கொடுப்பதனைத் தடை செய்தல்.

07. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றை ஆராய்க.

### *1) மனித உரிமைகள்*

மனிதர்களுக்கு சிறப்பானதும் திருப்திகரமானதுமான வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான நிபந்தனைகளே உரிமைகள் ஆகும். அவ்வுரிமைகளை சிவில், அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் என்றும், சமூக, கலாசார மற்றும் ஒழுங்கமையும் உரிமைகள் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். மனிதவாழ்க்கையையும் அவனது இருப்பையும் பாதுகாப்பதற்கு சிவில் உரிமைகளும் அரசியல் வாழ்க்கையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அரசியல் உரிமைகளும், பொருளாதார வாழ்க்கைக்குப் பொருளாதார உரிமைகளும், சமூக வாழ்க்கைக்கு சமூக உரிமைகளும், மொழி, சமயம் போன்ற அடையாளங்களுக்கு கலாசார உரிமைகளும் அவசியமாகின்றது. மனித உரிமைகள் என்பது சகல மனிதர்களுக்கும் மனிதத்துவத்தின் காரணமாக உரித்தாகும் பொது உரிமைகள் ஆகும். அடிப்படை உரிமைகள் என்பது ஒரு நாட்டின் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட ஆனால், இருப்போடு நெருங்கிய வகையில் இணைந்துள்ள உரிமைகளுள் சிலவாகும். அரசியல் யாப்பின் மூலம் அவ்வுரிமைகள் வழங்கப்பட்டிருப்பின் அவை மீறப்படும்போது மக்கள் நீதிமன்றத்தினை நாடி அதிகாரம்கோரி நிற்கலாம். உதாரணமாக இலங்கையில் 1978ஆம் ஆண்டு யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடலாம்.

மனிதப்பிறப்பின் இருப்பு சம்மந்தமாக மனித உரிமைகள் கொண்டுள்ள முக்கியத்துவத்தின் காரணமாக மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் சர்வதேச சமூகம் அதிக கவனம் செலுத்தும் பிரதான தலைப்பாகை மாறியுள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஐ.நா. மேற் கொள்ளும் பலத்த முயற்சியின் மூலம் இதனை அறியலாம். மேற்கொள்ளும் பலத்த முயற்சியின் மூலம்இதனை அறியலாம்தற்காலத்தில் ஓர் அரசு ஜனநாயகமானதா, இல்லையா என்பதனை தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தும் ஓர் அளவுகோலாக மனித உரிமைகள் பயன்படுத்தப்படுகிறது. மனித உரிமைகளை மீறும் அரசுகளை சர்வதேச சமூகத்திலிருந்து புறக்கணிப்பதன் மூலம் உலக சமூகம் இதில் காட்டும் ஈடுபாட்டை நன்கு அறியலாம். அரசியல் யாப்பில் உரிமைகள் அத்தியாயம் ஒன்றை இடம்பெறச் செய்தல், உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை நீதித்துறைக்கு ஒப்படைத்தல், சட்டவாட்சியை உறுதிப்படுத்துதல், பொருளாதார நியாயத்தை நடைமுறைப்படுத்துதல், ஊடகச் சுதந்திரத்தை நிலைநிறுத்துதல், பல்வேறு சமூக இயக்கங்கள் ஊடாக உரிமைகள் பற்றி மக்களுக்கு அறிவூட்டுதல் போன்ற வழிமுறைகள் மூலம் மனித உரிமைகள் தற்கால அரசுகளில் பாதுகாக்கப்படுகின்றன. மனித உரிமைகளைப்பற்றிப் பேசும்போது கட்டாயமாக ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய விடயம் என்னவெனில், கடமை என்பதாகும். சகல உரிமைகளும் ஏதேனும் ஒரு கடமையுடன் இணைந்தே காணப்படும். அதன்படி கடமைகளை நிறைவேற்றினால் மட்டுமே மனித உரிமைகளை நிறைவேற்றமுடியும். கடமையை நிறைவேற்றாதவர்கள் உரிமைகளை அனுபவிக்க முடியாது என்று அதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது. கடமைகளை நிறைவேற்றாது உரிமைகளை மட்டும் கோரி நிற்கும் மனிதர்களை நிழல் இல்லாத மனிதர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

### *2) நீதித்துறையின் சுதந்திரம்*

நிறைவேற்று மற்றும் சட்டத்துறைகளின் தலையீடு இன்றி சுதந்திரமாகவும் பக்கசார்பாகவும் அச்சமின்றியும் நீதியை நிருவகிப்பதற்கு நீதித்துறைக்குள்ள திறனே நீதித்துறையின் சுதந்திரம் என்று அழைக்கப்படும். சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாத்து, கொண்டு நடத்துவதற்கும் தன்னிச்சையான ஆட்சி தோன்றுவதைத் தடுப்பதற்கும், மனிதனின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்துப் பேணுவதற்கு உயர்மட்டத்திலான அரசியல் கலாசாரத்தை நிலைநிறுத்துவதற்கும் நீதித்துறையின் சுதந்திரம் ஓர் அத்தியாவசிய நிபந்தனை ஆகும். ஒரு நாட்டின் ஜனநாயகத்தை கடைப்பிடிப்பதற்கு பயன்படும் பிறிதொரு அளவுகோல் நீதித்துறையின் சுதந்திரம் ஆகும். ஏனெனில், நீதித்துறையின் சுதந்திரம் ஜனநாயக அரசியல் முறைமையில் மட்டுமே நிலவுவதனால் ஆகும்.

நீதிபதிகள் நியமிக்கப்படும் முறை, அவர்களின் சேவைப்பாதுகாப்பு, தேவையற்ற தலையீடுகள் மற்றும் தாக்கங்களின்றி நீதித்துறை சுதந்திரமாக செயற்படுதல் என்ற காரணங்களிலேயே நீதித்துறையின் சுதந்திரம் தங்கியுள்ளது. இந்த மூன்று நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் தரவுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுமாயினும் அவை கட்டாயமாக இருக்கவேண்டும் என ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த நிபந்தனைகளுக்கு மேலதிகமாக நடத்தை நேர்மையும் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்பதில் தாக்கம் புரிகிறது. நீதிபதிகள் அறிவிலும் நேர்மையிலும் குறைந்தவர்களாயின் மற்றும் அவர்களால் சுதந்திரமாகத் தீர்மானங்களை எடுக்க முடியாவிடின் நீதித்துறையை தாபிப்பதன் உயர் நோக்கம் நிறைவேறமாட்டாது.

### *3) எளிய பெரும்பான்மை முறையின் நிறைகளும் குறைகளும்*

அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாகத் தற்காலத்தில் இரு பிரதான முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை எளிய பெரும்பான்மை முறையும் விகிதசம பிரதிநிதித்துவ முறையும் ஆகும். சிறிய தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக்கொண்டு செயற்படும் எளிய பெரும்பான்மை முறையின்படி ஒரு பொதுத்தேர்தலில் ஒரு தேர்தல் தொகுதியில் வழங்கப்பட்டு செல்லுபடியான மொத்தவாக்குகளில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார். வேறு முறையில் கூறின் வெற்றிக் கம்பத்தை முதலில் அடைபவரே வெற்றி பெற்றவராவர். இம்முறை சில குறைகளையும் நிறைகளையும் கொண்டுள்ளது. அவையாவன:-

*நிறைகள்:*

1.வாக்காளனுக்கும் பிரதிநிதிக்குமிடையே உருவாகும் நெருங்கிய தொடர்பு.
2.பலமான அரசியல் கட்சிமுறை தோன்றுதல்.
3.பலமான அரசாங்கமும் பலமான எதிர்க்கட்சியும் உருவாகுதல்.
4.இரண்டு தேர்தல்களுக்கிடையிலான இடைத்தேர்தல் மூலம் மக்களின் அபிப்பிராயத்தை அளவிட்டு அறிய முடியுமாதல்.
5. அரசியல் கட்சித்தலைவர்களின் ஆதிக்கம் வரையறுக்கப்படுதல்.

*குறைகள்*

1. பெரும்பான்மை அபிப்பிராயம் பிரதிநிதித்துவப்படுத்தப்படாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# அளவையியலும் விஞ்ஞான முறையும்

ஆசிரியர்:- M.W.காண்டீபன்

## எடுப்புக்கள்

01.விபரிப்பு பயன்பாடு உடையதும் யதார்த்த உலகிற்கு உட்பட்டதும் உண்மையென்றோ பொய்யென்றோ கூறக்கூடியதுமான அர்த்தமுள்ள கூற்று அல்லது வசனம் எடுப்பாகும்.
உதாரணம்:- மலர்கள் அனைத்தும் அழகானவையாகும்.

* நாற்பிரிவுத்திட்டம்

1) நிறைவிதி எடுப்பு
உதாரணம்:- மனிதர் அனைவரும் இறப்பவர் ஆவர்.

2) நிறை மறை எடுப்பு
உதாரணம் :- மனிதர்கள் எவரும் இறப்பவர்கள் அல்லர்.

3) குறை விதி எடுப்பு
உதாரணம்:- மனிதர்கள் சிலர் இறப்பவர்கள் ஆவர்.

4) குறை மறை எடுப்பு
உதாரணம்:- மனிதர்கள் சிலர் இறப்பவர் அல்லர்

| எடுப்பு | அளவு | பண்பு |
|---|---|---|
| A | நிறை | விதி |
| E | நிறை | மறை |
| I | குறை | விதி |
| O | குறை | மறை |

* முப்பிரிவுத் திட்டம்

1) அறுதி எடுப்பு அல்லது பதார்த்த எடுப்பு.
உதாரணம்:- கிளிகள் அனைத்தும் பச்சை நிறமாகும்.

2) நிபந்தனை எடுப்பு
உதாரணம்:- அவன் படித்தால் பரீட்சையில் சித்தியடைவான்.

3) உறழ்வு எடுப்பு
உதாரணம்:- மழை பெய்யும் அல்லது வெயில் எறிக்கும்.

* தனிப்பொருள் எடுப்பு

1) தனிவிதி எடுப்பு
உதாரணம்:- சந்திரன் அறிவொளி ஆவான்

2)தனிமறை எடுப்பு
உதாரணம்:- சந்திரன் அறிவாளியல்ல.

## எடுப்பு முரண்பாடு

01. எடுப்பு முரண்பாடு வகைகள்
1) மறுதலை முரண்பாடு
2) உப மறுதலை முரண்பாடு.
3) வழிப்பேறு முரண்பாடு.
4) எதிர்மறை முரண்பாடு

உயர்தர மாணவர்களுக்கான
ஒரே ஒரு விசேட வழிகாட்டி

எடுப்பு முரண்பாட்டுச் சதுரம்




எடுப்பு முரண்பாட்டுக் கள்ள முறை

| | A | E | I | O | |
|---|---|---|---|---|---|
| A | T | F | T | F | O |
| E | F | T | F | T | I |
| I | D | F | T | D | E |
| O | F | D | D | T | A |

### பதங்களின் பரவல் விதி அல்லது வியாப்தி விதி

எடுப்பு ஒன்றில் அங்கம் வகிக்கும் எழுவாய் பயனிலை பதங்களில் முழு அங்கத்துவம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதா அல்லது சில அங்கத்துவம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வது பதங்களின் பரவல் விதியாகும்.
உதாரணம்:- A- ( நாய்கள் அனைத்தும்) குரைப்பன ஆகும்.
E - ( நாய் எவையும் குரைப்பன அல்ல.)
I - (நாய்கள் சில குரைப்பன ஆகும்.)
O - (நாய்கள் சில குரைப்பன அல்ல.)

| எடுப்பு | எழுவாய் | பயனிலை |
|---|---|---|
| A | ✓ | ✗ |
| E | ✓ | ✓ |
| I | ✗ | ✗ |
| O | ✗ | ✓ |

| தரவுகள் | A | E | I | O |
|---|---|---|---|---|
| 1. A உண்மை | - | பொய் | உண்மை | பொய் |
| 2. A பொய் | - | சந்தேகம் | சந்தேகம் | உண்மை |
| 3. E உண்மை | பொய் | - | பொய் | உண்மை |
| 4. E பொய் | சந்தேகம் | - | உண்மை | சந்தேகம் |
| 5. I உண்மை | சந்தேகம் | பொய் | - | சந்தேகம் |
| 6. I பொய் | பொய் | உண்மை | - | உண்மை |
| 7. O உண்மை | பொய் | சந்தேகம் | - | சந்தேகம் |
| 8. O பொய் | உண்மை | பொய் | உண்மை | - |

### எடுப்பு முரண்பாட்டு மாதிரி வினாக்கள்

1. * யாதார்த்தத்தில் காண முடியாத அல்லது உண்மையில் கண்டு கொள்ள முடியாத அல்லது எழுவாயை வெற்று வகுப்பாகக் கொண்ட அல்லது பௌதீக அதீத பதார்த்த எடுப்புக்களை எடுப்பு முரண்பாட்டுச் சதுரத்தின் மூலம் வாய்ப்புப்பார்க்க எத்தனிக்கும் பொழுது எழும் பிரச்சினையை விளக்குக.
* எல்லாமுரண்பாடுகளிலும் எதிர் மறை முரண்பாடே சிறந்தது.
* பாரம்பரிய முரண்பாட்டு சதுரத்திற்கும் அதுபற்றிய தற்கால விளக்கத்திற்கும் இடையிலான வேறு பாட்டைத் தருக.

2. அ) முரண்பாட்டுச் சதுரத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் அனுமானங்கள் சரியானவையா,பிழையானவையா என்பதைத் தீர்மானிக்குக.
1. நாய்கள் குரைப்பன ஆகும். எனவே,நாய்கள் சில குரைப்பன அல்ல.
2. நாய்கள் அதிகமானவை குரைப்பன அல்ல என்பது பொய்யென்றால் நாய்கள் குரைக்கும் என்பது தெளிவு.
3. மனிதர்கள் பொறாமை பிடித்தவர்கள்,எனவே,சில மனிதர்கள் பொறாமை பிடித்தவர்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும்.
4. கழுதைகள் ஒன்றேனும் சங்கீதம் பாடுவன அல்ல என்பது உண்மையாக இருந்தால் கழுதைகள் கிட்டத்தட்ட சங்கீதம் பாடுவன என்பதனை உறுதிப்படுத்த முடியாது.
5. காகங்கள் சில கறுப்பு நிறம் அல்ல. ஏனெனில் அனைத்து காகங்களும் கறுப்பு நிறம் என்பதால் ஆகும்.
6. நரி சக்தியுள்ளது என்றால் நரி சக்தியுடையது அல்ல என்பவை உறுதிப்படுத்த முடியும்.
7. எந்த அன்னமும் வெள்ளை நிறமுடையது அல்ல என்றால் அன்னம் வெள்ளை நிறம் என்பதை தீர்மானிக்கலாம்.
8. எருமை மாடுகள் மழையில் நனைவது இல்லை என்பது பொய்யல்ல என்றால் எருமை மாடுகள் சில மழையில் நனைவது உண்மையல்ல.

ஆ. 1. முரண்பாட்டுச் சதுரத்தை ஆதரமாகக் கொண்டு கீழ் வருவனவற்றிற்கு விடை தருக.
எல்லா பாம்புகள் நஞ்சுடையவை என்பது உண்மையென்றால் கீழ் வரும் எடுப்புக்களிலிருந்து எய்தக்கூடிய உண்மைப் பெறுமானம் பற்றிய முடிவு என்ன?
1.- பாம்புகள் நஞ்சுடையவை அல்ல.
- ..................................................

2. - அதிகமான பாம்புகள் நஞ்சுடையவை ஆகும்.
- ..................................................

3.- எல்லா பாம்புகள் நஞ்சுடையவை அல்ல.
- ..................................................

2. அதிகமான நோய்களை குணப்படுத்த முடியாது என்பது உண்மையல்ல என்றால் கீழ்வரும் எடுப்புகளில் இருந்து நீர் எய்தக்கூடிய உண்மைப் பெறுமானம் பற்றிய முடிவு என்ன?
1. நோய்கள் குணப்படுத்தக் கூடியவையல்ல
2. நோய்கள் குணப்படுத்தக் கூடியவையாகும்.
3. கிட்டத் தட்ட நோயைக் குணப்படுத்த முடியும்.

இ. கீழ்வருவன சரியானவையா,பிழையானவையா எனக் கூறுக.
( எடுப்பு முரண்பாட்டு முறையைப் பயன்படுத்துக.)
1. A உண்மையாக இருக்கும் போது தொடர்புள்ள I உண்மையாகும்.
2. A யின் மறுதலை பொய் என்றால் I யின் உபமறுதலை சந்தேகம் ஆகும்.
3. Aயின் வழிப்பேறு பொய்யென்றால் E யின மறுதலை உய்மையாகும்.
4. A யின் மறுதலையின் எதிர்மறை உண்மையல்ல என்றால் E இன் வழிப்பேற்றின் எதிர்மறை பொய்யாகும்.
5. A உண்மையாகவும் E பொய்யாகவும் இருக்கும் போது I எடுப்புச் சந்தேகம் ஆகும்.
6. A பொய்யாகவும் E உண்மையாகவும் இருக்கும் போதும் I எடுப்பு உண்மையாகும்.
7. முக்கோணம் மூன்று கோணம் உடையது அல்ல என்பது பொய் என்றால் முக்கோணம் மூன்று கோணம் உடையது ஆகும். என்பது உண்மையல்ல.
8. மலர்கள் அழகாணவை என்பது உண்மையாகவும்
மலர்கள் சில அழகாணவையல்ல என்பது பொய்யாகவும் இருந்தால் மலர்கள் சில அழகாணவை என்பது உண்மையாகும்.

### வெளியேற்று அனுமானம்

வெளியேற்று அனுமானத்தின் வகைகள்

★ மறுவாரம்
★ எதிர் மாற்றம்
★ எதிர்வைத்தல்
★ நேர் மாற்றம்
— பிரதான பிரிவுகள்

★ மறு மாற்ற எதிர்மாற்றம்
★ மறு மாற்ற எதிர்வைக்க
★ மறுமாற்ற நேர் மாற்றம்
— உப பிரிவுகள்

மறுமாற்றம்

01. திர்மானத்தின் தாற்பரியம் மாறாதிருக்கையில் எழுவாயோடு பயயனிலை தொடர்பு பட்டிருக்கும் முறையில் பண்பில் மாற்றம் ஏற்படுவது மறுமாற்றம் எனப்படும். இங்கு மூல எடுப்பு மறுமாற்று எனவும் அதனிலிருந்து இந்நெறி பெறப்படுவது மறுமாறு எனவும் அழைக்கப்படுகின்றன.

**மாணவர் கவனத்திற்கு.....**

★இப்பகுதியில் வெளிவரும் அனைத்து வினாக்களையும் நேரங்கணித்து உரிய நேரத்துக்குள் பயிற்சி பெறுங்கள்.

★இப்பகுதிகளுக்குரிய விடைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளிவரும் போது ஒப்பீடுசெய்து நீங்கள் சுயமாகவே திருத்திக்கொள்ளுங்கள்.

★இப்பகுதியில் வெளிவரும் பல்கோண வினாக்களில் ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் எமது கல்விச்சுடர் பகுதிக்குத் தெரியப்படுத்தின் உரிய ஆசிரியர் ஊடாக ஆலோசனை வழங்கப்படும்.

ஆசிரியர், உதயன் - கல்விச்சுடர்,
இல.36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 071-6850005, 021-2225837, 071-4275035
தொலைநகல் :- 021-2229933,
மின்னஞ்சல் :-newkalvisudar@yahoo.com

இந்த இதழில், மாவட்ட ரீதியாக முன்னிலையில் திகழும் ஆசிரியர்களினதும், மூத்த அனுபவமிக்க ஆசிரியர்களினதும் மாதிரி வினாத்தாள்கள் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August


கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்

# இரசாயனவியல்


கடந்த வாரத்தொடர்ச்சி............

06. a)1.மூலக்கூற்று இடைவிசைகள் அடிப்படையில் A,B ஐ கூறுகளாகக்கொண்ட கரைசலின் இலட்சியத்தன்மை பற்றி சுருக்கமாக விளக்குக.

2. இலட்சியக் கரைசலை ஆக்கக்கூடிய இரு திரவங்கள் A,Bஇன் ஆவியமுக்க அமைப்புப்பொருள் வரைபு கீழேயுண்டு. இதன் அருகே B,C கரைசல் ஒன்றின் இத்தகைய வரைபும் உண்டு. $f_B$-$f_C$ இடை விசையானது $f_{B-B}$, $f_{C-C}$ இடைவிசையிலும் சிறிது கூடியது.




$L_1$




$L_2$

இவ்வரைபுகளின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. கரைசல் $L_1$ இன் மொத்த அமுக்கம் யாது?
2. கரைசல் $L_2$இன் கொதி நிலையை $L_1$ இன் கொதிநிலையுடன் ஒப்பிடுக.
3. திரவம் $L_1$ ஆனது இரு தடவைகள் காய்ச்சி வடிப்பு செய்யப்பட்டது. பெறப்பட்ட வடிதிரவத்தில் உள்ள அளவு கரைசல் $L_1$இல் இருப்பதிலும் கூட/ குறைவு? எவ்வாறு என உய்த்தறிக.
4. கரைசல் $L_2$ இனை பகுதிபட காய்ச்சி வடிப்பில் B,Cஇனை முற்றிலும் தூயதாக்க முடியுமா? உமது விடையை விளக்குக.
5. $P_{L2}$இன் பெறுமானம் $P_{L1}$இலும் கூடவா? குறைவா? விளக்குக.
6. A,B,C மூன்று திரவங்களிலும் எது குறைந்த கொதிநிலையுடையது? ஏன்?

b) $50cm^3$, $0.1moldm^{-3}$ செறிவுடைய ஒரு மூலமென்னமிலம் HA25$^0$C இல் உண்டு இதற்குள்,

1. $25cm^3$ $0.1moldm^{-3}$ NaOH(aq) சேர்க்கப்பட்டது. கரைசலின் pH = 5 எனில் அமிலத்தின் $K_a$ யாது?
2. பகுதி (1)இற்கு அதே NaOH கரைசலில் மேலும் $25cm^3$ சேர்க்கப்பட்டது. விளைவுக் கரைசலின் pH யாது?
3. மேற்படி அமிலம் HA உம் NaOH(aq)இனையும் பயன்படுத்தி pH = 4 உடைய ஒரு கரைசலை எவ்வாறு தயாரிப்பீர்?
4. அமிலம் HA ஆனது ஒரு நடுநிலையாக்கலுக்கு காட்டியாக பயன்படுத்தக்கூடியது. எனில், இதனை HCl(aq) - $NH_3$(aq) இன் நியமிப்புக்கு காட்டியாகப் பயன்படுத்த முடியுமா? சுருக்கமாக விளக்குக.

c) 1. மோதுகைக் கொள்கையின் அடிப்படையில் $2NO(g) + O_2(g)$ $2NO_2(g)$ எனும் ஒரு படித்தாக்கத்தில் நடைபெறுவதற்கு அவசியமான நிபந்தனைகளை விளக்குக.

2. A,B எனும் இரு வாயுக்களின் தாக்கம் பற்றிய இரு பரிசோதனை விவரங்கள் இவை.

Expt. 1இல் இரு வாயுக்களும் ஒரு கண்ணாடிக்குடுவையில் தாக்கமுற விடப்பட்டபோது A,Bஇன் வெவ்வேறு செறிவுகட்கு ஆரம்ப தாக்கவீதம் அளக்கப்பட்டது.

| [A(g)]/$moldm^{-3}$ | [B(g)]/$moldm^{-3}$ | தாக்கவீதம்/ $moldm^{-3}S^{-1}$ |
|---|---|---|
| 1. 0.20 | 0.12 | $2 \times 10^{-3}$ |
| 2. 0.40 | 0.12 | $8 \times 10^{-3}$ |
| 3. 0.20 | 0.24 | $4 \times 10^{-3}$ |

எனின், தாக்கச் சமன்பாடு $R = k[A(g)]^m[B(g)]^n$ இங்கு m,n இணைக்காண்க.

Expt.2. A,B வாயுக்கள் இரண்டும் குறிப்பிட்ட ஒரு பதார்த்தில் படலமிடப்பட்ட கண்ணாடிக் குடுவையில் தாக்கமுற விடப்பட்டன.

| [A(g)]/$moldm^{-3}$ | [B(g)]/$moldm^{-3}$ | தாக்கவீதம்/ $moldm^{-3}S^{-1}$ |
|---|---|---|
| 1. 0.20 | 0.12 | $2 \times 10^{-3}$ |
| 2. 0.40 | 0.24 | $8 \times 10^{-3}$ |
| 3. 0.80 | 0.24 | $32 \times 10^{-3}$ |

எனின், தாக்கச்சமன்பாடு $R = k[A(g)]^m[B(g)]^n$ இங்கு m,n இனைக்காண்க இரு பரிசோதனைகளிலும் தாக்கவீதச் சமன்பாடு வேறுபடும் எனில், அதற்கான காரணம் யாதாகும் என விளக்குக.

07. a) 25$^0$C இல் $H_2SO_4$ இனால் நிரம்பலாக்கப்பட்ட நீர்க்கரைசலில் $[H^+(aq)][S^{2-}(aq)] = 1 \times 10^{-21} moldm^{-9}$ ஆகும். இவ்வெப்பநிலையில் CuS, MnS இன் Ksp முறையே $1 \times 10^{-43}$, $1 \times 10^{-14} moldm^{-3}$ ஆகும்.

1. ஒவ்வொன்றும் $1 \times 10^{-3} moldm^{-3}$ செறிவுடைய $Cu^{2+}$, $Mn^{2+}$(aq) கரைசல் ஒன்றிற்குள் $H_2S$(g) இனைச் செலுத்தும்போது MnS வீழ்படிவாவதனைத் தடுக்கத் தேவையான $H^+$ இன் ஆகக்குறைந்த செறிவு யாது?
2. $H_2S$இன் திரவக் கரைசலின் pH = 4 ஆயின், $H_2S$ செலுத்தின் MnS, CuS வீழ்படிவு தோன்றுமா? உய்த்தறிக.
3. MnSஐ வீழ்படிவாக்க யாதும் ஒரு வழிமுறையைக் குறிப்பிடுக.

b) வாயு AB ஆனது 400Kஇற்கு மேல் $A_2$(g), $B_2$(g) ஆக கூட்டப்பிரிகையடையக்கூடியது.

1. 300K இல் ஒரு விறைப்பான பாத்திரம் $4.157dm^3$ கனவளவுடையது. இதற்குள் ஒரு குறித்த தொகை AB(g) எடுக்கப்பட்டபோது அமுக்கம் $8 \times 10^5$pa ஆகக் காணப்பட்டது. பின்னர் தொகுதி 500K இற்கு வெப்பமாக்கப்பட்டு சமநிலையடைய விடப்பட்டபோது, சமநிலையில் AB(g) இல் 40% கூட்டப்பிரிகை அடைந்தது. எனில், 500K இல்
   1) சமநிலைத் தொகுதியின் அமுக்கம் யாது?
   2) தொகுதியின் Kp யாது?

2. 300Kஇல் $4.157dm^3$ பாத்திரம் ஒன்றில் ஆரம்பத்தில் $A_2$(g),$B_2$(g), AB(g) ஒவ்வொன்றிலும் lmol எடுக்கப்பட்டது.
   1) தொகுதியின் அமுக்கம் யாது என உய்த்தறிக.
   2) பின் தொகுதி 500Kஇற்கு உயர்த்தப்பட்டு சமநிலையடைய விடப்பட்டது. சமநிலையில், மொத்த அமுக்கத்தை உய்த்தறிவதுடன் $A_2$(g), $B_2$(g), AB(g) ஒவ்வொன்றினதும் பகுதி அமுக்கங்களைக் காண்க.

c) 300K யில் கனவளவுப்படி 80% $N_2$(g)உம் 20% $O_2$(g) உம் கொண்ட கலவை ஒன்று $415.7kNm^{-2}$ அமுக்கத்தில் $6dm^3$ குடுவையில் உண்டு. இதற்குள் 19.2g Mg நாடா இட்டு முற்றாக எரியூட்டப்பட்டது. Mg நாடா முற்றாக தாக்கமுற்றதுடன் $O_2$(g) உம் எஞ்சவில்லை.

1. தரப்பட்ட வாயுக்கலவையுடன் Mg இன் ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக.
2. $O_2$(g) உடன் தாக்கமுற்ற Mg இன் மூல் யாது?
3. தாக்கத்தில் மீதியான $N_2$(g) இன் அமுக்கமானது 600Kஇல் யாது?

குடுவை விறைப்பானது எனவும் வாயுக்கள் இலட்சிய நடத்தை எனவும் கொள்க.

ஏதாவது இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

08. 3d தொடரைச் சேர்ந்த மூலகங்கள் M,Q,R ஆகும். இவை மூன்றும் நீர்க்கரைசலில் உறுதியான முந்நேர் அயன்களை உருவாக்கக்கூடியன. இந்நேரயன்களில் முறையே 1, 3, 5 சோடியற்ற இலத்திரன்கள் உண்டு.

1) M,Q,R இன் இரசாயனக் குறியீடுகளைத் தருக.
2) Q ஆனது அதன் அதியுயர் ஒட்சியேற்ற நிலையில் oxy அனயன்கள் Y,Z இனை உடையது. இதில் Y ஆனது ஒரேயொரு Q அணுவை உடையது. எனின் Y,Z இனை இனங்காண்க.
3) Y இலிருந்து Z இணை எவ்வாறு ஆக்குவீர்? Z இனை எவ்வாறு Y ஆக்குவீர்? தனித்தனி தாக்கச்சமன்பாட்டை மட்டும் தருக.
4) M உம், R உம் உள்ள கலப்புலோகம் ஒன்றின் பயனையும் Q உம் R உம் உள்ள கலப்புலோகமொன்றின் பயனையும் தருக.
5) R இல் சாதாரணமாக இரு கற்றயன்களைத் தருக. இக்கற்றயன்களைப் பண்பறிமுறையில் எவ்வாறு இனங்காணலாம் என ஒவ்வோர் சோதனை தருக.

தொடர்ச்சி அடுத்தக் கிழமை வெளிவரும்............

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்

General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# வணிகக்கல்வி

ஆசிரியர்:-
ஆர்.ஜனாஜெஸ்மின்
உதவி:-அமலா.

## அலகு:- "பேரினப்பொருளாதார்க்கொள்கை,நுகர்வோர் பாதுகாப்பு"

**தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்-03 ,2009**

01. நுகர்வோர் அமைப்புக்களின் வகைகளில் தவறானது எது?
   1) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை.
   2) கூட்டுறவுச் சங்கம்.
   3) IOCU.
   4) நுகர்வோர் பாதுகாப்புச் சமாசம்.

02. இலங்கைக் கட்டளைப் பணியகத்தின் பணிகளில் தவறானது,
   1) தரமுறைமைச் சான்றுவழங்கல்.
   2) விளம்பர ஆலோசனை வழங்கல்.
   3) ஆய்வுகூட வசதி வழங்கல்.
   4) தொழில்நுட்ப அறிவூட்டல்.

03. தற்போது பாவனையிலுள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் எது?
   1) கிருமிநாசினி பாதுகாப்புச் சட்டம்.
   2) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.
   3) நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம்.
   4) பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம்.

04. Jhon F.Kennady யால் கூறப்பட்ட நுகர்வோர் உரிமைகளில் ஒன்று பின்வருவனவற்றுள் எது?
   1) சுகாதாரச் சூழல் உரிமை.
   2) நுகர்வோர் கல்வி.
   3) கவனம் ஈர்த்தல்.
   4) ஈடுசெய்யும் உரிமை.

05. கொள்வனவு ஆற்றலில் செல்வாக்குச் செலுத்தாத காரணி,
   1) விலை.
   2) விளம்பரம்.
   3) பாதுகாப்பு.
   4) கல்வி.

06. பொருளாதாரம் ஒன்றின் குறிக்கோள்களில் தவறானது,
   1) நியாயமான வருமானப் பங்கீடு.
   2) உச்ச கல்வியறிவு.
   3) சாதகமான சென்மதி நிலுவை.
   4) பொருளாதார அபிவிருத்தி.

07. பின்வருவனவற்றுள் எது சர்வதேச வர்த்தகக் கொள்கையுடன் தொடர்புடையது அன்று?
   1) சிறிய நடுத்தர கைத்தொழில் ஊக்குவிப்பு.
   2) நாணயமாற்று வீதத்தை மாற்றியமைத்தல்.
   3) அனுமதிப்பத்திரக் கட்டுப்பாடுகள்.
   4) இறக்குமதித் தீர்வைகளை அதிகரித்தல்.

08. நுகர்வோர் பொறுப்புக்களில் ஒன்று,
   1) பாதுகாப்புப் பெறுதல்.
   2) தகவல் பெறுதல்.
   3) கூட்டுப்பொறுப்பு.
   4) தேர்வுசெய்தல்.

09. பின்வருவனவற்றுள் எது ஒரு நேர்வரி?
   1) VAT.
   2) சுங்கத் தீர்வை.
   3) உள்நாட்டு உற்பத்தி வரி
   4) வருமானவரி.

10. அரசின் பணக்கொள்கையை நடைமுறைப்படுத்தப் பயன்படும் ஒரு கருவி,
   1) வட்டி வீதம்.
   2) நேர்வரி.
   3) அரச செலவு.
   4) அனுமதிப்பத்திரக் கட்டணம்.

* சுருக்கமான விடை தருக.

11. அரசின் செலவின மூலங்களைக் குறிப்பிடுக.
............................................. , .............................................

12. ............................................. என்பது சர்வதேசமட்ட நுகர்வோர் அமைப்பு ஆகும்.

13. ஓர் எழுத்தாளனின் நூலாக்க உரிமையை ............................................. மூலம் பாதுகாக்க முடியும்.

14. சர்வதேச ரீதியிலான நுகர்வோர் உரிமைகளைப் பிரகடனப்படுத்தியது ............................................. ஆகும்.

15. ஒரு நுகர்வோர் சமூகத்தின் ஆகக்குறைந்த உறுப்பினர் எண்ணிக்கை ............................................. ஆகும்.

16. முதலீட்டுத் தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணி ............................................. எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. புதிய வரவு-செலவுத் திட்டத்தின் தற்போதைய VAT வீதம் யாது?

18. வருமானவரி என்பது ஒரு ........................................ வரியாகும். இதன் புதிய பாதீட்டு விலைக்கழிப்பு எல்லை வருமானம் ........................................ ஆகும்.

19. ........................................ என்பது அரசின் பொருளாதாரக் கொள்கை ஆகும்.

20. இலங்கையில் வியாபார ஒழுக்கக் குறைவிற்கான காரணம் யாது?
........................................

## பகுதி 11

01. தற்காலத்தில் பாவனையாளர் பாதுபகாப்பு அவசியமாவதற்கான காரணங்கள் 5 தருக.

02. அரசு, வணிக அமைப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கான காரணங்கள் 4 ஐக் குறிப்பிடுக.

03. John F.Kennady யால் பிரகடனப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளில் 4ஐக் குறிப்பிட்டு ஒன்றை உதாரணத்துடன் விளக்குக.

04. தெரிவுக்கடன் கட்டுப்பாட்டுக் கருவியின் வகைகளைக் குறிப்பிடுக.

05. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிகளைக் குறிப்பிடுக.

06. SLS குறி பெறுவதற்கான தேவைப்பாடுகளைக் குறிப்பிடுக.

07. சேமிப்பு-முதலீடு என்பவற்றுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

08. நியமச்சான்றிதழ் பெறுவதால் நுகர்வோர் பெறும் நன்மைகளைக் குறிப்பிடுக.

09. Lable நுகர்வோரை எவ்வாறு பாதுகாக்கிறது என விளக்குக.

10. நுகர்வோர் பாதுகாப்புப்பெறும் முறைகளைக் குறிப்பிடுக.

11. அரச பாதீட்டின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

12. நுகர்வோரைப் பாதுகாக்கும் நிறுவனங்களைக் குறிப்பிடுக.

## கடந்த03.03.2009இல்வெளிவந்த வணிகக்கல்விக்கான விடைக் குறிப்புக்கள்

### பகுதி-1

01. வணிகச் சூழல்
02. வணிக ஒழுக்கம்/வணிக விழுமியம்
03. உலகச் சார்பு/வளங்களின் பிரதேச சமனற்ற பரம்பல்.
04. தொழில்நுட்பச் சூழல்
05. மத்திய வங்கிக்கு
06. ஆக்கப்பணி,ஊக்கப்பணி, ( நிறுவன ரீதியானது,நிதி ரீதியானது)
07. நேரில் வரி
08. வங்கி வீதம்
09. பெறுமதி கூட்டிய வரி
10. நடைமுறைச் செலவு
11. சரி
12. பிழை
13. பிழை
14. பிழை
15. பிழை
16. வெளிவாரி விளைவுகள்
17. தொழில்நுட்பச் சூழல்
18. எதிர்
19. நுகர்வோர்
20. சமூல

மாணவர்களே

பகுதி-11 இற்கு சுயமாகவே விடையளிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்

-விடைக்குறிப்புக்கள் நிறைவுபெற்றன.-


## கல்விப் பொதுத் தர்ாதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்

# பௌதிகவியல் - 1

ஆசிரியர் : - சி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip in Edu கொழும்பு விவேகானந்தா கல்லூரி

கடந்த வாரத்தொடர்ச்சி............

06.மாணவன் ஒருவன் ஐந்து இரும்புக் கோளங்களை ஒரே வரிசையில் அடுக்கி மீற்றர் கோலைப் பயன்படுத்தி அதன் ஆரையைத் துணிய முற்பட்டான் அவன் அவற்றை கீழே உள்ளபடத்தில் காட்டியவாறு ஒழுங்குபடுத்தினான்.




1) 1. படத்தில் காட்டப்பட்டுள்ள மீற்றர்கோலின் இழிவு எண்ணிக்கை யாது?
........................................

2) நிலை A இன் வாசிப்பைத் போதிய திருத்தங்களுடன் எழுதுக.
........................................

3) நிலை B இன் வாசிப்பை போதிய திருத்தங்களுடன் எழதுக.
........................................

4) வாசிப்பை எடுக்கும் போது கண்ணினை எவ்வாறு வைத்து அவதானிப்பீர்?
........................................

5) கண் A இற்கு இடது பக்கத்தில் இருக்கும் போது நீர் எதிர்பார்க்கும் வாசிப்பைக் குறிப்பிடுக.
........................................

6) கண் A இற்கு வலது பக்கத்தில் இருக்கும் போது நீர் எதிர்பார்க்கும் வாசிப்பைக் குறிப்பிடுக.
........................................

2) ஐந்து கோளங்களின் விட்டங்களின் கூட்டுத் தொகை யாது?
........................................

3) கோளம் ஒன்றின் ஆரை யாது?
........................................

4) கோளம் ஒன்றின் விட்டத்தை அளப்பதன் மூலம் இதே திருத்தமான ஆரையைப் பெற முடியுமா என விளக்குக.?
........................................

5) 1. இதே பருமனுடைய இரும்புக்கோளமொன்றின் ஆரை,விட்டம் துணிதற்கு மிகப்பொருத்தமான கருவி யாது?
........................................

2. நீர் பயன்படுத்தும் கருவியின் இழிவு எண்ணிக்கை யாது?
........................................

3. நீர் இக்கருவியைப் பயன்படுத்தியமைக்கான பிரதான இடர்பாடு யாது?
........................................

4. இக்கருவி பயன்படுத்தம் போது நீர் எதிர் நோக்கும் பிரதான இடர் பாடு யாது?
........................................

6) 1. இதே பருமனுடைய இறப்பர் கோளமொன்றின் ஆரை,விட்டம் துணிவதற்கு நீர் பயன்படுத்தும் கருவி யாது?
........................................


2. பல இறப்பர் கோளங்களைப் பயன் படுத்தி திருத்தமான ஆரை துணிவதற்கு இக்கருவி f (1) இல் உள்ள பயன்படுத்த முடியும் என ஒரு மாணவன் கூறுகிறான். இக் கூற்றை ஏற்பீரா என விளக்குக.?

7) இரச இழை முறையைப் பயன்படுத்தி மயிர்த்துளைக்குழாய் ஒன்றின் உள்விட்டம் துணிய வேண்டியுள்ளது.

1. இதற்குத் தேவையான உபகரணங்களின் பட்டியலைத் தருக.
........................................
........................................

2. மயிர்த்துளைக் குழாயினுள் இரச இழையை எவ்வாறு எடுப்பீர்?
........................................

3. மாணவன் ஒருவன் பின்வரும் நிலைகளில் மயிர்த்துளைக்குழாயினுள் இரசத்தை எடுத்தான் இவற்றின் சரியான நிலை யாது?




4. இரச இழையின் நீளம்/இரசத்தின் அடர்த்தி F இரச இழையின் திணிவு M எனின்,மயிர்த்துளைக் குழாயின் ஆரை r இற்கான கோவை ஒன்றை எழுதுக.
........................................

5. இரச இழையின் நீளம் 1.5cm, இரச அடர்த்தி 13,600$kgm^2$ ,இரசத்தின் திணிவு $15x10^{-3}$ kg எனின் குழாயின் ஆரை யாது?
........................................

6. மயிர்த்துளைக்குழாயின் ஆரை அளப்பதற்கு இன்னோர் உபகரணத்தைக் குறிப்பிடுக.
........................................

7. மேலே (இல.6) இல் குறிப்பிடப்பட்ட உபகரணத்தின் மூலம் ஆரை துணிவதில் உள்ள திருத்தமின்மை யாது?
........................................
........................................

## பௌதிகவியலின் விடைக்குறிப்புக்கள்

### பல்தேர்வு வினாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 96. 1 | 97. 3 | 98. 5 | 99. 3 | 100. 2 |
| 111. 4 | 112. 5 | 113. 1 | 114. 2 | 115. 2 |
| 116. 1 | 117.2 | 118. 1 | 119. 1 | 120. 5 |

### அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. 1. A - புறத்தடைகள் B - அகத்தாடைகள் C- ஆழம் அளக்கும் கோல்
D - திருகு E - சில்லு M - பிரதான அளவிடை
V- வேணியர் அளவிடை

2. A - குழாய் ஒன்றின் புறவிட்டம்/தடிப்பு அளத்தல்
B - குழாய் ஒன்றின் அக விட்டம் அளத்தல்
C - நிரலம் ஒன்றின் ஆழம் அளத்தல்
D - பிரதான அளவிடை மீது வேணியர் அளவிடையை நிலை நிறுத்தல்
E - பிரதான அளவிடை மீது வேணியர் அளவிடையை நகர்த்துவதற்கு

3. L.C 1mm- 9/10mm = 0.1mm (L.C= 1m - 1)

4. வாசிப்பு 11mm + 5x 0.1mm (L.C = 1m - 1)

5. 1. மறைப் பூச்சிய வழு. 2. திருத்தம் = + (10- 8) x 0.1mm = + 0.2mm

6. உண்மை உள்விட்டம் = 11.5mm + 0.2mm =11.7mm

7. 1. 0.1/11.7=10/117=0.008 2. 0.008()100=0.8%

8. இல்லை
மிகச் சிறிய துவாரம் உடையது. தாடைகள் உட்செலத்த முடியாது.
(இழிவெண்ணிக்கை 0.01mm

9. நகரும் நுனுக்குக்காட்டி

02) 1. A- பட்டை B - கதிர்க்கோல் C - திருகு
D - தாங்கி E - தீதாள்த்தலை/பற்சுழற்சி F - தீதாள்
M - பிரதான அளவிடை S - வட்ட/தீதாள் அளவிடை

2. 1. பொருளை உரவழியாது பாதுகாத்தல் ( நசியாது)

2. கிளிக் எனும் சத்தம் கேட்கப்படும்.

3. L.CC = புரியிடைத் தூரம்/வ.அ.பி எண்ணிக்கை = 1/2/50 =0.01mm

4. கதிர்க்கோலும் பட்டையும் ஒன்றுடன் ஒன்று தொடுமாறு செப்பம் செய்து அவதானிக்கப்படும்

5. 1.மறைப்பூச்சிய வழு
2. திருத்தம் = +(m - n) x இழிவெண்ணிக்கை
= + ( 50 - 47) x 0.01mm
= 0.03m

m - மொத்த வட்டப் பிரிப்பு n - பொருந்தும் வட்டப்பிரிப்பு

அடுத்த கிழமை தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

05. 1833 அரசியல் யாப்பு,
1) கோல்புறூக்-கமரன் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது.
2) ஆட்சியை ஜனநாயகமயப்படுத்துவதற்கான முதற்கட்டமாக அமைந்தது.
3) இலங்கையில் யாப்புறுவாதத்தின் ஆரம்பக்கட்டமாக அமைந்தது.
4) அரசியல்வாதிகளினால் புரியப்படும் ஆட்சிமுறையின் ஆரம்பக்கட்டமாக அமைந்தது.
(.............)

06. 1860களின் யாப்புச் சீர்திருத்தத்துக்கான ஆர்ப்பாட்டங்கள்,
1) ஐரோப்பியர்களாலும் பறங்கியர்களாலும் கொண்டுநடத்தப்பட்டன.
2) கோப்பிப் பயிர்ச்செய்கை நலன்களினால் ஊக்குவிக்கப்பட்டன.
3) பெருந்தோட்டத்துறைக்கு அரசாங்க நிதியை அதிகமாகப் பெற்றுக்கொள்வதனை இலக்காகக் கொண்டிருந்தன.
4) வணிகவாதிகளுக்கு அதிகளவு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆதரவாக நடத்தப்படவில்லை.
(.............)

07. 1910 அரசியல் யாப்புச் சீர்திருத்தம்,
1) சட்டத்துறையின் உத்தியோக மற்றும் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது.
2) உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களுக்கு அரச நீதியின் மீதான அதிகாரத்தை வழங்கியது.
3) கல்வி மற்றும் சொத்துத் தகுதிகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை அறிமுகஞ் செய்தது.
4) தேசாதிபதியின் அதிகாரத்தைத் தீவிரமான முறையில் குறைத்தது.
(.............)

08. 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் உயர்குழாம் வகுப்பு உருவாகுவதில் பங்களிப்புச் செய்த காரணிகளுள் சில,
1) கோப்பிப் பயிர்ச்செய்கையோடு இணைந்து வணிகவாதமும் வளர்ச்சியடைந்தமை.
2) மேற்கத்திய கல்வி பரவலடைந்தமை.
3) காலனித்துவ ஆட்சியாளர்கள் பின்பற்றிய பிரித்தாளும் கொள்கை.
4) அரசாங்க சேவையில் இலங்கையர்கள் நுழைவதற்கான வாய்ப்பு அதிகரித்தமை.
(.............)

09. இலங்கையின் தேசிய இயக்கம்,
1) சுதேச சமூகத்தின் உயர்குழாம் வகுப்பினரால் கொண்டுநடத்தப்பட்டது.
2) பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினுள் யாப்புச் சீர்திருத்தங்களை பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டிருந்தது.
3)சாதி, இனம், சமயம், பிரதேசம் என்பவற்றின் அடிப்படையில் பிளவுபட்டிருந்தது.
4)தென்னாசியாவிலேயே அதிகளவு போராட்டகரமான ஓர் இயக்கமாக இருந்தது.
(.............)

10. 1919இல் இலங்கைத் தேசிய காங்கிரஸின் உருவாக்கத்தைப் பாதித்த காரணிகளுள் சில,
1) சமய மறுமலர்ச்சி இயக்கத்தோடு இணைந்த சமூக இயக்கங்களினால் உதயமாகிய தேசிய வாதம்.
2) 1915 இனக் கலவரத்தைக் கொடூரமான முறையில் அடக்கியதற்கு எதிராக மத்தியதர வர்க்கத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.
3) 1917, 1918 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேசிய யாப்புச் சீர்திருத்த மகாநாடுகள்.
4) பெருந்தோட்டத்துறையில் புரட்சிகரத் தொழிலாளர் வகுப்பின் எழுச்சி.
(.............)

**✱ 11-20 வரையுள்ள வினாக்களில் இடம்பெறும் மூன்று கூற்றுக்கள் சரியானவை ஆகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

11. 1924 அரசியல் யாப்பு,
A - 1921 அரச கட்டளைக்கான ஒரு திருத்தமாக அமைந்தது.
B - 49 உறுப்பினர்களைக்கொண்ட ஒரு சட்டசபையைத் தாபிப்பதை முன்மொழிந்தது.
C - தேசாதிபதியின் அதிகாரத்தில் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.
D - நிருவாகக் குழுவை ஒழிப்பதனை முன்மொழிந்தது.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

12. 1930 களின் ஆரம்பப்பகுதியில் இடதுசாரி இயக்கத்தின் எழுச்சிக்குப் பங்காற்றிய காரணிகள்,
A - 1930 களில் கிராமப்புறங்களில் வளர்ச்சியடைந்த விவசாயப் போராட்டங்கள்.
B - 1930 களில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடிகள்.
C - மாக்சினதும் லெனினினதும் புரட்சிகரமான அரசியல் கருத்துகளின் தாக்கம்.
D - 1930களின் ஆரம்பப் பகுதியில் எழுச்சிபெற்ற இளம் தீவிர இயக்கம்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

13. 'சூரியமல்' இயக்கம்,
A - 'பொப்பிமல' இயக்கத்துக்கு எதிரான இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டது.
B - 1930 களின் ஆரம்பப் பகுதியில் பொதுமக்கள் மத்தியில் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகள் உதயமாவதில் பங்காற்றியது.
C - இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவர்களால் கொண்டுநடத்தப்பட்டது.
D - இலங்கை சமசமாஜக் கட்சியின் உதயத்துக்கான ஒரு முதற்கட்டமாக அமைந்தது.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

14. சமஜமாஜக் கட்சியின் ஆரம்ப நோக்கங்களாவன,
A - இலங்கைத் தேசிய காங்கிரஸுக்கு எதிரான நகர்ப்புறத் தொழிலாளர்களை ஒழுங்கமைத்தல்.
B - காலனித்துவ ஆட்சியிலிருந்து பூரண சுதந்திரத்தை வென்றெடுத்தல்.
C - உற்பத்தி, பங்கீடு, பரிமாற்றம் போன்ற சகல வழிமுறைகளையும் தேசியமயமாக்குதல்.
D - சாதி, இனம், சமயம், பால் என்பவற்றின் அடிப்படையில் உருவாகும் சகல வேறுபாடுகளையும் ஒழித்தல்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

15. ஏ.ஈ.குணசிங்க,
A - இலங்கையில் ஒழுங்கமைந்த தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடி ஆவார்.
B - 1922 இல் இலங்கைத் தொழிற்சங்கத்தை உருவாக்கியதில் பிரதான கர்த்தா ஆவார்.
C - இலங்கையில் ஒரு சோசலிஸ அரசைத் தாபிப்பதில் ஈடுபட்டவர் ஆவார்.
D - 1922 இல் முதலாவது பொது வேலைநிறுத்தம் அரங்கேறியமையின் பிரதான கர்த்தா ஆவார்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

16. டொனமூர் சீர்திருத்தங்கள்,
A - இலங்கைக்கு அதிக அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் வழங்கின.
B - ஆட்சியில் பங்கேற்பதற்கு சிறுபான்மையினருக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கின.
C - அரசியல் செயன்முறையில் சாதாரண மக்களும் பங்கேற்பதற்கான வழியைத் திறந்துவிட்டன.
D - பிரித்தானிய அரசாங்கம் இலங்கையுடன் வைத்திருந்த சில யாப்புசார் தொடர்புகளைக்கைவிட்டன.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

17. டொனமூர் ஆணைக்குழு பூரண பொறுப்பாட்சிக் கோரிக்கையை மறுத்தமைக்கான காரணங்கள்,
A - கண்டித் தலைவர்களின் எதிர்ப்பு ஆகும்.
B - சமூகப் பலதன்மையால் உருவாகிய கூர்மையான சமூகப் பிரிவுகளாகும்.
C - சமூகத்தில் பூரண பொறுப்பாட்சி பற்றிய பொதுவிருப்பு நிலவாமை ஆகும்.
D - பொறுப்பாட்சியை நடைமுறைப்படுத்தும் அளவுக்கு இலங்கைத் தலைவர்களிடம் முதிர்ச்சி காணப்பட்டமை ஆகும்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

18. டொனமூர் அரசாங்க முறைமைக்கு அடிப்படையாக அமைந்த மூலக்கொள்கைகளாவன,
A - காலனித்துவ ஆட்சியாளர்களுக்கும் இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நிறை வேற்று அதிகாரத்தைப் பிரித்தல்.
B - இலங்கைப் பிரதிநிதிகளுக்கு அனைத்துச் சட்டவாக்க அதிகாரத்தையும் ஒப்படைத்தல்.
C - இலங்கையர்களுக்கு வழங்கிய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தடைகள், சமன்பாடுகள், முறைமையைப் பிரயோகித்தல்.
D - காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு காலனித்துவ ஆட்சி சம்பந்தமான இறுதிப் பொறுப்பினை வழங்குதல்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

19. டொனமூர் அமைச்சரவை கொண்டிருந்த விசேட பண்புகள்,
A - இருவகையான உறுப்பினர்கள்
B - இரட்டைப் பொறுப்புடைமை
C - உள்ளக கபினட் உருவாகியமை
D - பிரதம அமைச்சரின் தலைமைத்துவம்
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

20. சர்வஜன வாக்குரிமையை வழங்குவதில் டொனமூர் ஆணைக்குழுவின்மீது பாதிப்பை ஏற்படுத்திய காரணங்கள்,
A - இந்தியத் தமிழர்களின் அரசியற் பங்கேற்பைக் குறைத்தல்.
B - அரசியல்வாதிகளை மக்களுக்குப் பொறுப்புக்கூறுவோராக ஆக்குதல்.
C - சாதாரண மக்களை அரசியல் நீரோட்டத்தில் நுழையச்செய்வதற்கு வழியமைத்தல்
D - சில்லோராட்சி உருவாகுவதைத் தவிர்த்தல்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(.............)

**✱ 1948 மற்றும் 1972 யாப்புகளின்கீழ் செயற்பட நாம நிருவாகிகளோடு தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகளைப் பயன்படுத்தி 21ஆம், 22ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - பிரித்தானிய முடியால் நியமிக்கப்பட்டார்.
B - பிரதம மந்திரியால் நியமிக்கப்பட்டார்.
C - மசோதாக்களுக்கு இறுதி அங்கீகாரமளிக்கும் அதிகாரம் பெற்றிருந்தார்.
D - குறைவான அதிகாரத்தையும், அந்தஸ்தையும் வகித்தார்.
E - பதவிக்காலம் நிர்ணயம் செய்யப்படவில்லை.
F - சட்டத்துறையின் அங்கீகாரத்துடன் நீக்க முடிந்தது.

21. 1948 யாப்பின் நாம நிருவாகியோடு தொடர்பான சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ABC 2) BDE 3) ACE 4) ADF
(.............)

22. 1972 யாப்பின் நாம நிருவாகியோடு தொடர்பான சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
1) ABF 2) BDF 3) CDF 4) DEF
(.............)

✱ 1948 மற்றும் 1972 யாப்புகளின்கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்துறைகளோடு தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகளைப் பயன்படுத்தி 23ஆம், 24ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - இருமன்ற சட்டத்துறை.
B - தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்தமை.
C - தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாகச் சில நியமன உறுப்பினர்களையும் கொண்டிருந்தமை.
D - சட்டவாக்க அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமை.
E - சட்டவாக்கத்தில் உயர்தன்மை மிக்க அதிகாரம்.
F - அரச அதிகாரத்தின் மீயுயர் கருவி.

23. 1948 யாப்பு சட்டத்துறைக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க
1) ABC 2) ACD 3) BCD 4) DEF
(.............)

24. 1972 யாப்பு சட்டத்துறைக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க
1) ADF 2) CDE 3) DEF 4) BEF
(.............)

✱ 1972 மற்றும் 1978 யாப்புகளின் கீழ் உருவாக்கப்பட்ட நிறைவேற்றுத் துறைகளுக்குப் - பொருந்தும் சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகளைப் பயன்படுத்தி 25ஆம், 26ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - சட்டத்துறையிலிருந்து தெரிவுசெய்யப்பட்டது.
B - மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுதல்.
C - கூட்டு நிறைவேற்றுத்துறை.
D - சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவியகற்ற முடியும்.
E - உலகிலேயே யாப்புசார் பலம்வாய்ந்த நிறைவேற்றுத்துறை.
F - சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவியகற்ற முடியாது.

25. 1972 யாப்பின்கீழ் இடம்பெற்ற நிறைவேற்றுத் துறைக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ABD 2) ABE 3) ACD 4) BDF
(.............)

26. 1978 யாப்பின் கீழ் இடம்பெற்ற நிறைவேற்றுத் துறைக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ABC 2) BEF 3) BDF 4) CDF
(.............)

✱ 1972 மற்றும் 1978 அரசாங்கங்களில் சட்ட மற்றும்நிறைவேற்றுத்துறைகளுக்கிடையிலான தொடர்பு பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகளைப் பயன்படுத்தி27ஆம், 28ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - அண்மித்த தொடர்பு.
B - சேய்மையான தொடர்பு.
C - உயர் பரஸ்பரம் தங்குநிலை.
D - சட்டத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து அதிகளவு விடுபட்டிருத்தல்.
E - நேரடிப் பொறுப்புடைமை.
F - சட்டத்துறையைக் கூட்டவும், கலைக்கவும், ஒத்திவைக்கவும் முடியும்.

27. 1972 அரசாங்கத்தில் சட்ட மற்றும் நிறைவேற்றுத்துறைகளுக்கிடையிலான தொடர்புகளுக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ACE 2) BEF 3) ADE 4) DEF
(.............)

28. 1978 அரசாங்கத்தில் சட்ட மற்றும் நிறைவேற்றுத்துறைகளுக்கிடையிலான தொடர்புகளுக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) AEF 2) BDF 3) CDF 4) CEF
(.............)

✱ 1972 மற்றும் 1978 யாப்புகளில் உள்ளடக்கப்பட்ட சில புதிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அப்புதிய அம்சங்களை இனங்கண்டு 29ஆம், 30ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - விகிதசமப் பிரதிநிதித்துவ முறை.
B - அரசியல் யாப்பு நீதிமன்றம்.
C - நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்.
D - அரசாங்கசேவை தொடர்பாகச் செய்யப்பட்ட இரு ஆலோசனைச் சபைகள்.
E - பாராளுமன்ற இறைமையை அடிப்படையாகக்கொண்ட ஒற்றைமன்றச் சட்டத்துறை.
F - அரசியலமைப்புப் பேரவை.

29. 1972 யாப்பின் புதிய அம்சங்களுக்குரிய சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ACD 2) BCD 3) BDE 4) BEF
(.............)

30. 1978 யாப்பின் புதிய அம்சங்களுக்குரிய சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ABF 2) BDF 3) BCF 4) ACF
(.............)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சகல அரசியல் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறாமை.
3.சட்டத்துறை உறுப்பினரின் சுதந்திரம் வரையறைகளுக்கு உட்படுதல்.
4.சிலவேளை ஒரு கட்சிக்கு அதிக எண்ணிக்கையான ஆசனங்கள் கிடைப்பதன் மூலம் ஆதிக்க வாதம் உருவாகுதல்.
5. அரசியல் கட்சித்தலைவர்களின் ஆதிக்கம் வரையறுக்கப்படுதல்.

### 4) ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறை

அமெரிக்க ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் பல கட்டங்கள் காணப்படுகின்றன.

கட்டம் - 01

கட்சி சம்மேளனத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல். இது இரண்டு முறையில் இடம்பெறும்.

அ. ஆரம்பத்தேர்தல் - இதில் மொத்த பிரதிநிதிகளும் 1/3 தொகுதியினர் மட்டும் பங்குபற்றுவர்.

ஆ.மாவட்ட மற்றும் மாகாண மாநாடுகள் - நியமனப்பத்திரத்தை எதிர்பார்க்கும் வேட்பாளர்கள் இதில் ஆஜராகுவர். பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வேட்பாளர்கள் மொத்தப் பிரதிநிதிகள் உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் பெற்றுக்கொள்வர்.

கட்டம் - 02

கட்சி மாநாடு - ஜனாதிபதித்தேர்தல் நடைபெறும் வருடத்தில் ஆகஸ்ட் முதல் செப்டம்பர் மாதங்களில் கட்சி மாநாடு இடம்பெறும். ஆரம்பத் தேர்தலில் தேவையான பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்ட வேட்பாளர் கட்சியின் வேட்பாளராக பெயர் குறிக்கப்படுவார். பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளாவிட்டால் பிரதான வேட்பாளர்களுள் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு பிரதிநிதிகளின் வாக்குக்கோரப்படும். உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வேட்பாளர் உப ஜனாதிபதி வேட் பாளரை அறிவிக்கவேண்டும்.

கட்டம் - 03

தேர்வாளர் கழகத்திற்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் - ஜனாதிபதித்தேர்தல் நடைபெறும் வருடத்தின் நவம்பர் மாதத்தில் இத்தேர்தல் நடைபெறும். தேர்வாளர் கழகத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 538 ஆகும். இவ்வெண்ணிக்கை காங்கிரஸின் 2 மன்றுகளினதும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமமானதாகும். தேர்தல் மாகாண மட்டத்திலேயே நடைபெறும். ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை அம் மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகியவற்றுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமானதாகும். வெற்றி பெறுபவர் சகல வாக்குகளையும் பெற்றுக்கொள்வார் என்ற அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறும். (Winner Takes all) இதன்படி ஒரு மாகாணத்தில் பெரும்பான்மை வாக்கு களைப் பெற்ற கட்சி அம்மாகாணத்துக்குரிய சகல உறுப்பினர்களையும் தனதாக்கிக்கொள்ளும். தோல்வியுறும் கட்சிக்கு எதுவும் கிடைக்கமாட்டாது.

கட்டம் -04

தேர்வாளர் கழகத்தின் உறுப்பினர்கள் ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களித்தல் - இத்தேர்தல் டிசம்பர் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை நடைபெறும். மாகாணத்தின் பிரதிநிதிகள் அம்மாகாணத்தின் தலைநகரில் கூடித் தமது வாக்குகளை அளிப்பர். பின்னர் வாக்குகள் எண்ணப்பட்டு முத்திரை இடப்பட்டு வாசிங்டன் நகருக்கு அனுப்பி வைக்கப்படும்.

கட்டம் - 05

பெறுபேற்றினை அறிவித்தல் - வாஷிங்டன் நகருக்குச் சகல வாக்குகளும் கிடைக்கப் பெற்ற பின்னர் காங்கிரஸின் இரு மன்றுகளின் உறுப்பினர்களின் முன்னால் செனட் சபையின் தலைவர் அவ்வாக்குகளை எண்ணி தேர்தல் முடிவினை அறிவிப்பார். வெற்றி பெறுபவர் கட்டாயமாக 269 வாக்குகளைப் பெறவேண்டும். எந்த அபேட்சகரும் தேர்வாளர் கழகத்தில் உரிய வாக்குகளைப் பெறாவிட்டால் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு வழங்கப்படும். அங்கு ஒவ்வொரு மாகாண அரசும் ஒரு வாக்கினைப் பெற்றுக்கொள்வதோடு 26 வாக்குகளை பெற்றுக்கொண்டவர் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவார். மேற்கூறியவாறு தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஜனவரி மாதம் 20ஆம் திகதி பிரதம நீதியரசர் முன்னால் சத்தியப்பிரமாணம் செய்து ஜனாதிபதிப் பதவியை ஏற்பார்.

### 5) சிவில் சமூகம்

சிவில் சமூகம் என்பது அரசாங்கம், குடும்பம், சந்தைத் தாபனங்கள் ஆகிய மூன்றையும் தவிர்ந்த சமூகத்தில் செயற்படும் சகல சமூகத்தாபனங்களின் கூட்டு மொத்தமே சிவில் சமூகம் எனப்படுகிறது. (London School of Economics) சிவில் சமூகம் பற்றி முன்வைத்த பொருள் விளக்கத்தின்படி "பங்கீடு செய்துகொண்ட நலன்கள், நோக்கங்கள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றின் மீது அதிகாரத்தைப் பிரயோகிக்காது ஒத்துழைப்புடன் செயற்படும் சமூகத்துறையே சிவில் சமூகம் என்று கோட்பாடு ரீதியாகக் கூறப்படுகிறது. இதன்படி, சிவில் சமூகத்துக்குரிய தாபன முறைமையைக் கோட்பாடு ரீதியாகப் பார்க்கும்போது அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் ஆகிய மூன்று வகையிலிருந்தும் வேறுபடுகிறது. எனினும், நடைமுறைப் பரப்பில் சிவில் சமூகம் மற்றும் அரசு, குடும்பம் மற்றும் சந்தை நிறுவனங்கள் என்பவற்றுக்குமிடையில் நிச்சயமான எல்லைகளை வரையறை செய்ய முடியாது. அவ்வாறு குறிப்பிடப்படும் எல்லைகள் தெளிவற்றதாகவும் சிக்கலானதாகவும் காணப்படுவதோடு வாதப்பிரதிவாதங்களுக்கும் உட்படும். சிவில் சமூகம் கொண்டுள்ள பல்வேறு செயற்பாட்டாளர்கள் வலைப்பின்னலில் நன்கொடை நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சன சமூக அமைப்புக்கள், சமூகக் குழுக்கள், பெண்கள் அமைப்புக்கள், சமய அமைப்புகள், பரஸ்பர துணை நல்கும் அமைப்புக்கள், சமூக இயக்கங்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், ஆலோசனைக் குழுக்கள் போன்ற சகல சிவில் அமைப்புக்களும் உள்ளடங்கும்''

இந்தப்பொருள் விளக்கத்தின் மூலம் சிவில் சமூகத்தோடு தொடர்பான பிரதான நான்கு பண்களை அடையாளப்படுத்தலாம்.

1. கூட்டுச் செயற்பாடுகள் - சிவில் சமூகத்தின் செயற்பாடு கூட்டு நோக்கித்திற்காக அன்றி தனிப்பட்ட நோக்கங்களுக்காகவோ நலன்களுக்காகவோ இடம்பெறமாட்டாது.
2. அதிகாரப் பிரயோகமின்மை - சிவில் சமூகம் அதிகாரத்தின் அடிப்படையில் அன்றி தன்னார்வ விருப்பு மற்றும் தேவையின் அடிப்படையிலேயே செயற்படுகிறது. மனிதர்கள் தமது சுய விருப்பின் அடிப்படையிலேயே சிவில் சமூகத்தோடு தொடர்புபடுகின்றனர். அதேபோன்று தமது சுயவிருப்பின் பெயரில் அதிலிருந்து விலகவும் முடியும்.
3. அடையாளம் - கோட்பாட்டு ரீதியாக சிவில் சமூகம் தனக்கே உரிய அடையாளத்தைக் கொண்டுள்ளது. அது அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து வேறுபட்டதாகும்.
4. ஆள்புலத்தை நிச்சயமாக அடையாளம் காணமுடியாமை - மேலே குறிப்பிட்ட அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து சிவில் சமூகத்தை எந்த ஆள்புல எல்லைகளின் அடிப்படையில் வேறுபடுத்தலாம் என்று நிச்சயமாக அடையாளம் காணமுடியாது.

சிவில் சமூகம் பற்றிய கருத்து பழைமை வாய்ந்ததாயினும் 20 ஆம் நூற்றாண்டில் இரண்டாம் அரைப்பகுதியில் மூன்றாம் உலக நாடுகளின் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி தொடர்பாக தோன்றிய பிரச்சினைகளோடு தற்காலத்தில் அதிகம் வலியுறுத்தப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் ஒரு பிரச்சினை ஜனநாயக ஆட்சி பலவீனம் அடைவதும் அதிகாரத்தைப்பெறும் ஆட்சியாளர்கள் தமது தனிப்பட்ட நலன்களை அரசாங்கத்தின் மீது செலுத்தி ஜனநாயகத்தின் பெயரால் அனைத்தாண்மையைக் கொண்டு நடத்துவதும் ஆகும். இரண்டாவது பண்பு, இயற்கை மற்றும் மனித வளங்கள் காணப்படினும் இந்த நாடுகள் பொருளாதார அபிவிருத்தியில் தோல்வி அடைந்துள்ளன. மூன்றாவது பண்பு, இந்த நாடுகளில் ஆட்சிமுறை ஊழல், முறைகேடு, வீண்விரயம், செயற்றிறன் இன்மை, உறவினர் கவனிப்பு பொறுப்பற்ற தன்மை போன்ற ஜனநாயகத்தின் எதிர்ப்பண்புகளைக் கொண்டுள்ளன. இந்தப் பலவீனங்களிலிருந்து ஆட்சி முறையை விடுவித்து நல்லாட்சியை எவ்வாறு கட்டியெழுப்பலாம்? இது தொடர்பாக ஏற்பட்ட ஒரு பிரதான தடை என்னவெனில், 3ஆம் உலகமக்கள்அரசியல் ரீதியான பின்னடைந்து காணப்படுவதாகும். இந்நாடுகளில் அரசியல் முறைமைகளைக் கற்கும்போது தென்பட்ட ஒரு விடயம் என்னவெனில் மக்களின் அரசியல் அறிவும் புரிந்துணர்வும் கீழ் மட்டத்தில் காணப்படுவதாகும். ஜனநாயக ஆட்சி என்றால் என்ன என்பது பற்றி மக்களுக்குள்ள அறிவு குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது. இந்த நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறை என்ற வகையில் மக்களை அரசியல் ரீதியாக பலப்படுத்த வேண்டும் என்பதாகும். இவ்விடயத்தில் சிவில் சமூகம் போதிய பங்களிப்பினை மேற்கொள்ளமுடியும் எனக்கருதப் பட்டதுடன் சிவில் சமூகம் பற்றிய கருத்து தாக்ககரமானதாக முன்னணிக்கு வந்தது. Almond மற்றும் Verba என்போர் தமது The Civil Culture என்ற நூலில் குறிப்பிட்டதன்படி சிவில் சமூக அமைப்புக்கள் மூலம் வாக்காளனை அதிக அறிவையும் புரிந்துணர்வையும் பெற்ற மனிதனாக மாற்றலாம். அதன் விளைவாக அம்மனிதன் வாக்களிக்கும்போது தர்க்கரீதியாகச் செயற்படுவான். அரசியல் செயன்முறையில் அதிகம் அதிகமாக ஈடுபடுவான். அதனால் ஆட்சியாளர் அதிக பொறுப்புடன் செயற்படத் தூண்டப்படுவார்.

இதன்படி 3ஆம் உலக நாடுகளில் நல்லாட்சியைக் கட்டியெழுப்பும்போது சிவில் சமூகத்தின் செயற்பாடு அதிகளவில் மாறுகின்றது என்று அண்மைக்காலத்தில் வேகமாகப் பரவியுள்ளது. உதாரணமாக, ஐ.நாடுகள் தாபனத்தின் சகஸ்ராப்த அறிக்கையில் குறிப்பிடுவதன்படி ''செயற்றிறன் மிக்க அரசாங்கத்துக்கு சிவில் சமூகத்தின் பலமான தொடர்பும் பங்கேற்பும் முக்கியமானதாகும்'' AusAid என்ற பெயரில் அவுஸ்திரேலிய அரசாங்கம் தயாரித்த அறிக்கையில் குறிப்பிடுவதன்படி "நல்லாட்சியை கட்டியெழுப்ப வேண்டுமாயின் கருத்து வெளியிடுவதற்கும் ஒழுங்கமைவதற்கும் ஆன சுதந்திரத்துடன் பலதன்மைச் சமூக முறை ஒன்று நிலவவேண்டும்.''

நல்லாட்சியைக் கட்டியெழுப்பிக் கொண்டுசெல்வதில் சிவில் சமூகம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தலாம்? பின்வரும் வழிமுறைகளில் அதனை மேற்கொள்ள முடியும்.

#### *1. சிவில் சமூகம் முரண்பட்ட ஒரு சக்தியாக செயற்படுவதன் மூலம் -*

அரசியல் அதி காரம், அதிகாரத்திலுள்ள சில்லோராட்சி வகுப்பின் தனியுரிமையாக மாறுவதனைத் தடுப்பதற்கு சிவில் சமூகம் ஒரு பலமான முரண்பாட்டுச் சக்தியாக செயற்பட முடியும் என்று சிவில் சமூகவாதிகள் கூறுகின்றனர்.அவர்களின் கருத்துப்படி சந்தை முறைப் பொருளாதாரத்தில் பொருளாதார அசமத்துவத்தைத் தடுக்க முடியாது என்றும் அதன் மூலம் அரசியல் அசமத்துவம் உருவாகும் என்றும் கூறுகின்றனர். இதன்படி சாதாரண மக்களைவிட செல்வந்தர்கள் அரசியல் செயல்முறையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவர். ஊடகத்தை விலைகொடுத்து வாங்குவதன் மூலம் பொதுஜன அபிப்பிராயத்தைத் தமக்குச் சாதகமாக அமையும் வகையில் ஒழுங்கு படுத்திக்கொள்வர். தேர்தல்களுக்கு நிதியுதவி வழங்குதல், அரசியல்வாதிகளுக்கு லஞ்சம் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மூலம் அரசியல் அதிகாரத்தைத் தமக்குப் பொருந்தும் வகையில் ஒழுங்குபடுத்திக்கொள்வர். தமக்குப் பாதகமான சட்டங்கள் பிறப்பிக்கப்படும்போது சவால் விடுப்பதற்குத் திறமையான வழக்கறிஞர்களைப் பணம் செலுத்திப்பெறுவர். தமக்குச் சாதகமான சட்டங்களை உரு வாக்கிக்கொள்ள அரசியல்வாதிகள் மீது தாக்கம்செலுத்துவர்.

சாதாரண மனிதர்களால் இந்நிலையைத் தனியாக எதிர்கொள்ள முடியாது. ஏனெனில், அவர்களிடம் அதிகாரம் காணப்படாமை ஆகும். அவர்களிடம் உள்ள வளங்களை ஒன்றுதிரட்ட முடியும். அதன் மூலம் அரசியல்வாதிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அநீதிக்கு எதிராக கூட்டாகச் செயற்பட முடியும். சுருங்கக்கூறின் நல்லாட்சி முறையற்றதாக மாறுவதனைத் தடுக்கும்முறைப்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியும்.

#### *2. ஆட்சியின் காவல்நாயாகச் செயற்படுதல்.*

அரசாங்கத்தின் செயற்பாட்டின் மீது கண்விழிப்புடன் இருக்கும் ஒரு காவல்நாயாகச் செயற்பட்டு நல்லாட்சியைப் பாதுகாக்கும் சக்தி சிவில் சமூகத்திடம் காணப்படுகிறது. ஊழல்மிக்க அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கும், மனித உரிமைகளை மீறுவதற்கும், அடக்குமுறைச் சட்டங்களை பிறப்பிப்பதற்கும், எதிராகக் கிளர்ந்து எழுவதன் மூலம் ஒரு காவல்நாய்க்குரிய பணியை சிவில் சமூகம் ஆற்ற முடியும். மேலும் சமூக சேவைகளையும் சமூகத்தின் பொதுப் பண்டங்களையும் வழங்குமாறு அரசாங்கத்தின் மீது தாக்கம்செலுத்தும் திறனும் சிவில் சமூகத்திடம் காணப்படுகிறது.

இந்த இரு பங்களிப்புகளையும் விட சிவில்சமூகம் மனிதர்களைக் கூட்டுச் சமூக வாழ்க் கைக்குப் பயிற்றுவிக்கிறது என்றும் கூறப்படுகிறது. மனிதர்களின் கூட்டுச்சமூக உணர்வை விருத்தி செய்வதற்கும் சிறந்த குடியுரிமை வாழ்க்கையைக் கழிப்பதற்குமான பயிற்சியினைச் சிவில் சமூகம் வழங்குகிறது. அத்துடன் சேய்மையிலுள்ளவர்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு சிவில் சமூகம் துணைபுரிகிறது. இந்த மொத்தச் செயன்முறையும் ஜனநாயகத்தின் சிறப்பான இருப்புக்கும் செயற்பாட்டிற்கும் அவசியமாகிறது.

---

## க. பொ.த உயர்தர மாணவர்களுக்கான

*புள்ளி வழங்கும் திட்டம்- அரச பரீட்சை வினாத்தாள் ஒகஸ்ட்-2008*

# அரசியல் மூலத்தத்துவங்கள்-02

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

* பகுதி-1 நாற்பது வினாக்களைக் கொண்டது.
* எல்லா வினாக்களுக்கும் விடை தருக. ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வழங்கப் படும்.
* பரீட்சார்த்திகள் பகுதி-1 இற்குரிய விடைகளை இத் தாளிலேயே எழுதி, பகுதி-11 இற்கான விடைத்தாளுடன் இணைத்து ஒப்படைக்குக.
* ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
* பரீட்சார்த்திகள் பென்சிலினால் விடைகளை எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

### பகுதி - 1

* 01-10 வரையுள்ள வினாக்களில் இடம்பெறும் ஒரு கூற்று வினாவின் தலைப்புக்குப் பொருத்த மற்றதாகும். பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க.

01. இலங்கையில் பிரித்தானியக் குடியேற்ற நாட்டாட்சியின் கீழ்,
    1) மானிய அரசு காலனித்துவமாக மாற்றமுற்றது.
    2) பண்டமாற்றுப் பொருளாதாரம் சந்தைப் பொருளாதாரமாக மாற்றமுற்றது.
    3) ஆட்சிமுறை முடியாட்சியிலிருந்து ஜனநாயக முறைக்கு மாற்றமுற்றது.
    4) சமூக முறைமையானது அடிமை முறையிலிருந்து மானிய முறையினதாக மாற்றமுற்றது.

(............)

02. 1832 கோல்புறூக்-கமரன் சிபாரிசுகளில் உள்ளடக்கப்பட்டவை,
    1) தேசாதிபதியின் அதிகாரங்களை அதிகரித்தல்.
    2) கண்டி மற்றும் கரையோர மாகாணங்களை இணைத்தல்.
    3) இலங்கையர்களை சிவில் சேவைக்கு அனுமதித்தல்.
    4) இராஜகாரிய முறையின் ஒழிப்பு.

(............)

03. 1832 கமரன் சிபாரிசுகளில் உள்ளடக்கப்பட்டவை,
    1) ஒற்றை நீதிமுறையினைத் தாபித்தமை.
    2) ஐரோப்பியர் தொடர்பாக உயர் நீதிமன்றம் மேற்கொண்ட பிரத்தியேகமான சிவில் வழக்கு நியாயாதிக்கத்தை ஒழித்தமை.
    3) சிவில் மற்றும் குற்றவியல் மேன்முறையீடுகள் மீது உயர் நீதிமன்றுக்கு அதிகாரம் வழங்கப் பட்டமை.
    4) சிவில் நீதிமன்றுகள் தொடர்பாக தேசாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டமை.

(............)

04. கோல்புறூக்-கமரன் சீர்திருத்தங்கள்,
    1) ஐக்கிய நிருவாக முறையின் அபிவிருத்திக்கு வழியமைத்தன.
    2) நிலவுடைமையைப் பெற்ற விவசாய வகுப்பின் அபிவிருத்திக்கு வழியமைத்தன.
    3) சுதந்திரமான நீதித்துறையின் அபிவிருத்திக்கு வழியமைத்தன.
    4) முதலாளித்துவ பொருளாதார முறைமையின் அபிவிருத்திக்கு வழியமைத்தன.

(............)

***தொடர்ச்சி எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வெளிவரும்.....***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org